
கல்கி
நவம்பர் 20,1955
4 அணா
S. Rajam

அவனுடைய ஸ்னானத்தைப்பற்றிகூட திட்டத்தில் இருக்கிறது!



ஆம், சிறுவன் ராஜு, மற்றும் அவனைப்போல் லட்சக்கணக்கான சிறுவர்களை, சுத்தமாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க என்னென்ன அவசியம் செய்யவேண்டுமோ, அவ்வளவும் நாட்டிற்கு நலனை அளிக்கும் திட்டத்தில் இருக்கிறது. இத்திட்டத்தில் லீவர் பிரதர்ஸ் கம்பெனியின் பொறுப்பு என்னவென்றால் எல்லோரும் வாங்குவதற்கேற்ற நிர்ணயிக்கப்பட்ட விலையில் சிறந்த சோப்புகளை செய்து எங்கும் கிடைக்குமாறு செய்வதுதான்.

இக்குறிக்கோளை அடைய இம்மாபெரும் திட்டத்தில் லீவர்ஸ் கம்பெனிக்கு கோடிக்கணக்கில் கூட்டாளிகள் உள்ளனர்: மூலப்பொருள்களை உண்டாக்கும் விவசாயி; போக்கு வரவு சாதனங்களை செலுத்தி மூலப்பொருள்களையும், செய்யப்பட்ட சரக்குகளையும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லுவதற்கு உதவும் அனேக தொழிலாளிகள்; தங்களுடைய திறனினாலும், புத்தியினாலும் பிரபலமான சோப்புகளான ஸன்லைட், லைப்பாய், லக்ஸ் டாய்லட், லக்ஸ், ரின்ஸோ முதலியவைகளை செய்வதற்கு உதவும் இந்தியாவின் பல பாகத்திலுள்ள ஆண், பெண் அனைவரும்; இந்தியா எங்கும் இச்சரக்குகளை வினியோகிக்கும் பெரிய விற்பனையாளர், சிறிய கடைக்காரர்; இதற்கும் மேலாக இவைகளை பூர்ண நம்பிக்கையுடன் வாங்கும் பொது மக்கள்; இவர்கள் அனைவரும் இந்நாட்டின் ஆரோக்கியத்தையும், சுகாதார வாழ்வையும் உயர்த்த எடுத்துக்கொண்டுள்ள ஒரு பெரும் திட்டத்தின் கூட்டாளிகள்.

லீவர் பிரதர்ஸ் (இந்தியா) லிமிடெட்

ஸன்லைட் சோப், லைப்பாய் சோப், லக்ஸ் டாய்லட் சோப்,
லக்ஸ், ரின்ஸோ தயாரிப்பவர்கள்

L. Com. 82-50 TM

மலர்-15 இதழ்-16

கல்கி
பொருளடக்கம்

மன்மத ௵ கார்த்திகை 4

1955 நவம்பர் 20

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 15 | தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற | மன்மத ஆண்டு
இதழ் 16 | தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | கார்த்திகை 4

சென்னைமா நகரில் ஜனாதிபதி

சென்ற வாரம் தீபாவளிப் பண்டிகையன்று சென்னைமா நகரில் உள்ள தமிழ்ப் பெருமக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு கிடைத்தது.

குடியரசு இந்தியாவின் ஜனாதிபதி பாபு ராஜேந்திரப் பிரசாதைச் சென்னை மகா ஜனங்கள் குதூகலத்துடன் வரவேற்று உபசரித்து மகிழ்ந்தார்கள்.

ராஜபவனில் நிகழ்ந்த தீபாவளிப் பண்டிகை வைபவத்தில் ஜனாதிபதியும் கலந்து கொண்டு, விழாவைச் சிறப்பித்தார்.

அப்போது நூற்றுக்கணக்கான ஏழைக் குழந்தைகளுக்கும் அனாதைகளுக்கும் ஜனாதிபதி உடைகளும் தின்பண்டங்களும் வழங்கிய காட்சியை ஏராளமானவர்கள் கண்டு களித்தனர்.

மற்றும் நமது ஜனாதிபதி கலந்து கொண்டு சிறப்பித்த வைபவங்களில் குரோம் பேட்டை தொழில் நுட்பக் கல்லூரி ஸ்தாபகரான காலஞ்சென்ற ஸ்ரீ வி. ராஜம் அவர் களின் சிலைத் திறப்பு விழாவும், கம்பர் விழாவும் முக்கியமானவை.

ராஜாஜி மண்டபத்தில் எட்டாவது கம்பர் மகாநாட்டை ஆரம்பித்து வைத்த ராஷ்டிரபதி, கம்ப ராமாயணத்தை ஹிந்தியில் மொழிபெயர்க்க வேண்டிய அவசி யத்தை வற்புறுத்தினார்.

அவ்விதம் செய்தால், கம்பர் கவி நயத்தையும் பக்தியையும் மாத்திரமின்றி, தமிழ் மொழியின் பெருமையையும் வட இந்தியர்கள் அறிந்து கொள்வது சாத்திய மாகும் என்று குறிப்பிட்டார்.

* * * *

ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத், தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் பேசியபோது சில அருமையான கருத்துக்களை வெளியிட்டார்:

"இந்தியாவில் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. பண்டைய கலாசாரப் போக்குகள், பழைய கருத்துக்கள் மாத்திரமன்றி, புதிய விஷயங்கள், புதிய எண்ணங்கள் எல்லாமே அடியோடு மாறும் தறுவாயில் இருந்து வருகின்றன.

பண்டைய வழிகளைக் கண்மூடித்தனமாகக் கை விட்டு விடாமல், புதிய நிலைமைக்குத் தகுந்தவாறு சீர்ப்படுத்திக் கொள்வதா? அல்லது பாரத நாட்டின் பரம்பரைச் சொத்துக்களான பண்டைய போக்குகளைக் கை விட்டு விட்டு, நமக்குச் சொந்த மில்லாத புதிய வழிகளைக் கடைப்பிடிப்பதா? என்பதை இப்போது நாம் முடிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பாரத நாட்டின் பரம்பரைச் செல்வமான ஆத்மிக சக்தியையும் நல்லொழுக்கத்தையும் நாம் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும். அவற்றின் மூலம்தான் நாம் பல கஷ்டங்களையும் வென்று, இன்றைய உன்னத நிலையை அடைவது சாத்தியமாயிற்று.

காந்தி மகானின் ஜீவிய காலத்தில் மிகவும் அத்தியாவசியமாகவும் தேவையாகவும் இருந்த அவ் விஷயங்களை, காந்திஜி மறைந்த பின் இவ்வளவு சீக்கிரத்தில் நாம் மறந்து விட்டது வியப்பாக இருக்கிறது.

எனவே, பல நூற்றாண்டுகளாக நமது வாழ்க்கைக்கும் கலாசாரத்துக்கும் அடிப்படை யாக இருந்த ஆத்மிகச் செல்வத்தைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

இந்தச் செல்வம் உலகத்தில் உள்ள வேறு எந்த நாட்டிலும் இல்லை. நம்மிடமிருந்து உலகம் எதிர்பார்ப்பது, நாம் உலகுக்கு வழங்கக் கூடியது இதுதான்."

அகில உலகத்தையும் நடுங்க வைக்க ராட்சஸ குண்டுகளைக் குவித்து வரும் நாடுகள் இன்று பாரத நாட்டின்மீது மதிப்பு வைத்திருப்பதற்கு, இந்தியாவின் ஆத்ம சக்தியும் அந்தரங்க சுத்தியும்தான் காரணம்.

எனவே, இந்தியாவின் பண்டையக் கலாசார அறிவுச் செல்வங்களை நன்கு பரிசீலனை செய்து புதிய நிலைமைக்குத் தகுந்தவாறு மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டுமே யன்றி, அவற்றை அடியோடு கைவிட முற்படுவது இந்தியாவின் இணையற்ற ஆத்ம சக்தியை இழப்பதாக முடியும்.

ராஷ்டிரபதியின் பொன்மொழிகள் அத்தகைய விபரீத நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்குற்ற எச்சரிக்கையாகும்.

பழையன அடியோடு மறைந்து புதியன உருவாவதே முன்னேற்றத்தின் அடிப்படை என்று கருதுவோர் ராஷ்டிரபதியின் உபதேச உரைகளைச் சிந்தித்துப் பார்ப்பார்களாக!

வடமொழி மகாநாடு

சமீபத்தில் திருப்பதியில் அகில இந்திய ஸம்ஸ்கிருத பரிஷத் நடைபெற்றது. இந்த மகாநாட்டுக்கு நமது ஜனாதிபதி ராஜன் பாபு தலைமை தாங்கிச் சிறப்பித்தார். ஆந்திர கவர்னர் ஸம்ஸ்கிருதத்திலேயே ஜனாதிபதிக்கு வரவேற்புக் கூறினார். உத்தரப் பிரதேச கவர்னர் கே. எம். முன்ஷி, ஸம்ஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்கு ஜனாதிபதி செய்துள்ள தொண்டைப் பாராட்டி ஆங்கிலத்தில் பேசினார். இந்த மகாநாட்டுக்கு, தேசத்தின் பல பகுதிகளிலிருந்தும் பண்டிதர்கள் வந்திருந்து சிறப்பித்தார்கள்.

ஸ்ரீ கே. எம். முன்ஷி ஓர் விஷயத்தை நன்றாகச் சொன்னார். ஸம்ஸ்கிருத மொழியில் ஆத்மீகத் துறை நூல்கள் மட்டுமல்ல, வைத்தியம், கணிதம், வானசாஸ்திரம், சோதிடம், பொறி இயல் சாஸ்திரம், வீடு கட்டும் சாஸ்திரம் ஆகிய பல சாஸ்திரங்கள் இருக்கின்றன. இவற்றை ஜெர்மன், பிரஞ்சு நாட்டவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதை நாம் அவ்வளவாகப் பயன் படுத்திக் கொள்ளவில்லை. ஸம்ஸ்கிருத மொழி பாரத நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் அடிமை வாழ்விலிருந்த காலத்தில் உதாசீனப்படுத்தப் பட்டு வந்திருக்கிறது. சுதந்திரம் பெற்ற பின் பல துறைகளில் விழிப்பும் எழுச்சியும் பெற்றுப் பல காரியங்களைச் சாதித்து வந்திருக்கிறோம். அதேமுறையில் சமஸ்கிருத மொழியினிடத்துப் பொதிந்துள்ள மாணிக்கங்களைப் பொது ஜனங்களுக்குப் பயன்படுத்தும் வகையில் இம்மகாநாட்டில் சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்று குருகுல முறையில் பாடசாலைகளைத் தோற்றுவித்து அங்கு மாணவர்களுக்கு ஸம்ஸ்கிருதப் பயிற்சியுடன் உத்தியோகப் படிப்பும் பெற வசதியளிக்க வேண்டும் என்பது.

ஸம்ஸ்கிருதம் இன்று பேச்சு வழக்கில் இல்லாத பாஷை. ஆயினும் இம்மொழியிலிருந்து பல பாஷைகள் நல்ல வளம் பெற்றிருக்கின்றன. பரிஷத்தின் தீர்மானங்கள் விரைவில் நடைமுறைக்கு வந்தால் நாட்டில் சாஸ்திர அறிவு விருத்தியாகும் என்பதில் சந்தேகமில்லை.

ருஷ்யத் தலைவர்களுக்கு வரவேற்பு

பாரத நாட்டுக்கு ருஷ்யத் தலைவர்கள் புல்கானினும், குருஷ்சேவும் விஜயம் செய்கிறார்கள் என்ற செய்தி முதன் முதலில் சில மாதங்களுக்கு முன்பு வெளியாயிற்று. அப்போதிலிருந்தே பொது ஜனங்களிடையே மேற்படி தலைவர்களை வரவேற்கத் தனி உற்சாகமே இருந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம் நமது அருமைத் தலைவர் நேருஜிக்கு ருஷ்ய அரசாங்கமும் ருஷ்ய மக்களும் அமோகமான குதூகலத்துடன் அளித்த வரவேற்பே. நம் நாட்டு மக்களும் இவ்விரு ருஷ்யத் தலைவர்களுக்கும் அமோகமான வரவேற்பு அளிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

நேருஜி ருஷ்யாவுக்கு விஜயம் செய்தபோது மாபெரும் தொழிற் கூடங்களையும் கூட்டுப் பண்ணைகளையும் காண்பித்தார்கள். அப்படியெல்லாம் ருஷ்யத் தலைவர்கள் மலைத்து வியக்கத் தக்க பிரும்மாண்டமான தொழிற்கூடங்கள் நம் நாட்டில் இல்லை. ஆயினும் நம் நேருஜியின் செல்வாக்கு உலக அரசியலில் மிகுந்த சக்தி வாய்ந்ததாகக் காணப்படுகிறது. இதற்குக் காரணம் நமது ஆத்ம பலமே. காந்திமகான் காண்பித்த, "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்ய வேண்டும்" என்ற வாழ்வு முறையில் பெற்ற பலமே நம் செல்வாக்கை உயர்த்தியுள்ளது! இப்பண்பு நம் நாட்டில் தேசம் பூராவிலும் வியாபித்துள்ள பண்பு என்பதை இந்த ருஷ்யத் தலைவர்கள் உணர்ந்து சென்றார்களானால் அதைவிடப் பெருமை நமக்கு வேறொன்றும் இல்லை.

சென்னைக்கு இம்மாதம் 28-ம் தேதி ருஷ்யத் தலைவர்கள் வருகிறார்கள். பெரம்பூர் ரயில்கோச் கட்டும் தொழிற்சாலை, கிண்டி தோல் ஆராய்ச்சி சாலை, மகாபலிபுரம் முதலிய இடங்களுக்கும் போய் வருவார்கள் என்று அறிகிறோம்.

அவர்கள் வரவு நல்வரவாகுக!

பாலர் பகுதியில் ராஜாஜி எழுதும் கதைகள்

ஈசாப் கதைகளைப் போன்று நூதனமாக ராஜாஜி கற்பனை செய்து எழுதும் புதிய கட்டுக் கதைகள்.

டிசம்பர் 11-ந்தேதி 'கல்கி' இதழிலிருந்து வாரந்தோறும் ஒரு கதை வெளியாகும்

வாழை தொலைந்தது!



குஜராத், மகாராஷ்டிரம், பம்பாய் நகரம் என்று பம்பாயை மூன்று ராஜ்யங்களாகப் பிரித்து அமைக்கக் காரியக் கமிட்டி யோசனை கூறியிருக்கிறது.

என்ன சேதி?

பி. ஸி. ஜி

சமீபத்தில் வெளிநாட்டிலிருந்து வந்து இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்த டாக்டர்களின் கூட்டத்தில் க்ஷய வியாதி நிபுணரான டாக்டர் ஜேகப் போமிரான்த்ஸ் என்பவர் அமெரிக்காவில் பிலடெல்பியா நகரத்தில் பிரபல க்ஷய நோய் வைத்தியர். இவர் சென்னையில் தாமதித்த பிறகு சென்னையிலுள்ள 'கௌன்ஸில் ஆப் பப்ளிக் அபர்ஸ்' காரியதரிசி வி. கே. டன். சாரி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அது வருமாறு :—

வெஸ்டெண்டு ஹோட்டல்,
பங்களூர், நவ 5, 1955

அன்புமிக்க சாரி அவர்களுக்கு,

உங்கள் அன்பார்ந்த கடிதத்துக்குச் சீக்கிரமாகப் பதில் எழுதாமைக்குத் தயவு செய்து மன்னிக்கவும். தங்கள் ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களைப் பார்த்து என் வணக்கங்களைச் செலுத்த வேண்டும் என்று நினைத்தேன். இயலவில்லை. அவருடைய சிறு புஸ்தகத்தை (பி. ஸி. ஜி) முழுதும் வாசித்தேன். இதுவரை, வைத்திய சம்பந்தமான விஷயத்தைப் பற்றி வைத்தியரல்லாத ஒருவர் எழுதிய] புஸ்தகங்களில் நான் படித்துள்ள நூல்களில் எல்லாம் இதுதான் தலைசிறந்த ஆராய்ச்சிப் புலமை மிகுந்த புஸ்தகமாக விளங்குகிறது. இதைப் படித்த பிறகுதான் உண்மையிலே எவ்வளவு அரிய மதி நுட்பம் அவருக்கு இருக்கிறது என்பதை யுணர்ந்தேன். அவருடைய இத்தகைய அறிவுதான் உலக மக்கள் அனைவருடைய அன்பையும் மதிப்பையும் கவர்ந்து விடுகிறது. அவர் உடல் நலக் குறைவுடன் இருக்கும் இச் சமயத்தில் நானும் போய்ச் சேர்ந்து அவருக்குச் சிரமம் உண்டாக்கக் கூடாது என்று நினைத்துதான் நான் பார்க்கவில்லை.

எனது எண்ணங்களையும் அவரிடம் கொண்டுள்ள மதிப்பு மரியாதையையும் தயவு செய்து அவருக்குத் தெரிவியுங்கள். அவர் உடல் நலம் பெற இறைவனை அந்தரங்க சுத்தியுடன் பிரார்த்திக்கிறேன் என்பதையும் தெரிவியுங்கள். நான் அவரைச் சந்திப்பதற்காக என் சார்பில் நீங்கள் முயற்சி செய்ததற்கு நன்றி.

தங்கள்,
ஜேகப் போமிரான்த்ஸ்

குறிப்பு: பி. ஸி. ஜி சம்பந்தமாக என் அபிப்பிராயத்தைச் சொல்லவே வேண்டியதில்லை. காலம், பணம், முயற்சி எல்லாம் வியர்த்தமாகும் ஒரு இயக்கமே பி. ஸி. ஜி இயக்கம். நீங்கள் விரும்பினால், என்னுடைய இந்தக் கருத்தை மேற்கோளாகவே எடுத்துச் சொல்லலாம்.

நம் ஊர் வைத்திய நிபுணர்கள் மௌனம் சாதிப்பதற்கு இடையில் இது கவனிக்க வேண்டிய ஒரு நற்செய்தி.



திருவாசகமணி என்ற பட்டம் பெற்றவரும், சமயத்தும் தமிழும் இணைந்த சிறந்த தொண்டுகள் புரிந்துள்ளவரும், நல்ல பேச்சாளரும், எழுத்தாளரும், கவிஞருமான திரு கே.எம். பாலசுப்ரமணியம் அவர்கள் ஐந்தாண்டுத் திட்டத்தின் தென்பிராந்திய பிரசார அதிகாரியாக இந்தியசர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தியாகம்

மனைவிக்காக ராஜ்யத்தை விட்டார். யார்? ஆங்கில ராஜகுமாரர் எட்டாவது எட்வர்டு. 1936-வது ஆண்டில் ஐந்தாவது ஜியார்ஜ் இறந்தவுடன் ஜனவரி மாதத்தில் சிம்மாசனம் ஏறினார். அந்த வருஷம் டிஸம்பர் மாதத்தில் தான் காதலித்த பெண்மணியை விட்டுவிடப் பிரியப்படாமல், ராஜ்யத்தைத் துறந்து விட்டார். தம்பி ஆறாவது ஜியார்ஜுக்கு அரசு பதவியைக் கொடுத்துவிட்டு, காதலித்த பெண்மணியை 1937-வது ஆண்டு ஜூன் மாதத்தில் விவாகம் செய்து கொண்டு தேசாந்தரம் சென்றார். ராமசந்திரனைப் பற்றி உத்தர ராமாயணத்தில் சொல்லுவது என்னவென்றால் தன் காதல் மனைவியை, ராஜ்யத்தில் கிளம்பிய அபவாதத்தைக் கருதிக் காட்டுக்கு அனுப்பி விட்டான் என்று. ராமாயணத்தை பக்தியுடன் பாராயணம் செய்பவர்கள் கூட இந்தக் காண்டத்தைப் படிப்பதில்லை.

இந்த வருஷம் மறுபடி ஒரு உத்தர ராமாயணம் நடந்து விட்டது. எட்டாவது எட்வர்டு துறந்த ராஜ்யத்திலேயே, அதே ராஜ குடும்பத்தில் நிகழ்ந்தது. மார்கரெட் ராஜகுமாரி தான் காதலித்த புருஷனைத் துறந்தாள். சிம்மாசனம் பெறுவதற்காக அல்ல. ராஜ வம்சத்துக்கு அபவாதத் தடை இருக்கலாகாது. ஒரு வேளை ராஜ்ய பாரம் இவளுக்கு ஏற்படக் கூடும். ஆதலால் இவள் தான் காதலித்த புருஷனை விவாகம் செய்து கொள்ளக் கூடாது என்று நடைமுறையில் இருந்த ஆசாரத்துக்குப் பயந்து காதலைத் துறந்தாள். ராஜ்ய தருமத்துக்காக, சம்பிரதாயத்துக்



சென்னை கம்பர் கழகத்தின் சார்பில் ஒரு வாரமாகச் சென்னையின் பல பேட்டைகளிலும் கம்பர் விழா கொண்டாடப்பட்டது. கம்பரின் கவிதைச் சிறப்பை எடுத்து இயம்பும் கூட்டங்கள் பிரதிதினமும் நடைபெற்றன. இவ்விழாவைத் தலைவர் ராஜாஜி எழும்பூர் ஸாகேத நிலையத்தில் துவக்கி வைத்தார். 'கல்கி' ஆசிரியர் சோமு, ஸ்ரீமதி இந்திரா ஆகியோர் அன்று பேசினார்கள். தீபாவளி தினத்தன்று சென்னை முதலமைச்சர் திரு காமராஜர் கம்பர் கலைக் கண் காட்சியைத் திறந்து வைத்தார். திரு பக்தவத்சலம், திரு ஸி. சுப்ரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். பதினாலாம் தேதி யன்று ஜனாதிபதி ராஜன்பாபு விழாவைத் துவக்கி வைத்தார். திரு ஏ. ஸி. பால்நாடார் தலைமையுரை நிகழ்த்தினார். மந்திரி பக்தவத்ஸலம் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. அ. சீனிவாசராகவன் அவர்கள் கம்பனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட நூலை ஜனாதிபதி ராஜன்பாபுவுக்குச் சமர்ப்பித்தார். கம்பர் கழகக் காரியதரிசி நன்றியுரை கூற விழா இனிது முடிந்தது. மேலே உள்ள படத்தில் துவக்க விழாக் காட்சிகளைக் காணலாம். இந்த விழா சம்பந்தமான இன்னும் சில காட்சிகள் அடுத்த இதழில் வெளியாகும்.

காக, காதலித்த புருஷனை விட்டு விட்டுத் துயரத்தை மணந்தாள்.

பழைய நாட்களின் தரும சங்கடங்கள் இந்த நாட்களிலும் நடைபெற்று வருகின்றன. ஒருவிதம் முடிந்தாலும் வியப்பு. மறுவிதம் முடிந்தாலும் வியப்பே. இரு விதத்திலும் பெருந்தன்மை இருக்கிறது. இரண்டுக்கும் பொதுவான தத்துவம் தியாகம். சிலசமயம் தியாகம் காதலைத் தாக்கும், சிலசமயம் ராஜபதவியைத் தாக்கும். எவ்வாறாயினும் தியாகமே பெருமைப் படக் கூடிய பொருள்.

புது ஏற்பாடு

தென் பேரிராஜ்யத்தைப் பற்றித் தில்லியில் பேச்சொன்றும் இளம்பவில்லை என்று நமது காங்கிரஸ் தலைவர் அன்று நிருபர்களிடம் செய்தி தந்தார். யாருக்கு அக்கறையோ அவர்கள் பேசாமல் இருந்தால், மற்றவர்களா பேசுவார்கள்? நஷ்டம் அடையப் போகிறவர்கள் சும்மா இருந்தால், அந்தப் பொறுப்பை வேறு யாரும் எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

* "உணங்கல் கெடக் கழுதை
உதடாட்டம் கண் டென்பயன்?"

என்றார் ஒரு பாசுரத்தில் நம்மாழ்வார். காயப் போட்டிருக்கும் நெல்லைக் கழுதை வந்து தின்று கொண்டிருக்கிறது. காவலிருக்கிறவன் அதைக் கவனிக்காமல் கழுதையின் உதடு ஆட்டத்தைக் கண்டு அந்த விநோதத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறான். அதில் என்ன பயன்? இது அந்த அடியின் பொருள்.

* திருவாய் மொழி 4—6—7


அட்டைப்பட விளக்கம்


தாமரைத் தடாகம்

தாமரை முகம், தாமரைக் கண்கள், தாமரைக் கரம், தாமரைப் பாதம் என்றெல்லாம் தாமரையோடு சேர்த்தே அழகைக் கண்டு வியந்தார்கள் கவிஞர்கள். தாமரைத் தடாகத்திலே இந்த அழகுத் தத்துவத்தை மலரச் செய்து, காதலர் இருவரோடு சேர்த்து இந்த இதழின் அட்டையிலே வர்ண ஓவியமாகத் தருகிறார் ஓவியர் ராஜம்.

பம்பாய்

லண்டன்





பிரயாணத்தை 24 மணி நேரத்திற்குள்ளாகவே
பி. ஓ. ஏ. ஸி.யின் முதல் வகுப்பு 'மெஜஸ்டிக்' சர்வீஸ் மூலம் செய்யுங்கள்.

நீங்கள் பி. ஓ. ஏ. ஸி.யின் முதல் வகுப்பு 'மெஜஸ்டிக்' சர்வீஸ் மூலம் பறந்து செல்லும் பொழுது அதன் வேகம், சுகம், நம்பிக்கை முதலியவற்றை ரசிப்பீர்கள். உலகம் பூராவும் நம்பிக்கையடைந்த நான்கு இஞ்சின்கள் பூட்டப் பெற்ற கான்ஸ்டலேஷன்கள், முழுதும் வாயு அழுத்தம் சம நிலைப் படுத்தப்பட்டவை. இஷ்டம் போல் உட்காரும் ஆசனத்தை அமைத்துக் கொண்டு அமர்ந்து போக வசதி. ருசியுள்ள இலவச ஆகாரம், பானம் தவிர பகல், இரவு எந்நேரமாயினும் வினயமான பணிவிடை உங்களுக்கு பிரயாணத்தில் அளிக்கப்படுகின்றன. குறைந்த ஆப்-ஸீஸன் டூரிஸ்ட் கட்டணத்தில் பி. ஓ. ஏ. ஸி.யின் 'கோரோனெட்' டூரிஸ்ட் சர்வீஸ் மூலம் கூட பறந்து செல்லக் கூடும். பம்பாயில் பி. ஓ. ஏ. ஸி. சர்வீஸ்களுக்கு உடனடியாகவே இணைப்பு வசதிகள் இருக்கின்றன.

விவரங்களுக்கு உங்கள் உள்ளூர் ஏஜெண்டிடமோ அல்லது பி. ஓ. ஏ. ஸி. 35/4 மவுண்ட் ரோட், மதராஸ் 2, டெலிபோன் 85394 இவர்களைக் கேளுங்கள்.

மதராஸ் ▶ லண்டன்

முதல் வகுப்பு ஒரு வழிக் கட்டணம் ரூ. 2,430
போக வரக் கட்டணம் ரூ. 4,389

பி. ஓ. ஏ. ஸி. உங்கள் நலத்தைக் கருதி சேவை செய்கிறது

FLY B·O·A·C

பி. ஓ. ஏ. ஸி. விமானம் மூலம் பறந்து செல்லுங்கள்

பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏர்வேஸ் கார்பரேஷன்

பெருந்தீனியால் பயனில்லை... சத்துள்ளதா என்பதை கவனியுங்கள்



ஒரு தட்டு நிறைய குவிக்கப்பட்ட உணவை சாப்பிடுவதால் குழந்தை பூரண ஆரோக்கியத்துடன் இருப்பதாக கருதுவதற்கில்லை. உங்களது குழந்தை அதிகமாக சாப்பிடலாம். இருந்தாலும், சரியான போஷாக்குகள் இல்லாமல் இருப்பதற்கான அறிகுறிகள் காணப்படும். சரியான வளர்ச்சியின்மை, மெல்லிய தோற்றம், அசுத்தமான பற்கள், அடிக்கடி ஜலதோஷத்தால் பீடிக்கப்படுதல் — இவைகள் யாவும் அவன் உண்ணும் உணவில் போதுமான விட்டமின் சத்துக்கள் இல்லையென்பதை எடுத்துக் காட்டுகிறது.

இயற்கையாகவே A & D விட்டமின் சத்துக்கள் கொண்ட அடமின் (இறுக்கப்பட்டது) கொடுத்து அவனது வளர்ச்சியைக் கவனியுங்கள். பருத்து உருண்டையான கன்னங்கள், ஆரோக்கியமான தோற்றம்— வியாதிகளை எதிர்க்கும் சக்தி இவையெல்லாம் காணலாம்.

எம். ஜி. பி. ஷார்க் லிவர் ஆயில் – விலை மிகக் குறைவு:
அதிகமான போஷாக்கு அளிக்கக்கூடிய உணவு

அடமின்

MADRAS GOVERNMENT · MGB · BRAND

அளவு படுத்தப் பட்டது

பிஸ்கிட்	காப்ஸ்யூல்கள்
விட்டமின் A 12,000 I.U. /Gm	விட்டமின் - A 6,000 I. U.
விட்டமின் D 1,000 I.U. /Gm	விட்டமின் - D 1,000 I. U.

ஷார்க் லிவர் ஆயில்

அளவு படுத்தப் பட்டது

ஒவ்வொரு கிராமிலும்

விட்டமின் A 1,500 I. U.

விட்டமின் D 100 I. U.


கவர்ன்மெண்ட் ஆயில் பாக்டரி

கோழிக்கோடு

சென்னை சர்க்கார் கைத்தொழில் & வியாபார இலாக்காவின் ஒரு பகுதி



கிராமத்து நிலம் கிராமத்துக்கே சொந்தம்



அன்று ஒரிஸ்ஸா ராஜ்யத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற தலைவர்கள், காங்கிரஸ்காரர்கள் பிரஜா சோஷலிஸ்ட்டுகள், மந்திரிகள் யாவரும் கூடி வினோபா அடிகளுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். அன்றைய விஷயம் தேசத்தின் நிலப் பிரச்னை, பூதான வேள்வி முதலியவை பற்றியதாக அமைந்தது. பேச்சு பொதுப்படையாக ஆரம்பித்து மெள்ள இதயமும் இதயமும் கலந்தவாறாகவே அமையலாயிற்று. அவ்வளவு நெருங்கிய பேச்சாக இருந்ததால் வந்தவர்கள், சந்தேகங்களைக் கூறி, வினோபாவிடம் தெளிவும் விளக்கமும் பெற்றார்கள்.

அவர்கள் கேட்ட முதல் கேள்வி இதுதான்: "நீங்கள் யாவருக்கும் நிலம் வழங்க வேண்டும் என்கிறீர்கள். ஆனால் தேசத்திலோ நிலப்பற்றாக்குறை இருந்து வருகிறது. அப்படியானால் ஒவ்வொருவரும் தங்கள் தேவைக்குத் தக்க அளவுக்கு நிலத்தைப் பெற்று எப்படி வாழ முடியும்!" என்று கேட்டார்கள்.

இதற்கு வினோபா அடிகள் அளித்த பதில் இதுதான்:—

"இப்படியொரு அனுவசியமான பயம் மூன்றரை வருடங்களுக்கு முன் முதன் முதலில் எழுந்தது. இப்பொழுது திட்டக் கமிஷன் கூட நிலமற்றவர்களுக்கு நிலம் கொடுப்பதன் அவசியத்தை உணர்கிறது. நம் நாட்டில் ஒரு நபருக்கு ஒரு ஏக்கர் நிலம் போதுமானது என்று கருதப்படுகிறது. அந்தக் கணக்குப்படி ஐந்து பேர் கொண்ட குடும்பத்தினர் ஐந்து ஏக்கரா நிலம் கோருகிறார்கள். இப்பொழுது 450 லட்சம் பேர் நிலமற்றவர்கள் இருக்கிறார்கள். ஆகவே ஐந்து கோடி ஏக்கரா நிலம் வேண்டும். நிலம் மோசமானதாக இருந்தால் இன்னும் சற்று அதிகமாகவே தேவைப்படும். நல்ல நிலமாக இருந்தால் சற்றுக் குறைவாக இருந்தாலும் பரவாயில்லை.

"இப்பொழுது நம் நாட்டில் சுமார் முப்பது கோடி ஏக்கர் நல்ல நிலமே இருக்கிறது. பத்து கோடி ஏக்கர் நிலம் உழப்படாமலிருக்கிறது. நல்ல நிலங்களில் ஆறில் ஒரு பங்கு கிடைத்தாலே இன்றையப் பிரச்னை தீர்ந்துவிடும்!"

"ஏன், இது எக்காலத்துக்கும் தீர்ந்த பிரச்னையாக இருக்க முடியாதா! மீண்டும் மீண்டும் இப் பிரச்னை தோன்றிக் கொண்டு தான் இருக்குமா!"

"இந்தப் பிரச்னையைச் சமாளிக்க மூன்று காரியங்கள் இந்தியாவில் நடைபெற வேண்டும். (1) நிலம் புனர் விநியோகம் ஆக வேண்டும். (2) தண்ணீர்ப் பாசனங்களுக்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். (3) கிராமக் கைத்தொழில்கள் முன்னேற வேண்டும். கிராமத்தில் கிடைக்கும் மூலப் பொருள்கள் கிராமத்திலேயே உபயோகிக்கத் தொழில் வளர வேண்டும். மேற்கண்ட இம்மூன்றையும் செய்யாமல் கிராம சுபிட்சம் என்பது இயலாத காரியமே" என்றார் வினோபா அடிகள்.

இந்தப் பதில் அவர்களுக்கு ஓரளவு திருப்தியையே கொடுத்தது என்று சொல்ல வேண்டும். ஆயினும் ஒவ்வொருவருக்கும் நிலம் வேண்டும் என்று வினோபா கூறுவதன் பொருள் அவர்களுக்கு இன்னும் சரியாக விளங்கவில்லை. ஒருவர் கேட்டார்: "ஒவ்வொருவருக்கும் நிலம் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறுகிறீர்களே, அதன் பொருள் என்ன!"

"ஆம், நான் தேசமக்களின் முன்னிலையில் வைத்துள்ள அடிப்படை விஷயமே இதுதான். நிலம் என்பது ஒவ்வொருவரின் பிறப்புரிமை என்பது என் கருத்து. ஒவ்வொருவரும் பூமித் தாய்க்குச் சேவை புரிய வாய்ப்பு நல்க வேண்டும். தாகம் எடுத்தவனுக்குத் தண்ணீர் எப்படி அவசியமோ, அப்படி விவசாயமும் ஒவ்வொருவருக்கும் அவசியமானது. யாரும் யாரையும் பார்த்து 'நிலத்தில் வேலை செய்ய உனக்கு நிலம் தரமுடியாது. தொழிற்சாலையில் தான் வேலைசெய்ய வேண்டும்' என்று சொல்லும் துணிச்சல் இருக்கக் கூடாது. ஒவ்வொருவருக்கும் நிலத்தில் வேலை செய்ய உரிமையுண்டு. ஆனால் நிலத்தில் வேலைசெய்ய விரும்பாதவர்களுக்கு நிலம் கொடுக்க வேண்டிய தில்லை."

"சிலருக்கு வேலை செய்ய நிலத்தைக் கொடுத்து விட்டு மற்றவர்களுக்கு மில்களிலும் தொழிற் கூடங்களிலும் வேலை கொடுப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்!" என்று ஒருவர் கேட்டார்.

சிரித்துக் கொண்டே சொன்னார் வினோபா: "இன்றைக்கு எனக்கு நிலமில்லாமல் செய்து விட்டு நாளைக்கு—எதிர்காலத்தில் என்றோ ஒரு நாள்—தொழிற்கூடத்தில் வேலை கொடுக்கப் பார்ப்பீர்கள். அதாவது நிலப் பறிமுதல் ரொக்க வியாபாரம், வேலை கொடுப்பது கடன் வியாபாரம் — என்பது தானே இதற்குப் பொருள்! ஏதாகிலும் வேலை எனக்குக் கொடுப்பதாக இருந்தால் அது இப்பொழுதே, என் கிராமத்திலேயே கொடுக்க வேண்டும். கிராமத் தொழில்களுக்கு எல்லாவிதப் பாதுகாப்புகளும் நல்க வேண்டும்.

"எல்லாருக்கும் நிலம் என்ற கோரிக்கையின் பின்னால் இன்னொரு விஷயமுமிருக்கிறது. நிலம் யாருடைய உடைமையாகவும் இருக்க முடியாது என்பதே அது.

"காற்று, நீர், வானம், சூரியவெளிச்சம் இவற்றைப் போல் தான் நிலமும்; அது யாருடைய சொந்தச் சொத்தாகவும் இருக்க முடியாது என்று இரவும் பகலும், ஏன், சமயம் வாய்த்த போதெல்லாம் சொல்லி வருகிறேன். நிலம் கடவுளுக்கு உரியது. அதனால் கிராமத்தார்

சுரேஷ்ராம்

அனைவருக்கும் உரியது. அதில் வேலை செய்ய ஒவ்வொருவரும் உரிமை பெற்றோயாக வேண்டும். தனித்தனியாக உழுகிறார்களோ, கூட்டுறவுப் பண்ணைகளாக அமைத்துக் கொண்டு உழுகிறார்களோ என்பது பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆனால் கூட்டுறவுப் பண்ணை முறை அவர்கள் மீது திணிக்கக் கூடாது; அவ்வளவுதான் நான் சொல்லுவேன். கூட்டுறவுப் பண்ணை முறை வேறு; கூட்டுப் பண்ணை வேறு என்பது நீங்களே ஒத்துக் கொள்வீர்கள் என்று நினைக்கிறேன். பிஹாரில் சப்ரா ஜில்லாவில் ஜனத்தொகை, ஒரு சதுர மைலுக்கு ஆயிரம் பேர். அங்கு சின்னஞ்சிறு நிலத் துண்டுகளிலும் மக்கள் சாகுபடி செய்து ஏராளமாக விளைபொருள்களை உற்பத்தி செய்யப் பார்த்திருக்கிறேன்'' என்றார்.

"அப்படியானால் நீங்கள் நிலத்தைச் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்துப் பயிரிடுவதை ஆதரிக்கிறீர்களா?'' என்று கேட்டார்கள்.

"நிலத்தைச் சின்னஞ்சிறு பகுதிகளாக்கிப் பயிரிடும் முறையை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று சொல்வேன். உலக ஜனத்தொகை அதிகரிக்க அதிகரிக்கச் சராசரி ஒரு மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய நிலப்பகுதி குறையத்தானே வேண்டும். நம் நாட்டைவிட ஜப்பானில் நிலத் தேவை இரண்டு மடங்காகும். நம் நாட்டில் ஒரு நிலத்தில் விளைவிக்கும் பொருளைவிட, அந்நாட்டின் அதே விஸ்தீரணமுள்ள நிலத்தில் இரண்டுமடங்கு உற்பத்தி செய்கிறார்கள். இத்துறையில் அவர்கள் வெகுதூரம் முன்னேறி விட்டிருக்கிறார்கள். உலகம் பூராவிலுள்ள மாமிசம் சாப்பிடும் மக்கள் காலகதியில் சைவ உணவு சாப்பிட முன் வருவார்கள் என்றே தோன்றுகிறது. விஞ்ஞானிகளே மாமிசம் உண்ணும் ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது என்று கூறுகிறார்கள். ஆனால் சைவ உணவு உண்பவருக்கு அரை ஏக்கர் இருந்தால் போதுமானதாக இருக்கிறது.

காலம் போகப் போக நம் உழு முறைகளில் கூட மாறுதல்கள் செய்ய வேண்டியதுதான். பௌனாரில் இருந்தபோது நான் பல ரக விவசாயங்கள் செய்திருக்கிறேன். மண் வெட்டியைக் கொண்டு உழுதிருக்கிறேன். எருது கட்டி உழுதிருக்கிறேன். மோட்டார் இஞ்சின்கூட ஓட்டியிருக்கிறேன்'' என்று சொல்லிச் சிறிது நிறுத்தினார் வினோபா.

சற்று நேரம் அமைதி நிலவியது. வினோபா, அவர்கள் முகத்தைப் பார்த்து விட்டுச் சொன்னார்: "நீங்கள் என்னை எது வேண்டுமானாலும் சங்கோசமின்றிக் கேளுங்கள். உங்களுக்குப் பதில் கூறுவதில் எனக்கு அளவு கடந்த மகிழ்ச்சியே.''

இதைக் கேட்டு உற்சாக மடைந்த ஒருவர் கேட்டார்: "கிராமத்திலுள்ள நிலங்கள் எல்லாம் கிராமத்துக்குச் சொந்தமாகி விட்டால் வீட்டைச் சுற்றியுள்ள நிலத்தை என்ன செய்வது?''

"ஒவ்வொரு வீட்டுக்கும் அரை ஏக்கர் நிலமாகிலும் இருக்க வேண்டும். அவரவர்கள் வீட்டுச் சமையலுக்கு வேண்டிய காய்கறிகளை அங்கேயே பயிர் செய்துகொள்ள வேண்டும் என்பதுதான் என் கருத்து. ஆனால் இந்நாட்களில் உத்தரப் பிரதேசம், பிஹார், வங்காளம் ஆகிய இடங்களில் எல்லாம் பெரிய பண்ணைகள் நடத்துகிறார்கள். சர்க்கரை ஆலைகளுக்கு ஒட்டினாற் போல் பெரிய பண்ணைகள் நடத்துகிறார்கள். அதில் சர்க்கரை ஆலைகளுக்குத் தேவையான கரும்பைப் பயிர் செய்து விடுகிறார்கள். இதன் காரணமாக நெல்லுக்கும் கரும்புக்கும் போட்டியும் சண்டையும் ஏற்பட்டிருக்கின்றன.

"கோரக்பூர் ஜில்லாவில் மிக நெருக்கமான ஜனத்தொகை. வயல் வெளியோ மிகக் குறைவு. ஆயினும் சர்க்கரை ஆலைகளுக்கு ஒட்டினாற் போல் பெரிய பெரிய கரும்புப் பண்ணைகள் இருக்கத்தான் செய்கின்றன. அதனால் உணவுப் பொருள் பற்றாக்குறை நிச்சயமாக இருக்கத்தான் செய்கிறது. நான் சர்க்கரை உற்பத்தி செய்யக் கூடாது என்று சொல்லவில்லை. அதிலும் ஒரு நியாயமிருக்க வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். ஒரு பட்டம் கரும்பு சாகுபடி செய்தால் அடுத்த பட்டம் நெல், அல்லது கோதுமை சாகுபடி செய்ய வேண்டும் என்று தான் சொல்லுகிறேன்.

"இந்தச் சந்தர்ப்பத்தில் நான் இன்னொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன். நம் கிராமத்து எரு வீணாகப் போகிறது. மனிதன் ஆண்டுக்கு ஆறு ரூபாய் பெறுமானமுள்ள கழிவுப் பொருள் தருகிறானாம். இது அத்தனையும் உபயோகப்படுத்தப் படுவதில்லை. நல்லபடியாக மட்டும் உபயோகித்தால் பூமியின் சத்து பெரும் அளவுக்குக் காப்பாற்றப்படும், கிராமத்தின் சுபிட்சமும் வளரும்'' என்றார்.

இன்னொருவர் மற்றொரு துணிகரமான கேள்வியைக் கேட்டார்:

"உங்களோடு அரசாங்கம் பரிபூரணமாக ஒத்துழையா விட்டாலும், எங்கள் ராஜ்யத்தில் பூதானத் தொண்டர்களுக்கு வேண்டிய உதவி அரசாங்கம் செய்துதான் இருக்கிறது. இது உங்கள் வேலையை அரசாங்கம் ஆதரிக்கத்தான் செய்கிறது என்ற அபிப்பிராயத்தை மக்கள் மனத்தில் உண்டாக்கத்தான் செய்கிறது. பின் நீங்கள் எதிர்பார்க்கும் புரட்சி எப்படி உண்டாகும்!"

இந்தக் கேள்வியைக் கேட்டு வினோபா குதூகல மடைந்தார். "நாம் விரும்பும் புரட்சிக்கு முன்னால் ஒரு முக்கியமான அடைமொழியிருப்பதை நீங்கள் அறிவீர்கள். அதுதான் "அஹிம்ஸை." ஆம், நாம் அஹிம்ஸா முறையில் அமைக்கப்படும் புரட்சிதான் வேண்டும் என்கிறோம். இந்த அஹிம்ஸைக்கு, பாதகம், ஊறு, விரோதி என்பன ஒன்றும் கிடையாது. இன்றைக்கு நமக்கு ஒருவர் நிலம் கொடுக்கவில்லை என்றால் அஹிம்ஸாவாதியான நாம் அவரை விரோதியாகக் கருதுவதில்லை. நாளைக்கு நிச்சயம் தரப் போகிறார் என்று அந்தரங்க சுத்தியோடு நம்புகிறோம். நம்முடன் இன்று வர மறுப்பவர்கள் நாளை நிச்சயம் வருவார்கள். இன்றுவரை நண்பர்களாக இருந்தவர்களை விரோதிகளாகக் கருதத் தொடங்கினோமானால் அது நமக்கு விரோதத்தைத்தான் சம்பாதித்துத் தரும். உபநிடதங்கள் "நீ பிரம்மன்" என்கின்றன. நாம், "நீ பாபி" என்று சொன்னோமானால் நம்மைச் சுற்றிப் பாபாத்மாக்களைத்தான் காண்போம். அதனால் அரசாங்கம் உதவினால் அதை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. ஆயினும் சர்க்கார் பொதுவாக உபயோகிக்கும் பலாத்கார முறைகளை இந்த பூதான விஷயத்திலும் பிரயோகிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்."

"நீங்கள் முப்பத்தாறு லட்சம் ஏக்கர் சேகரிப்பதற்கு மூன்று ஆண்டுகள் பிடித்திருக்கின்றன. ஆனால் நீங்கள் ஐந்து கோடி ஏக்கர் சேகரித்தாக வேண்டும் என்கிறீர்கள். மேலே சொன்ன கணக்குப்படி பார்த்தால் எத்தனை நாட்களாகும்!"

"இதை நீங்கள் என்னைக் கேட்பதற்குப் பதில் மூன்றாவது நான்காவது வகுப்புப் பையனைக் கேட்டால் சுலபமாகச் சொல்லுவான். ஆனால் நாம் காலேஜ் மாணவரின் நிலையிலிருக்கிறோம். கல்லூரியில் இந்த மாதிரிக் கணக்குகள் வருவதில்லை!" என்று சொல்லிச் சிரித்தார்.

மீண்டும் தொடர்ந்தார்: "ஒரு லட்சம் ஏக்கர் நிலத்தைச் சேகரிப்பதற்கு ஒரு ஆண்டு பிடித்தது! 36 லட்சம் சேகரிக்க மூன்று ஆண்டுகள் பிடித்தன! அப்படியானால் ஐந்து கோடி சேகரிக்க எத்தனை நாட்களாகும் என்பதைக் கல்லூரிகளில் சொல்லித் தரப்படும் 'இண்டக்ரல் டிபரன்ஷியல் கால்குலஸ்' என்ற கணக்கு முறைப்படி கணக்குப் போட வேண்டும்!" என்றார் அடிகள்.

"சிலர் உங்களுக்கு நிலம் தரமுடியாது என்று பிடிவாதமாகச் சொன்னால் நீங்கள் என்ன முறையைக் கையாளுவீர்கள்!" என்று கேட்டார் ஒருவர்.

"கட்டாந்தரையாக இருக்கும் பகுதியைத் தோண்டப் பலமான ஆயுதங்கள் வேண்டும். ஆனால் நான் அந்த வகையைச் சேர்ந்தவனல்ல. பொதுஜன அபிப்பிராயம் என்னும் நல்ல பருவ காலத்தைச் சிருஷ்டிப்பதே என் வேலை. காற்று வேகமாக அடித்தால் பறவைகள் மட்டுமல்ல, இலைச் சருகுகள்கூட காற்றில் பறக்கின்றன. அம்மாதிரி 'நம் நாட்டில் நிலமற்றவர் ஒருவர்கூட இருக்கக் கூடாது' என்று ஒவ்வொரு குழந்தையுமே சொல்லத் தொடங்கி விட்டால் அப்புறம் என் வேலை சுலபமாகி விடுகிறது. மந்திரத்துக்கு உள்ள சக்தி கொஞ்ச நஞ்சமல்ல. 'வெள்ளையனே வெளியேறு' என்ற மந்திரத்தின் மாய சக்தி எப்படி யிருந்தது என்பதுதான் நமக்குத் தெரியுமே!"

"இதற்குப் பதில் ஒரு புதுச் சட்டம் இயற்றும்படி சொல்ல மாட்டீர்களா!" என்று கேட்டார்கள்.



அலகாபாத்தில் உள்ள கமலாநேரு ஞாபகார்த்த ஆஸ்பத்திரி உதவி நிதிக்காக ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் சங்கீதக் கச்சேரி சென்ற நாலாந்தேதி புதுடில்லி "நேஷனல் பிஸிகல் லபாரேட்டரி ஆடிடோரி"யத்தில் நடைபெற்றது. கச்சேரிக்கு ஜனாதிபதி ஸ்ரீ ராஜேந்திர பிரசாத் அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பித்தார்கள். பாரதத்தின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு, உதவி ஜனாதிபதி ஸ்ரீ ராதாகிருஷ்ணன், இன்னும் மத்திய சர்க்கார் மந்திரிகள், அயல்நாட்டுத் தூதுவர்கள், பாட்டியாலா மகாராஜா, மகாராணி முதலியவர்கள் வந்திருந்தனர். இதற்கு முன்பு எந்த விழாவுக்கும் இவ்வளவு பிரமுகர்கள் கூடிவந்ததில்லை என்று வியக்கும்படி மண்டபம் கொள்ளாமல் நெருங்கி நிரம்பிப் பிரமுகர்கள் கூடியிருந்தனர். ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் கர்நாடக சங்கீதமும், ஹிந்தி பஜனை கீதமும் பாடிச் சபையினரை மெய்மறக்கச் செய்து விட்டார்கள். நேருஜீ அவர்கள் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களை இசை அரங்கு மண்டபத்துக்குள் அழைத்து வருவதையும், ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் அவர்களுக்கு மலர் மாலை சூட்டுவதையும், ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் வசூலாகி லட்சத்தில் ஒரு கச்சேரி என்று சிறப்படையச் செய்த சபையையும், இசை அரங்கையும் மேலே படத்தில் காணலாம்.

இதுதான் அவர்களுடைய கடைசிக் கேள்வி.

"ஜனநாயக ஆட்சி முறையில் சட்டம் இயற்றுவது என்பது முக்கியமான கடமையும் உரிமையுமாகும். ஆனால் சட்டம், அரசாங்கத்துக்கே முட்டாள் பட்டம் கட்டும் வகையில் அமைந்து விடக்கூடாது. ஒவ்வொரு மனிதரும் முப்பது ஏக்கர் அல்லது நாற்பது ஏக்கர் நிலம்தான் அதிகப் பட்சம் வைத்துக் கொள்ளலாம் என்று சட்டம் இயற்றுவதனால் ஒரு பயனுமில்லை. அது பழைய நிலைமை அப்படியே இருத்திவைக்கும். நான் பீஹாரிலிருந்த போது ஒரு ஜில்லா மாஜிஸ்திரேட் என்னைப் பார்க்க வந்தார். அவர் ஒரு விஷயத்தைச் சொன்னார். சர்க்கார், அவரை முப்பது ஏக்கருக்கு மேல் நிலம் படைத்தவர்களின் ஜாபிதாவைத் தரும்படி கேட்டிருந்தார்களாம். அதன்படி தயாரிக்க முற்பட்ட போது முப்பது பேர்கூடத் தேறவில்லை என்று கூறினார். எனக்கு ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது. 'ஏன் இப்படி!' என்று கேட்டேன். நிலம் படைத்த பெரிய பிராகதார்கள் எல்லாம் தங்கள் நிலங்களைத் தங்கள் சொந்தக்காரர்களின் பெயரில் பகிர்ந்து எழுதி வைத்து விட்டார்களாம்.

"வங்கத்திலும் இப்படித்தான். அங்கு 125 லட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது. அரசாங்கம் நிலப் பறிமுதல் சட்டம் செய்தார்கள். ஏராளமான நிலம் சர்க்காருக்குக் கிடைக்கும் என்று நினைத்தார்கள். இரண்டு லட்சம் ஏக்கர் தான் கிடைத்தது. அதுவும் மிக மோசமான நிலங்கள். அப்படியானால் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட சட்டம், உண்மையில் சட்டமா அல்லது கேலிக் கூத்தா!


"இப்படிக் கிடைத்த நிலத்தையும் அரசாங்கத்தார் தாங்களே விநியோகிக்கப் போவதாகக் கூறுகிறார்கள். அதாவது அவர்கள் ஐந்து ஏக்கர் கொண்ட சிறு சிறு பண்ணைகள் சிருஷ்டிக்க வேண்டும் என்பது அவர்கள் நோக்கம் போல் தோன்றுகிறது. அதனால் அவர்கள் நாலரை ஏக்கர் ஏற்கனவே பெற்றவனுக்கு அரை ஏக்கர் அளித்து ஐந்து ஏக்கர்காரனாகச் செய்வார்கள். மூன்று ஏக்கர் படைத்தவனுக்கு இரண்டு ஏக்கர் கொடுப்பார்கள்,—இப்படித்தான் விநியோகிப்பார்கள். நிலமற்றவன் என்றும் நிலமற்றவனாகவே இருப்பான். இப்படிச் சட்டம் இயற்றுவதனால் என்ன பிரயோஜனம்! ஆகவே ஒரே ஒரு பயனுள்ள சட்டம் என்னவென்றால் 'கிராமத்து நிலம் கிராமத்துக்குச் சொந்தம்' என்று இயற்றப்படும் சட்டமே!"

"அப்படியொரு சட்டம் இயற்றிவிட்டால், மக்கள் அந்தச் சட்டத்தை அங்கீகரிக்கச் செய்யச் சர்க்கார் பலாத்காரத்தைப் பிரயோகிக்க வேண்டியிராதா!" என்று 'பளீர்' என்று ஒருவர் கேட்டார்.

"கிடையாது. பலாத்காரம் என்பது ராஜ்யத்தின் ராணுவத்தையோ போலீஸையோ பிரயோகிக்கும் போதுதான் எழுகிறது. அது தவறே! ஆனால் பொதுஜன ஆதரவின் பேரில் இயற்றப்பட்ட சட்டம் அமுலுக்கு வரும் போது பலாத்காரம் எங்கிருந்து வரும்!" என்றார் விநோபா.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரமாகி விட்டது. அவருடைய அறிவு ஒளி வீசும் பேச்சைக் கேட்டு மக்கள் நன்றி தெரிவித்தனர். அங்கிருந்த ஒரு மந்திரி மட்டும் கடைசியாக, "நம் நாட்டு அரசியல் கட்சிகள் பொதுமக்களைப் பற்றிப் பயப்பட வில்லை. நடுத்தர வகுப்பினரைக் கண்டுதான் பயப்படுகிறது!" என்றார்.

"உண்மை! அவர்கள்தானே கொள்கைகளை வாய்மொழி மூலமாகப் பேசி நெடுகிலும் பரப்புகிறவர்கள்" என்றார் விநோபா.



கனரா ஸ்பிரிங்குகளுக்கு பரிசோதனை-தாங்கும் சக்தி

அமெரிக்கத் தயாரிப்புத் தரத்திற்கு இணையாக மிகச் சிறந்த எஃகுக் கலவை உலோகத்தைக் கொண்டு தயாரிக்கப்படும் கனரா ஸ்பிரிங் தகடுகள் ஒவ்வொன்றும், தயாரிப்பின் ஒவ்வொரு நிலையிலும் கடுமையாக சோதிக்கப்பட்டு, நமது ரஸ்தா நிலைமைகளுக்கு ஏற்ப தாங்கும் சக்தியிருக்கிறதா என்றும் சோதிக்கப்படுகின்றன. எனவே இந்த ஸ்பிரிங்குகளின் உறுதிப்பாடு நம்பகமானதாகும்.

SPRINGS

சுகமாக சவாரி செய்யுங்கள் — கனரா ஸ்பிரிங்குகளை பொருத்துங்கள்

தென்னிந்தியாவுக்கு (கொச்சி நீங்கலாக) ஏகபோக விநியோகஸ்தர்கள்:—

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் லிமிடெட்


மதுரை மற்றும் கிளைகள்.

சுந்தரம் மோட்டார்ஸ் லிமிடெட், சென்னை-6.

மதராஸ் ஆட்டோ சர்விஸ் லிட், மதராஸ் & பெங்களுர்.



ரகுபதி ராகவ



1. முன்னுரை

காந்தியடிகளுடைய மனத்தைக் கவர்ந்த பிரார்த்தனைப் பாட்டு 'ரகுபதிராகவ ராஜாராம்' என்பது. இது அனைவருக்கும் தெரிந்த விஷயம். இந்தத் தலைப்பை வைத்து காந்தி மகான் அவ்வப்போது பகவத் விஷயமாக எழுதி வந்த வாசகங்களைத் தொகுத்து எழுதலாம் என்று ஆரம்பிக்கிறேன்.

'நவஜீவன்' காரியாலயத்தார் ஆங்கிலத்தில் ஒரு வசன மஞ்சரி "சத்தியமே தெய்வம்" என்கிற பெயரிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். அதில் காந்திஜி அவ்வப்போது கடவுளைப் பற்றியும் சமயத்தைப் பற்றியும் சொல்லி வந்ததையெல்லாம் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மஞ்சரியைத் தமிழ்ப் படுத்திக் 'கல்கி'யில் சிறு கட்டுரைகளாகத் தொடர்ந்து எழுதலாம் என்பது கருத்து. இதற்கு நவஜீவன் காரியாலயத்தார் சம்மதியும் தந்திருக்கிறார்கள்.

காந்தி மகான் நம்முடைய நாட்டுக்காகவும் மனித சமூகத்துக்காகவும் அநேக காரியங்கள் செய்தார். அவற்றில் மகோன்னதமான வெற்றிகள் அடைந்து புகழ் பெற்றார். அரசியல் துறையிலும், சமுதாய சீர்திருத்தத் துறையிலும், தொழில் துறையிலும், பல பிரசித்தி பெற்ற பணிகள் ஆற்றினார். இந்தக் கட்டுரைத் தொடரில் அடங்குகிற காந்தி வாசகங்கள் மற்ற விஷயங்களைத் தவிர்த்து, கடவுளைப் பற்றியும் சமயங்களைப் பற்றியுமே இருக்கும். சத்தியாக்கிரகம், கதர், தீண்டாமை ஒழிப்பு முதலான விஷயங்களைப் பற்றி எழுதியதை இந்த மஞ்சரியில் எதிர்பார்க்க வேண்டாம். பகவத் விஷயம் ஒன்றே இந்த 'ரகுபதி ராகவ' தொடரில் வரும்.


இந்தியாவுக்கு சுதந்திரத்தைச் சம்பாதித்துத் தந்த நமது அப்பன் வெறும் அரசியல் வாதியல்ல. தெய்வத்தைக் காட்டி வந்த முனிவனுமாவான். காந்தி மகானுடைய அந்தரங்க உள்ளத்தை அறிய வேண்டுமானால் அவருடைய அரசியல் சரித்திரத்தைப் படித்து விட்டால் மட்டும் போதாது. சம்பூரண காந்தியை அவருடைய பிரார்த்தனைக் கூட்டங்களில் தான் மக்கள் கண்டார்கள். எழுத்திலும் கூட அவருடைய அறவுரைகளில் தான் அவரைச் சரியாகக் கண்டு குறையின்றி உணரலாம்.

நம்முடைய சுதந்திரத்தின் தனிச் சிறப்பு என்னவென்றால் அதன் வெற்றிச் சரித்திரத்தில் கலந்து வந்த கடவுள் பக்தியும், அதையொட்டிய சாந்துவிகமும். அந்தத் தனிச் சிறப்பை மங்காமல் மறவாமல் நாம் காப்பாற்றி வர வேண்டும். அப்போது தான் பாரத நாட்டுக்கு உலகத்தில் ஒரு தனி ஆசனம் இருக்கும். இல்லாவிடில் மற்றவர்களோடு பின் வரிசையில் பத்தோடு பதினொன்றாக இருக்க வேண்டியதுதான்.

நம்முடைய காந்தி மிகக் கூர்மையான மூளையும் தற்கால விஞ்ஞானக் கல்வியும் படைத்தவர். இந்த யுகத்தின் ஆட்சேபணை ஐயப்பாடுகள் அனைத்தையும் அறிந்த இத்தகையவர், நம்முடைய அரசியல் தலைவர், ராம பஜனை செய்து வந்தார். மதங்கள் அனைத்திலும் ஒரே தெய்வம் என்பதைப் போதித்தார். இருபதாவது நூற்றாண்டில் ஒரு ஆஸ்திகராக விளங்கினார். இதைப் பாரத மக்கள் கல்லெழுத்தில் எழுதிய சாசனமாக வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டும். அப்படி நடத்தினால்தான் ஆண்டவன் அருள் பெற்று சுதந்திரத்துடன் சுகமும் பெறுவோம்.

ராஜாஜி

(தொடரும்)



மும்மூர்த்திகள் நுதி

திருவாரூரில் மும்மூர்த்திகளுக்கு நினைவுச் சின்னம் நிறுவ முன் வந்தது மிகவும் போற்றுவதற்குரியதாகும். இத் திருப்பணியில் அனைவரும் பங்கு பற்றி ஞாபகச் சின்னம் கூடிய விரைவில் நிறுவி, மும்மூர்த்திகளின் பெருமையை நாடெங்கும் ஒளி வீசச் செய்ய வேண்டும்.

கேதாரம் — ஆதி

பல்லவி

பஞ்சபூத க்ஷேத்திரங்கள் சென்றுநீ
பார்த்து பூஜித்து பஜித்திடுவாய் நெஞ்சே

அனுபல்லவி

கஞ்சி ஆனைக்கா கருணைகாளத்திதில்லை
கண்டு கொண்டாடிடவே மிகவேண்டிடும்

சரணம்

இட்ட தேவதை அடிபணிந்து
இருப்பிடமாகக் கொண்டு அர்ச்சித்து
அட்ட விடங்களில் ஒருவரைத் துதித்து
அனுதினம் ஆரூர்தியாகேசனை நினைந்து

தலம் தீர்த்தம் மூர்த்தியை பக்தியால்
தரிசிப்போர்க் கருளும்இஷ்ட பூர்த்தியாய்
குலம் கோத்திரம் விளங்கும் இடமதில்
காணும் ஞாபகார்த்த மண்டபந் தோன்றிட

தீவினை எல்லாம் அகன்று ஓடிடும்
தீக்ஷிதர் முத்துசாமி கிருதியினுல் பாடிடும்
அவனியை ஆளும் நவக்கிரக கோளிடும்
அனுக்கிரகத்தைப் பெற்றுய்யவே வழிபடும்

சோதரர் போலெனக் கேதாரம் கூட்டும்
சியாமா, தியாகய்யா, வாக்விசேஷங்காட்டும்
வேதனுக்கோதிய ஞான ஒலி கேட்டிடும்
வாதூலராமக் கவிஞன் பிரமித்திடும்

திருவாரூர் 'க்ஷேத்திரத்தின் மகிமை மும்மூர்த்திகளின் 'நினைவுச் சின்னம் நிர்மாணித்த பிறகு மும்மடங்கு பெருகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஆத்தூர்
20-10-55 வாதூல கு. ராமராமிசர்மா

புனித சேவை

மும்மூர்த்திகளின் சித்திரங்களையும், அவர்களுடைய நினைவு மண்டபம் எழுப்ப வேண்டிய ஏற்பாடுகளையும் கண்டு களித்தேன். நம் நாட்டில் ஓவியம், சிற்பம், சங்கீதம், கவித்துவம் முதலியவை மிகவும் சிறந்து விளங்குவதை நாம் நன்கு அறிவோம்.

சங்கீத மும்மூர்த்திகள் மூவரும் ஒரே ஊரில் பிறந்து ஒரே சமயத்தில் இருந்திருக்கிறார்கள் என்ருல் இவர்களை ஈன்றெடுத்த அந்தத் திருவாரூருக்கு எவ்வளவு கௌரவமும், பெருமையும் வந்தடைகின்றது. அந்த ஊரிலேயே அவர்களுக்கு மண்டபங்கள் நிர்மாணித்து விட்டால் அந்த ஊரின்பெருமையும் நாம் சங்கீதத்துக்குச் செய்யக் கூடிய தொண்டும் நம் நாட்டுப் பெருமையும் மங்காமல் ஒளிவீசித் திகழும்.

ஆகவே சங்கீத மும்மூர்த்திகளுக்கு ஞாபகச் சின்னம் அமைக்கும் மகத்தான தொண்டைத் தமிழ்நாடு வரவேற்கும். இந்த ஞாபகச்சின்னம் சங்கீதத்தை வளர்த்த நம் முன்னேர்களுக்கு நாம் செய்யும் புனித சேவையாகவும், என்றென்றும் போற்றத்தக்கதாவும், பெருமையுள்ளதாகவும் இருக்கும். இம் மண்டபம் கட்டத் திரட்டும் நிதிக்கு எல்லாரும் வாரி வழங்குவார்கள் என்று நம்புகிறேன்.

தஞ்சாவூர்
8—10—55 பி. சாவித்திரி

★

தமிழ்த் தொண்டு

'கல்கி' செப்டம்பர் 25-ந் தேதி இதழில் 'வட்ட மேஜை'ப் பகுதியில் அமைந்துள்ள வித்வான் பண்டித ந. பார்த்தசாரதி கடிதமும் ஆசிரியரின் குறிப்பும் அறிவூட்டுவனவா யிருக்கின்றன. எனக்குப் பட்ட சில கருத்துக்களையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த 'ஆனை உண்ட விளங்கனி'க்குச் சமமாக வட மொழியில் 'கஜ புக்த கபித்த' மென்று வழங்கப்படுகிறது. பெரும்பாலோர், யானை விளாங்கனியின் ஓட்டை உடைக்காமலே உள்ளிருப்பதை யுண்டபின் வெளித் தள்ளியது என்று தவருக அபிப்பிராயப் படுவதுண்டு. தங்கள் பத்திரிகையிலிருந்தும் இன்னும் சில விடங்களிலிருந்தும் 'ஆனை' (வட மொழியில், 'கஜம்') என்பது ஒரு வகைப் பூச்சியைக் குறிக்கிறது எனத் தெரிகிறது. கனியை உள்ளீடில்லாமற் செய்வதற்கு இப் பூச்சியே பொறுப்பாளி. இந்த 'ஆனை' என்பதற்கு "உலங்கு" என்றொரு பரியாய வார்த்தை யிருப்பதாகத் தெரிகிறது. ஸ்ரீ ஆண்டாள் பாடியருளிய 'நாச்சியார் திருமொழி' என்னும் நூலில் வரும் 'உலங்குண்ட விளங்கனி போல் உள் மெலியப் புகுந்து' என்னும் அடியானது இந்த உண்மையைத் தெரிவிக்கிறது.

இம்மாதிரி இலக்கிய அருமைகளைத் தெரிவித்துத் தமிழுக்குத் தொண்டு செய்து வரும் தங்களுக்கும், தங்கள் பத்திரிகைக்கும், தமிழ் நாடு என்றும் கடப்பாடுடையதாகும்.

தஞ்சாவூர் அ. திருவேங்கடத்தான்
3-11-55 தமிழாசிரியர், ஸ்ரீ. பி. கல்லூரி



அத்தியாயம் 10


கள்ளச் சரக்கு

தமிழ் வாத்தியாருக்கு இதை யெல்லாம் என்னிடம் சொல்வதற்குத் தயக்கமாகவே இருந்தது. மகனிடம் தந்தை செய்த தவறைப் பற்றிக் கூறுவதற்கு யாராக இருந்தாலும் தயங்குவது இயல்பே யல்லவா? அவரை நான் எல்லா விவரங்களையும் கூறும்படி வற்புறுத்த முடிய வில்லை. ஆயினும் அவர் கூறிய விவரங்களை யெல்லாம் வைத்துக் கொண்டு இப்படித்தான் நடந்திருக்க வேண்டுமென்று நானாகவே ஊகித்து அறிந்து கொண்டேன்.

கந்தசாமி புதுச்சேரிக்குப் புறப்பட்டுச் சென்று விட்டார். இரண்டு, மூன்று நாட்கள் அங்கே இருந்தார். பட்டுத் துணிகள் முதலிய சில சாமான்களைக் கொண்டு வர வேண்டி யிருந்தது. அங்கு சென்ற உடனேயே அவைகளை வாங்கிக் கொண்டு விட்டார். ஆனால் உடனே திரும்பி வர முடிய வில்லை. அனுபவ மில்லாத படியால் பயமாக இருந்தது. இரண்டு மூன்று நாட்கள் கடற்கரையையும், தாண் சிற்பங்களையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு காலம் கழித்தார். பெரிய ரோடுகளையும், விநோதமான மனிதர்களையும் கண்டார். இப்படி அலைந்து விட்டு நான்காம் நாளன்று புறப்பட்டார். தைரியத்தைக் கையில் எடுத்துக் கொண்டு தான் வந்தார். 'கஸ்டம்ஸ்' காரியாலயத்தில் தாம் சாமர்த்தியமாகச் சமாளித்து விடலாம் என்று நம்பினார். ஆனால் அங்கே தான் அவர் தவறு செய்தார். கஸ்டம்ஸ் உத்தியோகஸ்தரை ஏமாற்றுவதற்கு அவரால் முடியவில்லை.

அவர் சாதாரணமாக எப்போதும் போல் வந்திருந்தால் அந்த உத்தியோகஸ்தருக்கு இவர் மீது சந்தேகமே ஏற்பட்டிருக்காது. இவர் வேஷம் போட்டுக் கொண்டு வந்தார். தாடியைப் பார்த்த உடனேயே வேஷம் என்று அந்த உத்தியோகஸ்தருக்குத் தெரிந்து விட்டது. ஆகவே உடனே அவருடைய பெட்டியைச் சோதித்தார். சோதனையின் போது அவர் கள்ளச் சரக்கு கொண்டு வந்திருப்பது தெரிந்து போய் விட்டது. அவரைக் கைது செய்து விட்டார்கள். அங்கேயே அவரை விசாரணை

செய்து விட்டுச் சிறையில் தள்ளி விட்டார்கள். அதன் பிறகு அவர் அங்கே யாரோ ஒருவரை விட்டு இதைப் பற்றி வீட்டுக்குக் கடிதம் எழுதச் சொல்லியிருக்கிறார். விசாரணையின் போது கந்தசாமி என்ன சொல்லியும் அது எடுபடவில்லை. ஈசுவரமூர்த்தி என்ன செய்தாரோ தெரியவில்லை. அவரைப் பற்றிய பேச்சை எடுத்தாலே அவர்கள் வாய் மேல் அடித்தார்கள். ஈசுவரமூர்த்தி இதில் எப்படி அகப்பட்டுக் கொள்ளாமலிருந்தார் என்பது கந்தசாமிக்குத் தெரியவில்லை. ஆனால் எல்லாம் பணம் செய்த வேலைதான் என்று மட்டும் அவரால் ஊகிக்க முடிந்தது. அவ்வளவு தான் விஷயம்.



இதைத் தமிழ் வாத்தியார் சொல்லி முடிப்பதற்குள் அவர் பாடு ரொம்பத் திண்டாட்டமாகப் போய் விட்டது. கடைசியில் எல்லாவற்றையும் சுருக்கித் தான் அவரால் சொல்ல முடிந்தது. பாவம்! அவருடைய மனம் மிகவும் மென்மையானது. என் மனம் புண்ணாகி விடுமே என்று அவருக்கு ரொம்பக் கவலை. எனக்கும் அவர் சொல்லி முடிக்கும் வரை ஒரே படபடப்பாக இருந்தது.

அவர் முடித்த பிறகு என் முகத்தைப் பார்த்தார். எவ்வளவு சிரமப்பட்டு நான் புன்னகையை வரவழைத்துக் கொண்ட போதிலும், எனக்குக் கண்களில் ஜலமும் வந்து விட்டது.

"வருத்தப்படாதே, ரங்கா! நீ ஆண் பின்ளை இல்லையா? கண்ணீர் விடலாமா? தைரியமாக இதையெல்லாம் தாங்க வேண்டும். உன் மீது எனக்கு உள்ள ஒரு பாசத்தினால், இவைகள் உனக்குத் தெரிந்திருக்க வேண்டியது அவசியம் என்று சொன்னேன். உலகம் எவ்வளவு பொல்லாதது என்பதை நீ அறிந்து கொள்ள வேண்டும். அதிலும் இந்த ஈசுவரமூர்த்தி மிகவும் பொல்லாதவன். கோர இதயம் படைத்தவன். கந்தசாமியைக் காட்டிக் கொடுத்துவிட்டுத் தான் எப்படியோ தப்பித்துக் கொண்டு விட்டான் பார்த்தாயா? பொல்லாதவன் கெட்டிக்காரனாகவும் இருந்து விட்டால் ரொம்ப ஆபத்து. உன்னை வண்டிக்காரன் அடித்தபோது, இவன் அடிக்க வேண்டாமென்று சொல்ல வேண்டாமா? அப்படிச் சொல்லாதவனுடைய இதயம் இரும்பாகத்தான் இருக்க வேண்டும். அவனுடைய மனத்தை என்ன செய்தாலும் மிருதுவாக ஆக்க முடியாது. ஆனால் இது ஒரு நாள் துருப்பிடித்து, தானாக வெடிக்கப் போகிறது" என்றார்.

அவர் அப்படிச் சொன்னது எனக்கு ரொம்ப ஆறுதலாக இருந்தது.

இதெல்லாம் நடந்து நான்கு நாட்கள் ஆனதும் ஒரு நாள் எங்கள் வீட்டுக்கு ஒரு ஆள் வந்தான். அன்று நான் வீட்டில் இருந்தேன். அந்த ஆள் வந்தவுடனேயே "இந்த வீடு கந்தசாமி வீடுதானே?" என்று உரத்த குரலில் என்னிடம் கேட்டான்.

"ஆமாம்" என்றேன்.

"உன்னைக் கையோடு எங்கள் எஜமானர் அழைத்துக் கொண்டு வரச் சொன்னார். உடனே வா."

"என்னையா? யார் அழைத்துக் கொண்டு வரச் சொன்னார்கள்?" என்று திகைப்புடன் கேட்டேன்.

"மிராசுதார் சகவரமூர்த்தி உடனே உன்னை வரச் சொன்னார், வருகிறாயா?" என்று கேட்டான் அந்தப் புது ஆள்.

அதற்குள் என் அன்னை அங்கு வரவே அவரிடம் விஷயத்தைச் சொன்னேன். அவர் சற்று நேரம் ஆழ்ந்த சிந்தனையில் அமிழ்ந்திருந்தார். பிறகு அவர் என்னை ஏறிட்டுப் பார்த்தார்.

"துரை! உனக்குப் பயமாக இல்லாவிட்டால், போய் விட்டு வருவதுதான் நல்லது என்று தோன்றுகிறது. உன்னிடம் ஏதோ அப்பாவைப் பற்றிய விஷயம் சொல்ல அவர் விரும்புகிறாரோ என்னவோ? எதற்கும் போய் விட்டு வா. பிறகு பார்த்துக் கொள்ளலாம். அவர் உன்னை என்ன செய்து விட முடியும்?" என்று கூறினார்.

நானும் சம்மதித்துப் புறப்பட்டேன். அந்த ஆளுடன் சென்றேன். மிராசுதார் அவருடைய சொந்த வீட்டில் இறங்கியிருந்தார். முன்பு அதே வீட்டை நான் பார்த்திருக்கிறேன். மிக மோசமாக அழுக்கடைந்து கிடக்கும். இப்போது நன்றாகப் பெருக்கித் துடைத்துச் சுத்தமாக இருந்தது. வீட்டினுள் புகும்வரை எனக்குப் பயமாக இல்லை. அதில் நுழைந்தவுடனே ஏதோ ஒரு திகில் என் நெஞ்சில் புகுந்து கொண்டது. மிகவும் சிரமப்பட்டு உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ள முயன்றேன்.

நான் இவ்வாறு சுமார் ஐந்து நிமிஷ நேரம் என்ன செய்வதென்று தெரியாமல் கூடத்தில் நின்று கொண்டிருந்தேன். சற்றைக்கெல்லாம் நான் அன்று மாட்டு வண்டியில் பார்த்த மனிதர் வந்தார். என்னைப் பார்த்ததும் ஒரு சிரிப்புச் சிரித்து விட்டு உடனே முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டார்.

"நீ வந்தது ரொம்ப நல்லது பையா. வரமாட்டேன் என்று சொல்லி விடுவாயோ என்று நினைத்தேன்!" என்றார் அவர்.

நான் பதில் சொல்லாமல் நின்றேன்.


"உன்னை எதற்காக வரச் சொன்னேன் தெரியுமா?"

"தெரியாது."

"சோமையா! நீ சொல்லவில்லையா இவனிடம்?"

"இல்லை."

"சரி நானே சொல்கிறேன். உன் பெயர் என்ன, சொல்லு?"



"ரங்கதுரை" என்றேன்.

"உனக்கு என்ன வயது ஆகிறது?"

"எனக்கு ஒன்பது முடிந்து பத்துவயது ஆகிறது" என்று கூறினேன்.

"அப்படியா? ரொம்ப நல்லதாகப் போயிற்று. எனக்கு உன் வயதில் வேலை செய்ய ஒரு பையன் தேவையாக இருக்கிறது. நீ என்னிடம் வந்து இருக்கிறாயா?" என்று கேட்டார்.

நான் இதை எதிர்பார்க்கவே இல்லை. என் தந்தையைப் பற்றி ஏதோ பேசப் போகிறார் என்றும், தான் செய்த தவறுக்கு மனம் வருந்தி ஒரு வேளை பணம் கூடக் கொடுப்பார் என்றும், அப்படிக் கொடுத்தால் வாங்கிக் கொள்ள மறுத்து விட வேண்டும் என்றும், வழி யெல்லாம் எண்ணிக்கொண்டே சென்றேன். ஆகவே நான் சிறிதும் எதிர்பார்க்காத விஷயத்தை அவர் கேட்கவே திகைத்துப் போனேன்.

நான் விழித்துக் கொண்டு நிற்கும் போதே அவர், "என்னிடம் உங்க அப்பா நிறையக் கடன்பட்டிருக்கிறார். நான் மனம் வைத்திருந்தால் வீட்டைக் கூட ஜப்தி பண்ணி யிருக்கலாம். ஏதோ பரிதாப உணர்ச்சியினால் நான் அப்படிச் செய்யவில்லை. என்னிடம் வேலை செய்ய வேண்டு மென்று கட்டாயப் படுத்தக் கூட என்னால் முடியும். ஆனால் அப்படிச் செய்ய நான் விரும்பவில்லை. நீ மனப் பூர்வமாகச் சம்மதித்து என்னுடன் வந்து விடு. உனக்கு நான் படிப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். கவலைப்படாதே" என்றார்.

இவ்வளவு அவர் பேசிய பிறகு நான் அவருக்குப் பதில் சொல்லத்தான் வேண்டி இருந்தது.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "எங்கம்மா தனியாக இருக்கிறாளே. அவளை விட்டுவிட்டு என்னால் ஒரு நாளும் வர முடியாது. அவளை யார் பார்த்துக் கொள்வார்கள்?" என்றேன்.


அவர் சிரித்து விட்டு, "உங்க அம்மாவை யாரும் பிடித்துக் கொண்டு போய் விட மாட்டார்கள். மாதா மாதம் இருபத்தைந்து ரூபாய் அவளுக்கு நான் அனுப்புகிறேன. நீ என்னுடன் உடனே புறப்பட்டு வந்துவிடு. இதற்கு நீ யோசிக்க வேண்டியதே இல்லை!" என்று சொன்னார்.

மாதம் இருபத்தைந்து ரூபாய் அம்மாவுக்கு அனுப்புகிறேன் என்று அவர் சொன்னதும் எனக்கு அம்மா படும் கஷ்டங்கள் எல்லாம் வரிசை யாகக் கண் முன்னால் வந்து நின்றன. அந்தக் கணத்தில் அப்படியே அவருடன் போய் விடலாம் என்று கூடச் சபலம் தட்டிற்று. ஆனால் உடனே இவர் என்னை அடியோடு தொலைத்து விடுவார் என்ற எண்ணம் வந்து நின்றது. மேலும் என் அன்னைக்கு என்னை விடப் பணம் பெரிதாக இருக்க முடியாது. ஆகவே நான் கண்டிப்பாய் இதற்கு ஒப்புக் கொள்ளக் கூடாது. மாட்டேன் என்றும் சொல்ல முடியாது. அதனால் அம்மாவிடம் சொல்லி உத்தரவு பெற்றுக் கொண்டு வருவதாகச் சொல்லி விட்டுப் போய் விடுவோம் என்று நினைத்துக் கொண்டு "அம்மாவிடம் சொல்லிப் பார்க்கிறேன்" என்றேன்.

"அம்மாவிடம் சொல்லி என்ன பார்ப்பது? சொல்லி விட்டு வந்து விட வேண்டியது. நீ வரா விட்டால் உன்னை

"பக்த ராமதாஸ்"

சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் இப்பொழுது "பக்த ராமதாஸ்" நாடகம் நடந்து வருகிறது. அக்டோபர் முப்பதாம் தேதி சென்னை தலைமைப் ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் எஸ். ஏ. அய்யா சாமி செட்டியார் இந்த நாடகத்துக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். மேடையில் திரு செட்டியாருக்கு அருகில் நிற்பவர்தான் "நவாப்" வேடம் தாங்கிய திரு டி. எஸ். ராஜ மாணிக்கம் அவர்கள்.



வரவழைத்துக் கொள்ள எனக்குத் தெரியும்'' என்றார் ஈசுவரமூர்த்தி.

எனக்குக் கோபம் வந்தது. மிகவும் துயரமாகவும் இருந்தது.

ஏதோ ஒரு வகையான கதம்ப உணர்ச்சிகளுடன் நான் வீட்டுக்குப் புறப்பட்டேன். வழியில் தமிழ் வாத்தியாரின் நினைவு வந்தது. நேரே அவர் வீட்டுக்குச் சென்றேன். அவர் வாசல் திண்ணையில் உட்கார்ந்து திருவாசகம் படித்துக் கொண்டிருந்தார். என் தோற்றத்தைப் பார்த்த உடனேயே அவருக்கு நான் மிக்க கவலையோடு வருகிறேனென்று தெரிந்து விட்டது.

"ஏன் முகத்தைத் தூக்கிக் கொண்டு வருகிறாய் ரங்கதுரை?'' என்று பரிவுடன் கேட்டார்.

நான் விஷயத்தை விவரமாகக் கூறினேன். வாத்தியாரய்யா அதைக் கேட்டு மலைத்துப் போனார்.

அத்தியாயம் 11

அன்னையின் ஆறுதல்

தமிழ் வாத்தியாரால் சிறிது நேரம் நான் கூறியவைகளையெல்லாம் நம்பவே முடியவில்லை.

"நீ ஏன் அவன் கூப்பிட்டதும் போனாய் ரங்கா? இப்படி ஒரு அரட்டுக் காரியம் செய்யலாமா? நான் ஈசுவரமூர்த்தியைப் பற்றி எவ்வளவு சொன்னேன். அவன் பஞ்ச மகா பாதகங்களுக்கெல்லாம் அஞ்சாதவன் என்று சொல்லவில்லையா? அதற்குப் பிறகுமா உனக்குத் தெரியவில்லை? உன் அம்மா எப்படி இதற்குச் சம்மதித்தாள்?'' என்று வியப்புடன் கேட்டார்.

"அம்மா வேறு விதமாக நினைத்து என்னைப் போகச் சொன்னாள். அப்பாவைப் பற்றி ஏதேனும் சமாசாரம் தெரியும் என்று தோன்றியிருக்கும். இப்படி அவர் சொல்வாரென்று யார் தான் எதிர்பார்க்க முடியும்?'' என்றேன்.

தமிழ் வாத்தியார் சிறிது நேரம் ஆழ்ந்து யோசித்து விட்டு, "இப்போது ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை, ரங்கா. நீ அங்கே போக வேண்டாம். அவ்வளவுதான். அவர் என்ன தான் செய்கிறாரென்று பார்த்து விடுவோம். நீ தைரியமாக இரு'' என்று கூறினார்.

அதன் பிறகு நான் வீட்டுக்குச் சென்றேன். என் அன்னையிடம் இந்த விவரங்களைச் சொன்னபோதே பல தடவைகள் கண்ணீர் விட்டு விட்டார். என்னைச் சேர்த்து அணைத்துக் கொண்டு விம்மினார். "ரங்கா! இப்படிச் சொல்லுவான் அந்தப் பாதகன் என்று நான் அறிந்திருந்தால் உன்னைப் போகச் சொல்லியிருக்கவே மாட்டேனே'' என்று புலம்பினார்.

நான் அவரைத் தேற்றினேன்.

"இப்போது என்ன அம்மா ஆகிவிட்டது? நம்முடைய இஷ்டமில்லாமல் அவரால் என்ன செய்துவிட முடியும்? தமிழ் வாத்தியார்கூட அதைத்தான் சொன்னார். மறுபடியும் அங்கே போக வேண்டாம் என்று கூறினார். நீ ஏன் அனாவசியமாக அழுகிறாய்?'' என்றேன்.

"ஆமாண்டா, கண்ணு! இந்தக் கொடுமைக்கு நாம் உடன்படவே கூடாது. அதை நினைத்தாலே எனக்குப் பகீரென்கிறது. நீ இல்லாமல் என்னால் உயிர் வாழவே முடியாது. அந்த மகா பாதகன் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறானோ தெரியவில்லையே. முதலில் அவருக்கு உலை வைத்தான். இப்போது உனக்கு வைக்கிறானே. அவன் பாழும் நரகத்துக்குத்தான் போவான்'' என்று அவரைச் சபித்தார்.

நான் சிரித்து விட்டேன்.

"என்ன ரங்கா சிரிக்கிறாய்?''

"இல்லை அம்மா. அவர் எல்லோரும் போகிற நரகத்துக்குக் கூடப் போகாமல் பாழும் நரகத்துக்குத்தான் போக வேண்டுமா? போனால் போகட்டும். வெறும் நரகம் போதும் அம்மா!'' என்று விளையாட்டாகக் கூறினேன்.

"என்ன பரிகாசம் வேண்டிக் கிடக்கிறது ரங்கா. அவன் பாழும் நரகத்துக்குப் போனால் என்ன? அல்லது அவனுக்கு என்று புதிதாக நிர்மாணித்தால் தான் எனக்கென்ன? உன்னை ஒன்றும் செய்யாமலிருந்தால் போதும் எனக்கு'' என்றார் என் அன்னை.

"அம்மா! நான் ஒன்று சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டாயே?''

"என்னப்பா? சொல்லேன்.''

"ஒன்றுமில்லை அம்மா. அப்பாவுக்குத் தான் அவரிடம் நிறையக் கடன் இருக்கிறதே. அதை அடைப்பதற்குத்தானே நான் வேலை செய்ய வேண்டுமென்று ஈசுவர மூர்த்தி சொல்கிறார். நம்மால் அதைப் பணம் கொடுத்து என்றும் அடைக்க முடியப் போவதில்லை. ஆகவே

நான் வேலை செய்து அப்பாவின் கடனை அடைத்து விட்டால் என்ன? அது என் கடமை அல்லவா? அதன் பிறகு......"

"ரங்கா! நிறுத்து. உங்கப்பா கடன் பட்டபோது நம்மைக் கேட்டுக் கொண்டா பட்டார்? போதும். நீ உளறாதே. எது கடமை எது இல்லை என்று எனக்கும் தெரியும். நீ சம்பாதிக்கும் காலத்தில் இரண்டு பங்காகத் திருப்பிக் கொடுத்து விடலாம். அதைப் பற்றி இப்போது கவலைப்படாதே" என்றார்.


"இல்லை அம்மா! அதற்குச் சொல்லவில்லை. நாம் கொடுக்கும் வரையில் அவர் காத்துக் கொண்டிருப்பாரா? அப்பாவைப் பற்றி நாலு இடங்களில் தூற்ற மாட்டாரா? அப்பா சிறையிலிருப்பதே எனக்கு மிகவும் துயரமாக இருக்கிறது. அவருக்குக் கடனாளி என்று வேறு ஒரு பட்டம் எதற்காக இருக்க வேண்டும்? அப்பா பட்ட கடனைப் பிள்ளை கழித்து விட்டான் என்றாவது எல்லாரும் சொன்னால் அப்பாவின் மனம், கொஞ்சம் ஆறுதல் அடையாதா என்று தோன்றுகிறது. அதற்காகத் நான் சொன்னேன், அம்மா!"

"ரொம்ப நன்றாக இருக்கிறது, ரங்கா நீ பேசுவது! என் கனவுகளை யெல்லாம் சிதற அடித்து விடாதே. நீ படித்துப் பெரிய உத்தியோ......"

"ஏம்மா? படிப்பு எங்கே ஓடிப் போய் விடுகிறது. இரண்டு வருஷம் வேலை செய்து விட்டுப் படிக்கிறேன். அவர் தான் என்னைப் படிக்க வைக்கிறேன் என்று சொன்னாரே."

"ஏன் ரங்கா? உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா? என்னை விட்டு விட்டுப் போகிறேன் என்கிறாயா? நான் அதற்குப் பிறகு எதற்காக உயிரோடு இருக்க வேண்டும்!" என்று உணர்ச்சியுடன் கூறி விட்டு விம்மி அழுதார் என் அருமை அன்னை.

"அம்மா! நீ போக வேண்டாம் என்று சொன்னால் நான் போய் விடுவேனா? உன் வார்த்தையை மீறி நான் எப்போதாவது நடந்திருக்கிறேனா? நீ எதற்காக



அழுகிருய்? உன் சொல்லை மீறி நான் என்றும் நடக்க மாட்டேன். நீ கவலைப் பட வேண்டாம். நீ போகக் கூடாது என்ருல் நான் போகவில்லை. எனக்கு என் மனசில் தோன்றியதைச் சொன் னேன்'' என்றேன்.

என் அன்னையின் விம்மல்கள் அதிக மாயின. அவருடைய துயரத்தைப் பார்க்கும்போது எனக்கும் கொஞ்சம் வருத்தமாக இருந்தது.

அவரை மறுபடியும் சமாதானப் படுத்த முயன்றேன்.


''அம்மா! நீ அழுதால் எனக்கும் ரொம்ப வருத்தமாக இருக்கிறது!'' என்று கூறினன்.

''ரங்கா! நான் வருத்தத்தினுல் அழ வில்லை. அப்பாவிடம் நீ இவ்வளவு அன்பும், அவருடைய கௌரவத்தில் இவ்வளவு சிரத்தையும் வைத்திருக் கிருய் என்று எனக்கு இத்தனை நாளாகத் தெரியாது. அதனுல் பொங்கி வந்த ஆனந்தக் கண்ணீர் இது ரங்கா. நீ வருத்தப்படாதே. அவர் வைத்துப் போன கடனை எப்படியாவது அடைக்க வேண்டுமென்ற ஆசை உன் மனத்தில் எப்படிப் புகுந்ததென்று வியப்பாக இருக்கிறது. பெருமையாகவும் இருக் கிறது, கண்ணு!''

எனக்குக் கூச்சமாக இருந்தது. பதில் சொல்லவில்லை.

சற்றுப் பொறுத்து அவரே, ''ரங்கா! நீ தமிழ் வாத்தியாரிடம் யோசனை கேட்டுக் கொள். அவரை நமக்காகத் தான் இறைவன் அனுப்பி இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. இனி எது வாக இருந்தாலும் அவரைக் கேட்கா மல் செய்யாதே. முதலிலேயே அவரிடம் யோசனை கேட்டிருந்தால் இப்படி ஒரு அசந்தர்ப்பமான விஷயம் நடந்தே யிருக்காது. போனுல் போகட்டும். நீ உன் வேலையைக் கவனி'' என்று சொல்லி விட்டுத் தன் காரியங்களைப் பார்க்கத் தொடங்கினர்.

மறுநாள் தமிழ் வாத்தியார் என் அன்னையிடம் பேசுவதற்காக எங்கள் வீட்டுக்கு வந்தார். என் தாயார் அவ



ரிடம் நான் சொன்னதை யெல்லாம் விரிவாகக் கூறினார்.

வாத்தியார் ஐயாவின் மனம் முதலில் கொஞ்சம் இளகத்தான் செய்தது. உடனே முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு "ரங்கா, உனக்கு மூளை சரியாகத்தானே இருக்கிறது. அவனோடு நீ போய் இருப்பதைவிட உன்னை நானே சிறையில் தள்ளிப் பூட்டி விடலாம். ஏன் இப்படி யெல்லாம் பேசுகிறாய்? உனக்கு எவ்வளவோ தடவை நான் சொல்லியாகி விட்டது. சகுவர மூர்த்தி உன்னை எதற்காகக் கூப்பிடுகிறான் தெரியுமா?" என்று கேட்டார்.

"வேலை செய்ய, ஸார்!"

"அதுதான் தெரிகிறதே. என்ன விதமான வேலை?"

"அதை எனக்கு அவர் சொல்லி விடுவாரா ஸார்?"

"அவர் சொல்லா விட்டால் போகட்டும். நான் சொல்கிறேன். இந்த மாதிரி மனிதர்கள், உன்னைப் போன்ற சமர்த்துக் குழந்தைகளைப் பிடித்து நன்றாகப் பழக்கம் செய்து கொடுத்துத் தவறான காரியங்கள் செய்ய வைப்பார்கள். கடைசியில் எதிலாவது மாட்டிக் கொண்டு விட்டால் காப்பாற்றவே மாட்டார்கள். ஒன்றுமே நடக்காத மாதிரி இருந்து விடுவார்கள். தங்களுக்குச் சம்பந்தமே இல்லை என்று எப்படியாவது நிரூபித்து விடுவார்கள். ஜாக்கிரதை! உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமென நான் இதைச் சொன்னேன்" என்றார்.

"இப்படியும் ஒரு அநியாயம் உண்டா ஐயா உலகத்தில்? அவர் உண்மையிலேயே வேலைக்குத்தான் கூப்பிடுகிறார் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்" என்று கூறினார் என் அன்னை.

"உலகம் நீங்கள் அறிந்து கொண்டிருப்பதை விடப் பொல்லாதது அம்மா! உங்கள் தைரியத்தினால் தான் ரங்கதுரை பெரியவனாகி அமோகமாக வர வேண்டும். நீங்கள் கவலைப்பட வேண்டாம். சகுவரமூர்த்தியின் கண்களில் படாமல் ரங்கதுரை இருக்க வேண்டியது. அது ஒன்று தான் இப்போது நாம் செய்ய முடிகிற விஷயம். நாளை ஆள் வந்தாலும் அவன் இல்லை என்று கூறி விடுங்கள்" என்று சொல்லிவிட்டு வாத்தியார் ஐயா போய் விட்டார்.

அதே மாதிரி மறுநாள் ஒரு ஆள் வந்தான். அவன் உடனே ரங்கதுரையை சகுவரமூர்த்தி அழைத்துக் கொண்டுவரச் சொன்னதாகக் கூறினான்.

என் அன்னை நிச்சயமாக மறுத்து விட்டார்கள். "ரங்கதுரை ரொம்பக் குழந்தை. அவனால் வேலை ஒன்றும் செய்ய முடியாது. அவனை அனுப்பச் சௌகரியமில்லை என்று மிராசுதாரிடம் சொல்லி விடுங்கள்" என்றார். வந்த ஆளும் திரும்பிச் சென்று விட்டான். ஆனால் எனக்கு மனம் சமாதானமடையவே இல்லை. ஏதாவது விபரீதம் நடந்து விடுமோ என்ற கவலை என்னுடைய உள்ளத்தை அரித்துக் கொண்டே இருந்தது.

அதற்குப் பிறகு சில நாட்கள் ஒன்றும் நடக்கவில்லை. பத்து நாட்களுக்குப் பின் மிராசுதார் சகுவரமூர்த்தி ஊருக்குப் போய் விட்டார் என்று கேள்விப் பட்டேன். அதன் பிறகுதான் என் மனம் சமாதானமடைந்தது.

அவர் ஊருக்குப் போய்விட்டாரா என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்வதற்காக நான் உடனே அவருடைய வீட்டுப் பக்கம் சென்றேன். வாசலில் பெரிய பூட்டு தொங்கியது. நல்ல வேளையாக அவர் என்னை அடியோடு மறந்து விட்டார் என்று எண்ணிக்கொண்டே வீடு வந்து சேர்ந்தேன்.

என் அன்னையிடம் "அம்மா! சகுவரமூர்த்தி ஊருக்குப் போய் விட்டார். இனிமேல் நீ கொஞ்சங் கூடக் கவலைப்பட வேண்டாம்" என்றேன்.

அவருடைய முகம் தெளிவடைந்தது.

"நிஜமாகவா துரை? அவன் மகாராஜனாக இருக்கட்டும்" என்றார். அவர் என்னை அழைத்துக் கொண்டு போகவில்லை என்பதனால் அம்மாவுக்கு, சகுவரமூர்த்தி என் தந்தையைச் சிறையில் தள்ளியதுகூட மறந்து விட்டது.

நான் சிரித்தேன். "பத்து நாளைக்கு முன்னால் பாழும் நரகத்துக்குப் போக வேண்டுமென்று சபித்தாயே. அதற்குள் மறந்து போய் விட்டதா?" என்றேன்.

"நான் சொல்வதற்காக என்ன நடக்கப் போகிறது துரை? எல்லாவற்றையும் இறைவன் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார். அவருக்கு யாரை என்ன செய்ய வேண்டுமென்று தெரியும். உன்னை அவர் ஒரு குறையும் இல்லாமல் வைப்பார். அதில் சந்தேகமே இல்லை" என்றார்.

அவர் அப்போதும் அப்படித்தான் சொன்னார். ஒரு குறைக்கு மேல், இன்னொரு குறையாக வந்து நாங்கள் திக்குமுக்காடிய போதும் அதையே சொன்னார். இன்று, இத்தனைத் துயரங்களுக்கும் இடையே அவருடைய வார்த்தைகள் எனக்குத் துணையாக நிற்கின்றன.

(தொடரும்)

சிவன் கீர்த்தனைகள்

ஸ்வர அமைப்பு: செம்மங்குடி சீனிவாச ஐயர்

கீர்த்தனை 10. ராகம்: முகாரி ஆதி தாளம்

பல்லவி

சிவ - காம ஸுந்தரி
ஜகதம்பா வந்தருள் தந்தருள் (சிவகாம)

அனுபல்லவி

பவ ரோக மறவேறு மருந்தேது
பழ வினைகள் தொடராமல் உனைபஜிக்க (சிவகாம)

சரணம்

கேளாயோ என்முறைகள் (திருச்செவியில்)
கேளாயோ என்முறைகள் உயர்வாம
கீத வினோதினி போதுமுன் சோதனை
நானேனோ அகதிநானோ ராம
தாஸன் பணியும் அபிராமி வாமி (சிவகாம)

முகாரி ராகம், 20-வது மேளமாகிற நட பைரவியில் பிறந்தது.

ஆரோஹணம்: ஸ ரி ம ப நி *த ஸ்
அவரோஹணம்: ஸ் நி த ப ம க ரி ஸ

சதுச்ருதி ரிஷபம், ஸாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சுத்த தைவதமும், சதுச்ருதி தைவதமும், கைசிகி நிஷாதம்.

பாஷாங்க ராகம். அன்யஸ்வரம் சதுச்ருதி தைவதம், * இந்த அடையாளம் சதுச்ருதி தைவதத்தைக் குறிக்கும்.

பல்லவி — 1 களை

; ; ; ; ; ; ; ;	; ; ; ;	; ; தா பா
. . . .	. . . .	. . சி வ
1 ப ம கா ரீ ஸா ; ரீ ; மா	பா ; ; ;	; ; தா பா
கா - - - ம ஸு ந்த	ரீ - - -	- - சி வ
2 ப ம கா ரீ ரிக ஸா ரீ ; மா	பா ; ; ;	; ; ரீ மா
கா - - - ம - - ஸு ந்த	ரீ - - -	- - ஜ க
பா ; ; பா பா நீ *தா ஸ்ா	; ரி ஸ் நீ தா	பா ; நி த பா
தம் பா வ - ந்த ருன்	த - - ந்த	ருன் - சி - வ
3 ம ப த ப ப ம க ரி ஸா ம க ரீ மா	பா ; ; ;	; ; ரீ மா
கா - - - - - - - ம ஸு - - ந்த	ரீ - - -	- - ஜ க
பா நீ நி *த *தமா, பா நீ *தா ஸ்ா	; ரி ரி ஸ் நி தா	பா ; ஸ் நி த ப
தம் - - - பா - வ - ந்த - ருன்	தந் - - - த	ருன் சி - வ -
4 ரி ம பாதப பமகரி ஸா ரீ ; மா	பா ; ; ;	; ; ரீ மா
கா - - - - - - - - ம ஸு ந்த	ரீ - -	- - ஜ க
பா நீ நி *த *தமா, பா நீ *தா ஸ்ா	; ஸ்ாரிஸ் நீ தா	பா ; ம ப நி த
தம் - - - பா - வ - ந்த ருன்	த - - - ந்த	ருன் - சி - வ -
5 த ப ப ம க ரி ரிக ஸா ரீபம க ரி மா	பா ; ; ;	; ; ; ;
கா - - - - - - ம - - ஸு - - - - ந்த	ரீ - - -	- - - -

அனுபல்லவி

; ; ; ; ; ; ; ;	; ; ; ;	; ; ஸ்ா ஸ்ா
. . . .	. . . .	. . ப வ
ஸ்ா நீ *தா பா *தா ஸ்ா ; ஸ்ா	ரி ரி ; ரி	; ரி *த ஸ் ரி க்
ரோ - க ம ற வே று	ம ரு ந்தே	து ப - வ -

2 ரி ஸ் நீ தா பா தா ஸா ; ஸா | ஸ் ரி ம் கா ரி ரீ | ; ரீ த ஸ் ரி க் ||
ரோ - - க ம ற வே று | ம - ரு - - க்தே | து ப - வ -

3 ரி ஸ் நீ தா பா தா ஸா ; ஸா | ஸ் ரி ரீ ப் ம் ம் க் | , ரி ரீ தா ஸா ||
ரோ - - க ம ற வே று | ம - ரு - - க்தே - | - து ப மு

1 ரிக்ரீ ஸா ஸா ஸ்த தரி ஸ் நி தா பா | மா பா தா பா | ; பா தா ஸா ||
வி - - னை கள் தொ - ட - ரா - - மல் | உ னை ப தி | க்க ப மு

2 ரி ம் க் ரி ஸா த ஸ் ரி க் ரி ஸ் நீ தப | ம ப நீ தா பா | ; த ம ம ப நி த ||
வி - னை - கள் தொ - ட - ரா - - மல் - | உ - னை ப தி | க்க - சி - வ -

த ப ப ம க ரி ரி க ஸா ரீபம க ரி மா | பா ; ; ; | ; ; ; ; ||
கா - - - - - - ம - - ஸா - - - - - க்த | நீ - - - | - - ; ;

சரணம்

1 நீ , த பா ; ம க ரீ மா ; | பா நீ தா த ரி | ஸ் நி தா பா மா ||
கே - ளா யோ - - எ ன் | மு றை கள் தி - | ரு - ச்செ வி யில்

2 நீ , த பா த ப ம க ரி ரி மா ; | பா நீ த ரி ஸ் நி | தா பா ; ப ம ||
கே - ளா - - யோ - - - என் | மு றை கள் . உ - | யர் ஸா ம -

மா பா தா பா ப ம கா ரீ ஸா | ரீ ; மா மா | நீ , த தா பா ||
இ - த வி னை - - தி னி | போ து முன் | சே ா . த னை

ஸா , நி நி த தா ஸா ; ஸா ரீ | ப் ம் ம் கா ரி ரீ | ; ரி ஸ்நித தமா, ||
தா - னே - - னே அ க | தி - நா - - னே | ரா - - . ம -

பா தா ஸா ரீ கா ரீ த ஸ் ரி க் | ரி ஸ் நி த பா பம | க ரி க ஸ ரீ மா ||
தா - ஸன் ப ணி யும் அ - பி - | ரா - - - மி வா - | - - மி - சி வ

ப ரி ஸ் நி த ப ம க ரி ஸ ரீபம க ரி மா | பா ; ; ; | ; ; ; ; ||
கா - - - - - ம - - - ஸா - - க்த | நீ - - - | - - - -

டி. கே. சி. யின் கடிதங்கள்

திருக்குற்றாலம்
25—8—50

அருமை......

பாடல்களையும் விஷயங்களையும் பலருக்கு இப்படி அனுபவிக்க முடிகிறதில்லை. அதனால் அவர்களிடம் பாடலைச் சொல்வதை விட்டு விட்டு விழலுக்குத் தண்ணீர் கமலை போட்டு இறைக்கலாம்............ போன்ற நண்பர்களிடம் சொல்ல ஆரம்பிக்க வேண்டியது தான். பாடலுக்கு மத்தாப்பு வெளிச்சங்கள் எங்கிருந்தெல்லாமோ வந்து விடும். எப்படி இதெல்லாம் வந்தது என்று நானே ஆச்சரியப்பட வேண்டி யிருக்கும்.


பாஷையோ பாடலோ வேறு எந்தக் கலையானாலும் சரி. அனுபவிக்கிறவர்களை நோக்கியே எழுவது: பசுவுக்குப் பால், கன்றை நோக்கிச் சுரப்பது போலத்தான். கம்பரது கவிதா காமதேனுவுக்கு எத்தனையோ ரஸிகக் கன்றுகள் இருந்திருக்க வேண்டும். அல்லாத பக்ஷம்,

"மாரர் உளரோ இருவர்
ஒருலகில் வாழ் வார்;
வீரர் உளரோ அவரின்
வில் வலியின் வல் லார்;
ஆரொருவர் அன்னவரை
ஒப்பவர்கள் ஐ யா;—
ஒ ரொரு வ ரே இறைவர்
மூவரையும் ஒப் பார்"

என்று சூர்ப்பணகை வாயிலிருந்து வரச் செய்ய முடியுமா? கடாக்ஷம் கடாக்ஷம் என்பதெல்லாம் ரஸிகர்களுடைய ஆனந்தத்தோடும் வியப்போடும் மலரும் கண்கள்தான்.

டி. கே. சிதம்பரநாதன்

நாடும் நேரமும்




. . . தொழிற்சாலைகளில்

விநாடிவரை நேரத்தில் கவனிப்பு வைக்க வேண்டியது அத்தியாவசியம்

இயற்கைச் செல்வத்தால் முன்னேறிச் செல்லும் நம் நாடு தொழிலைப் பெருக்குவதிலும், அபிவிருத்தி செய்வதிலும் ஈடுபட்டிருக்கிறது. இதன் நோக்கம் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கு மட்டுமல்ல. மேலும் நம் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குமே யாகும்.


பட்டறை, மில் அல்லது தொழிற்சாலை இவைகளில் நேரக் கண்காணிப்பு மிகவும் அவசியம். ஏனெனில் தொழிற்சாலை ஸ்தாபனங்களின் வெற்றி கடுமையான நேரக் கண்காணிப்பில்தான் இருக்கிறது. இதற்கு ஸ்விஸ் ஜீவல்ட்-லீவர் கடிகாரம் ஒரு சிறந்த வழிகாட்டியாகும்.



ஸ்விஸ் ஜுவல்ட்-லீவர் கடிகாரம் தான் நீங்கள் செலவு செய்யும் பணத்திற்குச் சரியான பெறுமானம்

ஸ்விட்ஸர்லாந்து கடிகாரத்தயாரிப்பாளர்கள்

PHILIS TAM.




வட இந்திய யாத்திரை...... 17

ஜயலக்ஷ்மி, வெற்றித் தேவி யாரை மனம் உவந்து நேசிப்பாள் தெரியுமா! உயிரையும் திரணமாக மதித்து உழைக்கும் உத்தமர்களைத் தான் நேசிப்பாள். அவள் ஒவ்வொரு கணமும் தன்னை விரும்புபவர்களைச் சோதனை செய்து கொண்டே இருப்பாள். அவள் சோதனையைக் கண்டு பயந்து விடாமல் நிமிர்ந்த மார்புடன் பணிபுரியும் மக்களுக்குத்தான் அவள் பரிபூரண கடாட்சம் கிடைக்கும்.

இது இந்தக் காலத்தில் மட்டுமல்ல. ஆதி நாளிலும் அப்படித்தான். நம் நாட்டில் மட்டுமல்ல, எல்லா நாடுகளிலும் வெற்றித் தேவியின் விளையாட்டு ஒரே மாதிரிதான்.

பக்ரா அணை ஜயலக்ஷ்மி கொலுவீற்றிருக்கும் திருக்கோயில் அல்லவா! வெற்றித்தேவி வீர நடனம் புரியும் புனித ஆலயம் அல்லவா!

ஜயலக்ஷ்மி வாசம் செய்யும் மகோன்னதமான பக்ரா அணையைக் கட்டும்போது வெடி வெடிப்பதும் பாறைகள் ஆகாயத்தில் பறப்பதும், அதைக் கண்டு மக்கள் சிந்தை குலையாமல் செயல்புரிவதும் வெற்றித்தேவி தன்னை விரும்புபவர்களுக்கு இடும் வீரத் திருப்பணிகள்.

'டுமீர்' என்ற சத்தம் கேட்டதும் மலைப் பாறைகள் பறந்ததையும் மக்கள் சிதறி ஓடியதையும் பார்த்துத் திகைத்தோமல்லவா! இவைகள் எல்லாம் பக்ரா அணை கட்டும் இடத்தில் அடிக்கடி நிகழக்கூடிய சம்பவங்கள். எங்களுக்கு அது புதிதாக இருந்ததால் எல்லாரும் ஒருகணம் திகைத்து விட்டோம்.

இன்ஜினீயர், "மலைப் பாறைகளை வெடி வைத்துப் பிளக்கிறார்கள்! அவ்வளவுதான்" என்று சர்வ சாதாரணமாக விஷயத்தை விளக்கிச் சொல்லிவிட்டு மேலே பக்ரா அணையைப் பற்றிய விவரங்களைக் கூற ஆரம்பித்தார்.

* * *

சென்ற அத்தியாயங்களில் சிமெண்ட் ஆராய்ச்சி சாலையில் எந்த மாதிரி சிமெண்டை பக்ரா அணைக்கு உபயோகிக்க வேண்டும் என்று முடிவு கட்டியிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டிருந்தோ மல்லவா! அவ்வாறு சிமெண்டை நாற்பத்து மூன்று டிகிரிக்குக் குளிரச் செய்து அப்படிக் குளிரச் செய்த சிமெண்டைத்தான் அணைகட்ட உபயோகிக்க வேண்டும் என்ற விவரங்களையும் தெரிந்து கொண்டிருக்கிறோம். அப்படி நாற்பத்துமூன்று டிகிரிக்குச் சிமெண்டைக் குளிரச் செய்யும் இயந்திரமும், கூழாங்கற்களைப் பொடி செய்து சிமெண்டோடு கலக்கும் இயந்திரமும் ராட்சஸ உருவத்தில் அங்கு இருக்கின்றன. அந்த இயந்திரங்கள் கண்மூடிக் கண் திறப்பதற்குள் சிமெண்டையும் மணலையும், சிறு கருங்கற்களையும் சேர்த்து ஒன்றாகக் கலந்து விடுகின்றன. அவ்வாறு கலந்த சிமெண்ட் கலவையை அடுத்த கணமே நாற்பத்துமூன்று டிகிரிக்குக் குளிரச் செய்து மணிக்கு நானூறு டன் சிமெண்ட் வீதம் பக்ரா அணை அஸ்திவாரத்தில் கொண்டு கொட்டிக் கொண்டே இருக்கிறது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத் தொன்பதாம் ஆண்டு அதாவது இன்னும் நாலு வருஷங்களுக்குப் பிறகு இந்த அணையின் வேலை முடிந்துவிடும். இந்த அணையில் தண்ணீர் தேங்கி நிற்க ஆரம்பித்து விடும். அப்படி பக்ரா அணையில் தண்ணீர் தேங்கி நிற்கும் போது அந்தத் தண்ணீருக்கு அடியில் சுமார் நானூறு கிராமங்கள் மூழ்கிவிடும். அந்தக் கிராமங்களில் வாழும் முப்பதினாயிரம் மக்கள் கிராமங்களைக் காலி செய்து விட்டு வேறு இடங்களில் குடியேற வேண்டும்.

அதற்காக அந்தக் கிராமத்தில் உள்ளவர்களுக்கு வேண்டிய நஷ்டஈட்டுத் தொகைகளை வழங்கி விட்டார்கள். கிராமம் கிராமமாகக் காலி செய்து விட்டு மக்கள் வெளியேறுகிறார்கள். பக்ரா என்னும் கிராமம் தன்னுடைய பெயரை மட்டும் அணைக்கு வழங்கி விட்டுப் பலநூறு அடி ஆழத்தில் பக்ரா அணை தண்ணீரில் அமுங்கி விடுமாம். பக்ரா அணை கட்டும் திருப்பணியில் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த உத்தமத் தொழிலாளர்களைப் போலவே இந்தக் கிராமங்களும் தங்களைத் தியாகம் செய்து கொள்கின்றன. இப்படிப் பல தியாகத்தின் மூலம் பக்ரா அவ்வளவு உலகப் புகழ் அல்லவா பெற்று விட்டது.

பக்ரா அணையில் எவ்வளவு தூரம் தண்ணீர் தேங்கி நிற்கும் தெரியுமா! சென்னையிலிருந்து விழுப்புரம் வரையில் உள்ள தூரத்துக்குத் தண்ணீர் தேங்கி நின்றால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். சுமார் நூறு மைல் நீளத்துக்குச் சமுத்திரம் போலத் தண்ணீர் தேங்கி அலைமோதிக் கொண்டு நிற்கும். இந்த அணையில் தேங்கும் தண்ணீரைக் கொண்டு ஒரு கோடி ஏக்கர் நிலத்தைத் திருத்திப் பயன்படுத்தலாம்.

இந்தத் தண்ணீரின் சக்தியைப் பிடித்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக அணையின் இருபுறங்களிலும், அருவி மின்சார நிலையங்கள் அமைத்து வருகிறார்கள். பத்து மின்சார இயந்திரங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்யப் போகின்றன. ஒரு மின்சார இயந்திரம் மட்டும் தொண்ணூறு ஆயிரம் கிலோவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும்.

மின்சார சக்தியின் அதிசயத்தைக் கேட்டால் தலை சுற்றச் செய்கிறது. ஒரு திடமான மனிதன் ஓய்வு ஒழிவு இன்றி மூன்று நாள் செய்

யும் வேலையை ஒரு கிலோவாட் மின்சாரம் ஒரு மணி நேரத்தில் செய்து விடுமாம். பக்ரா அணையில் உற்பத்தியாகும் மின்சாரத்தைக் கொண்டு இந்த தேசத்தையே பொன் கொழிக்கும் பூமியாக மாற்றிவிடலாமே! அதில் உற்பத்தியாகும் மின்சாரத்தை உபயோகிப்பதற்காக வேண்டி அங்கு பல தொழிற்சாலைகளும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எரு உற்பத்தித் தொழிற்சாலை, சர்க்கரை உற்பத்தித் தொழிற்சாலை, இன்னும் பலவிதமான சாமான்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் கட்டுவதற்கு வேண்டிய எல்லாப் பூர்வாங்க ஏற்பாடுகளும் செய்து விட்டார்கள்.

பக்ரா அணைத் தண்ணீரை உபயோகப் படுத்துவதற்காகப் பல ஆயிரம் மைல் நீளமுள்ள கால்வாய்கள் வெட்டி அவற்றின் வழியாகத் தண்ணீரைக் கொண்டு போய்ப் பல லட்சம் ஏக்ரா நிலத்தைப் பயன் படுத்தப் போகிறார்கள். ராஜஸ்தான் பாலைவனத்தைச் சோலை வனமாக்கப் போகிறார்கள். ராஜஸ்தான் மக்களின் வாழ்க்கையே அதன் மூலம் மாறிவிடப் போகிறது. அவர்கள் பஞ்சமும் பசியும், பக்ரா கால்வாய்த் தண்ணீரில் கரைந்து விடப் போகின்றன. பாரதம் சுதந்திரம் பெற்ற பலனை அவர்கள் அனுபவித்து மகிழப்போகிறார்கள். பக்ரா கால்வாய்களின் கரையில் பத்து லட்சம் ஜனத்தொகையுள்ள முப்பது அழகான நகரங்கள் உண்டாவதற்கு வசதியிருக்கிறதாம்.

பக்ரா நங்கல் கால்வாய்த் தண்ணீரை உபயோகிப்பதன் மூலம் ஆண்டு தோறும் பாரத சர்க்காருக்கு நூற்றுமுப்பத்து இரண்டு கோடி ரூபாய் வருமானம் கிடைக்கப் போகிறது. பஞ்சாப் சர்க்காருக்கு மட்டும் தண்ணீர் வரியாக மூன்று கோடி ரூபாய் கிடைக்கும். முப்பது லட்சம் ஏழை அகதிக் குடும்பங்களுக்கு இந்தக் கால்வாய்த் தண்ணீர் வேலை கொடுத்து உதவும்.

காசிக்கும், ராமேசுவரத்துக்கும், இமய மலையில் உள்ள புனித ஸ்தலங்களுக்கும் செல்வது போலப் பக்ரா அணையும் புனித யாத்திரை ஸ்தலமாகத் திகழப் போகிறது. பாரத அன்னை பக்ரா அணையின் மூலம் எத்தனையோ வகையில் எழில் பெற்றுப் புகழுடன் விளங்கப் போகிறாள். பக்ரா அணை பாரதத் தாய்க்கு ஒரு மாபெரும் வெற்றியாகும்.

பாலைவனத்துக்குத் தண்ணீர்!



அமெரிக்க இன்ஜினீயர்கள்

இந்த விஷயங்களை எல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டோம். என்ன தெரிந்து கொண்டாலும் இந்தமாதிரிப் புள்ளி விவரங்களை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு சொல்லுவதென்பது சாதாரணகாரியமா! எத்தனையோ முக்கியமான விஷயங்கள் விடப்பட்டுப் போயிருக்கும். ஆனாலும் பக்ரா அணையின் சிறப்பை, அதன் இணையற்ற புகழை அதனால் எல்லாம் குறைவாக மதிப்பிடவே முடியாது.

பக்ரா நங்கல் சாதனையை அமைப்பதற்கு எவ்வளவு ரூபாய் செலவு செய்யப் போகிறார்கள் தெரியுமா! நூற்று அறுபது கோடிக்கு மேல் செலவு ஆகும் என்று திட்டம் வகுத்திருக்கிறார்கள். போட்ட திட்டத்துக்குள் பக்ரா-நங்கல் சாதனை முடிந்து விடும் என்று இன்ஜினீயர்கள் நம்புகிறார்கள்.

பக்ரா அணையைக் கட்டுவதற்காக நாற்பது புகழ்பெற்ற அமெரிக்க இன்ஜினீயர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆலோசனைகள் பேரில்தான் பக்ரா அணை கட்டப்பட்டு வருகிறது. ஆனாலும் நமது நாட்டு இன்ஜினீயர்கள் தான் உண்மையாகவே அங்கு வேலை செய்து வருகிறார்கள். அமெரிக்க இன்ஜினீயர்களுக்கெல்லாம் தாராளமாகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் அவர்கள் அமெரிக்காவில் பெறும் ஊதியத்தைவிட மிகக் குறைவானதாம். சுதந்திர இந்தியாவுக்கு உதவி புரியும் வகையில் அவர்கள் குறைந்த சம்பளத்தில் தொண்டாற்



றுகிறார்களாம். அப்படி மிகக் குறைந்த சம்பளத்தில் தொண்டாற்றும் அமெரிக்க இன்ஜினீயர்களின் சம்பளத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். எல்லாருடைய சம்பளப் பட்டியலையும் கொடுத்து பேர்களைத் நிரை அடிக்கும் விருப்பமில்லை. அமெரிக்க இன்ஜினீயர்களின் தலைமை இன்ஜினீயரின் சம்பளத்தை மட்டும் குறிப்பிட்டு விட்டால் ஒரு மாதிரி இதர இன்ஜினீயர்களின் சம்பளத்தைத் தெரிந்து கொள்ளலாம். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தால் போதுமல்லவா ! அமெரிக்கத் தலைமை இன்ஜினீயருக்கு மூப்பது நாளைக்கு, அதாவது மாதம் ஒன்றுக்கு வருமான வரி இல்லாமல், கையாகப் பன்னிரண்டாயிரம் ரூபாய் தருகிறார்கள். நமது ஜனாதிபதியை விட அதிகச் சம்பளம் கொடுத்து வருகிறார்கள். அப்பேர்ப்பட்ட இன்ஜினீயர்களும் நமது நாட்டு இன்ஜினீயர்களுக்குக் கட்டுப் பட்டுத்தான் பக்ரா அணை கட்டும் திருப்பணியில் சேர்ந்து தொண்டாற்றி வருகிறார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இதுதான் நாம் பெற்ற சுதந்திரத்தின் மகிமை !

அமெரிக்கர்கள்தான் உலகிலேயே அதிசயமான அணைகள் கட்டி அனுபவமும் பெற்றவர்கள். அதனால் அவர்களுடைய ஆலோசனை மிகவும் அவசியமாகிறது.

பக்ரா அணையின் வேலைகளைக் கவனிப்பதற்காக இன்ஜினீயர்களைப் பல பிரிவினர்களாகப் பிரித்து அடிக்கடி சோதனை செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சிமெண்ட் கலவையைச் செய்வது ஒரு இன்ஜினீயர் குழு. ஆனால் அந்தக் கலவை சரியாக இருக்கிறதா என்பதை அடிக்கடி கவனித்து வருவது அவர்களுக்குச் சம்பந்தமில்லாத இன்னொரு இன்ஜினீயர் குழு. ஒரு குழுவினருக்கும் இன்னொரு குழுவினருக்கும் தொடர்பே இல்லை. அதனால் அணையின் வேலைகள் குறையில்லாமல் நடப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இன்ஜினீயர்களும் ஒருவர் செய்த குறையைக் கண்டு பிடிக்கிறோமே அதனால் நமக்கு ஏதேனும் ஏற்பட்டு விடுமோஎன்று அஞ்சுவதற்கு வழியில்லாமல் இருக்கிறது. இப்படி ஒரு நல்ல வழி செய்திருக்கும் முறையைப் பாராட்ட வேண்டும்.

** ** **

உலகத்தில் மிகச் சிறந்த அணைகளில் ஒன்றான பக்ரா அணையைக் கட்டும் வேலையைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்த இந்திய சர்க்காருக்கு நன்றி செலுத்த வேண்டுமா, வேண்டாமா என்று நான் இன்னும் முடிவு செய்ய வில்லை. மனசு நன்றி கூற விரும்பினாலும் உடல் மறுக்கிறது. கிட்டத்தட்ட அரை நாள் பதினாறு மைல் வெயிலில் அலைந்து திரியும்படி சேர்ந்ததால் பத்திரிகையாளர்கள் எல்லாரும் களைத்துச் சோர்ந்தே போய் விட்டார்கள். ஆனால் அங்கு உற்சாகமாக வேலை செய்யும் தொழிலாளர்களைப் பார்த்ததும் களைப்பு எல்லாம் பறந்து போய் விட்டது.

மனத்துக்குள் அணையைச் சுற்றிப் பார்க்கும் போது ஒரே உற்சாகமும் ஆனந்தமும் ஏற்பட்டாலும் எனக்கும் மற்றப் பத்திரிகைக்காரர்களுக்கும் போதும் போதும் என்றாகி விட்டது.

பத்திரிகைக்காரர்கள் எங்கேயாவது போனால் காரசாரமாக எழுதுவதற்கு ஏதாவது விஷயம் தேடுவார்கள். இங்கேயோ அத்தகைய விஷயம் ஒன்றும் கிடைக்கவில்லை.

ஆனாலும் என்னுடன் வந்த தென்னிந்தியப் பத்திரிகையாளர் மட்டும், "எல்லாம் இங்கே தான் செய்திருக்கிறார்கள். வட இந்தியாவில் செய்திருப்பதுடன் ஒப்பிட்டால் தென் இந்தியாவில் ஒன்றுமே செய்யவில்லை என்றுதான் தோன்றுகிறது. பணத்தைப் பணம் என்று பார்க்காமல் வாரி இறைத்திருக்கிறார்களே !" என்று ஓயாமல் சொல்லிக் கொண்டே வந்தார்.

இப்படி அவர் குறைப் பட்டதில் ஒன்றும் தவறில்லை என்பதை அங்கு செய்திருக்கும் சாதனைகளைப் பார்க்கும் போதெல்லாம் நினைக்கத்தான் தோன்றியது. இந்தியா நமது தேசமாக இருந்தாலும் நம்முடைய ஊரைப்பற்றி நினைப்பதில் தவறு ஒன்றும் இல்லைதானே !


நங்கல் கால்வாய்க் கரையிலே !

மறுநாள் நங்கல் நகரிலிருந்து புறப்பட்டோம். கங்குவால், கோட்லா அருவி மின்சார நிலையங்களைப் பார்க்கச் சென்றோம். நங்கல் நகரிலிருந்து நங்கல் கால்வாயை ஒட்டினாற் போல் அமைந்துள்ள சாலையில் எங்கள் பஸ் சென்று கொண்டிருந்தது. நங்கல் கால்வாய் இரு கரையும் ததும்ப ஓடிக் கொண்டிருந்த தண்ணீர் சூரிய வெளிச்சம் பட்டுத் தங்கம்போல் மின்னிக் கொண்டிருந்தது. சுகமான காற்று வீசிக் கொண்டிருந்தது. இருபுறத்திலும் பசுமையை அவ்வளவாகக் காண முடியவில்லை. கங்கைக் கால்வாய்க் கரையில் கண்ட பசுமையை நினைத்தால் நங்கல் கால்வாய்க் கரை வெறும் பாலைவனம் தான்! நங்கல் கால்வாய் வெட்டிச் சில ஆண்டுகள் தானே ஆகிறது ! கால்வாயில் இப்பொழுது தானே தண்ணீர் போய்க் கொண்டிருக்கிறது. இன்னும் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு இந்தச் சாலையில் சென்றால் இருபுறமும் கண்ணுக் கெட்டிய தூரம் பசுமை ! பசுமை ! என்று கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

கங்கைக் கால்வாயைப் போலவே நங்கல் கால்வாயிலும் ஏராளமான 'அக்வாடக்டுகள்' 'சூபர்பாஸேஜுகள்' என்று வழிநெடுக இருந்து இன்ஜினீயர்களின் பெருமையை எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தன. கால்வாயின் கரையில் ஒரு பர்லாங்குக்கு ஒரு இடத்தில் ஏதாவது வேலை நடந்து கொண்டிருக்கிறது. இங்கு செய்திருக்கும் வேலைகளைப் பார்த்தால் பணத்தைப் பணமென்று பாராமல் வாரி இறைத்திருக்கிறார்கள் என்பதை நன்றாகத் தெரிந்து கொள்ள முடிகிறது ! சுதந்திரம் பெற்ற இந்தியா இல்லையா ! அதிலும் வட இந்தியா ஆயிற்றே ! சுதந்திரம் பெற்ற பலனை வட இந்தியர்கள் வெகு நன்றாக அனுபவித்துக் கொண்டிருப்பதை உணர முடிந்தது ! அவர்களுக்குப் பணத்துக்குப் பஞ்சமா என்ன !

பன்னிரண்டாவது மைலில் நங்கல் கால்வாயில் கங்குவால் என்னும் இடத்தில் ஒரு அருவி மின்சார நிலையம் அமைத்திருக்கிறார்கள். இந்த இடத்தில் தொண்ணூற்று மூன்று அடி அருவி விழுகிறது. அந்த அருவியைப் பிடித்து மின்சாரம் உற்பத்தி செய்கிறார்கள். மூன்று கோடி ரூபாய் செலவில்

தேக ஆரோக்கியத்தை ப்ளிட் உபயோகிப்பதின் மூலம் பாதுகாருங்கள்




1 வீட்டிலுள்ள பூச்சிகள் அனைத்தையும் கொல்லுகிறது....ஒரு சில பூச்சிகளைத் தான் கொல்லும் என்றில்லை

பூரணப் பிரயோஜனத்தை உத்தேசித்து விஞ்ஞான முறைப்படி ப்ளிட்டில் ஆறு சக்தி வாய்ந்த பூச்சிகளைக் கொல்லும் மருந்துகள் சேர்க்கப்பட்டுள்ளன. வீட்டிலுள்ள பூச்சிகள் இதனுடைய சாகடிக்கும் தன்மையிலிருந்து தப்பவே முடியாது!

2 நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு அணுவுக்கும் அதிகமான பூச்சிகளைக் கொல்லுகிறது

ப்ளிட் தெளிக்கப்பட்ட பாகம் பலவாரங்களுக்கு பூச்சிகளின் உபத்திரவமற்றதாய் விளங்குகிறது. நீங்கள் ப்ளிட் உபயோகித்த பிறகு உங்களை பாதுகாத்துக் கொண்டே போகிறது. உங்கள் முழுக்குடும்பத்தின் தேக சுகத்தைப் ப்ளிட் கொண்டு காப்பாற்றவும்.





மலேரியா, டைபாயிட், காலரா முதலிய பல வியாதிகளைக் கொண்டுவரும் பூச்சிகளை இது கொல்லுகிறது

ப்ளிட் தனிப்பட்ட ஓரே ஒரு பூச்சியைக் கொல்லும் மருந்தல்ல. அநேக பறப்பன பூச்சிகளைக் கொல்லும் மருந்துகளின் ஒரு முழுச்சேர்க்கையாகும். இம்மாதிரி மருந்துகள் ஒன்றிற்கொன்று கலந்து மற்றதையும் மிகவும் சக்தியுள்ளதாகச் செய்துகொள்ள உதவுகின்றன. இவ்விதமான ஒற்றுமையான சேர்க்கையினாலேயே ப்ளிட் நீங்கள் வாங்கக்கூடிய பூச்சியைக் கொல்லும் மருந்துகளிலேயே மிகவும் சக்தி வாய்ந்ததாயும், சிக்கனமானதாயும் விளங்குகிறது.

ப்ளிட் மனிதருக்கும் வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளுக்கும் தீங்கு விளைவிக்காது. இன்றே ஒரு டின் வாங்குங்கள்—இது எவ்வளவு பயனுள்ளதென்பதை அறிய உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும்.

சிவப்பு, வெள்ளை, நீல நிறமும் கொண்ட டின்னில் கிடைக்கும்

ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி (கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)



பக்ரா அணையில் அமைக்கப் போகும் அருவி மின்சார நிலையத்துக்கான பிரும்மாண்டமான குழாய்கள். மலையையே குடைந்து அமைத்திருக்கிறார்கள். அதன் முகப்பில் பக்ரா அணை இன்ஜினியர்களும், பத்திரிகையாளர்களும் நின்று படம் பிடித்துக் கொண்டனர்.

அமைத்திருக்கும் இந்த மின்சார நிலையத்தில் மூன்று மின்சார உற்பத்தி இயந்திரங்கள் வேலை செய்கின்றன. ஒவ்வொன்றும் இருபத்தி நாலாயிரம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் சக்தியுடையது. மின்சார உற்பத்தி இயந்திரங்களும் இதர நுட்பங்களும் எல்லா அருவி மின்சார நிலையங்களிலும் இருப்பதைப் போலத்தான் இருக்கின்றன.

கங்குவால் அருவி மின்சார நிலையத்தைத் தாண்டி நாலு மைல் அப்பால் சென்றதும், கோட்லா என்னுமிடத்தில் ஒரு அருவி மின்சார நிலையம் அமைத்திருப்பதைப் பார்த்தோம். இதுவும் கங்குவால் மின்சார நிலையத்தைப் போன்றதுதான். அதற்கும் இதற்கும் எந்த வித்தியாசமும் கிடையாது. இந்த இரண்டு மின்சார நிலையங்களையும் நமது இந்திய இன்ஜினியர்களே அமைத்திருக்கிறார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இதர அருவி மின்சார நிலையத்துக்கும் இந்த இரண்டு மின்சார நிலையங்களுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. இதர இடங்களில் இருக்கும் அருவி மின்சார நிலையங்களில் அருவியின் வேகம் அடிக்கடி மாறும். இயற்கையான அருவியாக இருந்தால் மழைக் காலத்தில் அருவியின் வேகம் அதிகமாக இருக்கும். அந்தக் காலத்தில் மின்சாரம் அதிகம் உற்பத்தியாகும். அருவியின் வேகம் குறையும்போது மின்சார உற்பத்தியும் குறையும்.

பெரிய பெரிய அணைகளில் இருந்து உண்டாகும் அருவி மின்சார சக்தியும் அணையில் தேங்கியிருக்கும் தண்ணீருக்கு ஏற்ப ஏறியும் இறங்கியும் இருக்கும். சில சமயங்களில் அதிகமாகவும் சில சமயங்களில் குறைவாகவும் இருக்கும். ஆனால் நங்கல் கால்வாயில் அமைந்துள்ள, கங்குவால், கோட்லா ஆகிய இரு அருவி மின்சார நிலையங்களிலும் வருஷம் முழுவதும் ஒரேமாதிரி மின்சாரம் உற்பத்தியாகும். அதாவது இரண்டு மின்சார நிலையங்களிலும் சேர்ந்து ஒரு லட்சத்து நாற்பத்தாறாயிரம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தியாகிக் கொண்டே இருக்கும். காரணம்: நங்கல் கால்வாயில் ஆண்டு முழுவதும் ஒரே அளவான தண்ணீர் தங்கு தடையில்லாமல் வெகு வேகமாக ஓடிக் கொண்டிருப்பதால்தான்.

இன்ஜினியர் நங்கல் கால்வாய் முடிந்து அந்த இடத்திலிருந்து பக்ரா கால்வாய் ஆரம்பிக்கும் விவரங்களை எடுத்துச் சொன்னார்.

நங்கல் கால்வாய் முடியும் இடத்திலிருந்து பக்ரா கால்வாய் ஆரம்பமாகி விடுகிறது. பக்ரா கால்வாயின் மூன்று புறத்திலும் செங்கற்களைக் கொண்டு கால்வாயைப் பலப்படுத்தியிருக்கிறார்கள். நூற்று எட்டு மைல் நீளத்துக்கு இந்தக் கால்வாயில் செங்கற்களைக் கொண்டு பலப்படுத்தியிருக்கிறார்கள். அந்தக் கால்வாயைப் பலப்படுத்த உபயோகப்படுத்தியிருக்கும் செங்கற்களை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கி வைத்தால் இந்த உலகையே இரண்டு தடவை சுற்றி வந்து விடலாமாம். அப்படியானால் எவ்வளவு செங்கல் உபயோகித்திருப்பார்கள் என்பதை மனத்தால் எண்ணிப் பாருங்கள். சாதாரணமாக ஒரு வீடு கட்டுவதற்குச் செங்கல் சூளை போடுவதற்குள்ளாகவே போதும் என்றாகி விடுகிறது! இங்கேயோ நூற்று எட்டு மைல் நீளத்துக்குச் செங்கற்களால் கால்வாயே அமைத்திருக்கிறார்கள்!

இவ்வாறு இன்ஜினியர் விஷயங்களைச் சொல்லிக்கொண்டு வரும்போதே நங்கல் நகரிலிருந்து நாற்பது மைல் தாண்டி ரூபர் என்ற இடத்துக்கு வந்து சேர்ந்து விட்டோம். ரூபர் என்ற இடத்தில் சட்லஜ் நதியில் ஏற்கனவே இருந்த அணையைப் புதுப்பித்து அதைப் பலப்

படுத்தி யிருக்கிறார்கள். அத்துடன் அந்த அணையை யொட்டிச் சுமார் ஆயிரத்து எண்ணூறு அடி நீளத்துக்கு அழகான காங்கிரீட் சாலையும் அமைத்திருக்கிறார்கள். இந்தச் சாலை சரித்திரப் பிரசித்திபெற்ற சாலை. இது பஞ்சாப்பின் புதிய தலைநகரான சண்டிகர் நகரத்தையும் ஜம்மூவை அடுத்துள்ள பத்தான்கோட் நகரத்தையும் இணைத்து விடுகிறது. அந்தச் சாலையின் பாலத்தை உலகமே வியக்கும் வண்ணம் குறைந்த நாளில் கட்டிவிட்டார்கள். இருபத்தோரு வாரங்களிலேயே கட்டி விட்டார்கள். மிகவும் உறுதி வாய்ந்த பாலமாக, பல நூறு வருஷங்கள் நின்று உழைக்கும் தன்மையுடன் அமைத்திருக்கிறார்கள்.

வட இந்தியாவில் நான் சென்ற இடங்களில் எல்லாம் ஒரு அதிசயத்தைப் பார்த்தேன். தென் இந்தியாவுக்கும் வட இந்தியாவுக்கும் உள்ள பெரிய வித்தியாசத்தைக் கண்டேன். அங்கு ஏதாவது ஒரு வேலையைத் தொடங்கினால் இரவு பகல் இருபத்திநாலு மணி நேரமும் மூன்று 'ஷிப்ட்' முறைகளை வகுத்துக்கொண்டு வேலைசெய்து முடித்து விடுகிறார்கள். நம் ஊர்களிலே ஏதாவது பாலம் கட்டப் போவதாக யோசனை செய்வதற்கு ஒரு வருஷம், பிறகு அந்த யோசனையை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு ஒரு வருஷம் ஆகிறது. பிறகு ஒரு மந்திரியைப் பிடித்து அந்தப் பாலத்துக்கு அஸ்திவாரம் போட வேண்டியது. பிரமாதமாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளி வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது. அந்தச் செய்தியைப் படித்து விட்டுத் தமிழ் நாட்டை விட்டு வெளியில் இருப்பவர்கள் சந்தோஷப்பட வேண்டியது. இரண்டாண்டு கழித்து அவர்கள் திரும்பவும் தமிழ் நாட்டுக்கு வரும்போது "ஒரு பாலத்துக்கு அஸ்திவார விழா நடந்ததாகப் படித்தேனே! அந்தப் பாலம் எங்கே இருக்கிறது!" என்று ஆவலோடு விசாரிப்பார்கள். "ஓஹோ! அப்படி ஒரு விழா நடைபெற்றதா!" என்று நாம் எல்லாரும் வியப்படைந்து போவோம்.

பிறகு விசாரித்தால் பாலத்துக்கு இட்ட அஸ்திவாரக் கல்லையே காணோம் என்ற விவரம் தெரிய வரும். இதுபோன்ற விஷயங்களில் தென் இந்தியா வட இந்தியாவிடமிருந்தும் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன.

உதாரணமாகச் சென்னை சேத்துப்பட்டு ரயில்வே நிலையத்துக்கு அருகிலே உள்ள புகழ் பெற்ற 'கேட்' இருக்கிறதே, அடாடா அதைப் பற்றி என்னத்தைச் சொல்ல! இங்கே மேம் பாலம் அமைப்பதாகப் பத்து மாதங்களுக்கு முன் போட்ட அஸ்திவாரம் என்னாயிற்று என்பது அந்த ஆதிசேஷனுக்குத்தான் தெரியும்!

எங்கிருந்தோ எங்கேயோ போய் விட்டேன். மேலே விஷயத்துக்கு வருவோம்.

ரூபர் அணையின் இடது பக்கத்தில் பழைய சிர்ஹிந்த் கால்வாயும் வலது புறத்தில் பிஸ்தோ ஆப் கால்வாயும் ஆரம்பமாகின்றன. இந்த இரண்டு கால்வாய்களும் பக்ரா—நங்கல் கால்வாயின் முக்கிய கிளைகள்தான்.

பிஸ்தோ ஆப் கால்வாயும் அதன் கிளைக் கால்வாய்களும் பஞ்சாப்பிலும், பெப்ஸிலும் ஆயிரத்து இருநூறு மைல் தூரம் செல்கின்றன. பக்ரா—நங்கல் கால்வாயின் நீளம்; அறுநூற்றுத் தொண்ணூறு மைல். கிளைக் கால்வாய்கள் 2,100 மைல். இதன் கிளையில்தான் புதிய நகரங்கள் உண்டாகப் போகின்றன. பாலைவனம் சோலைவனம் ஆகப்போகிறது.

இந்தக் கால்வாய் செல்லும் இடத்தில் வாழும் மக்கள்தான் சென்ற ஆண்டு மார்ச் மாதம் இரண்டாம்தேதி பாரதத்தின் பிரதம மந்திரி நங்கல் கால்வாயைத் திறந்து தண்ணீர் விட்டபோது பெரிய திருவிழாவாகவே கொண்டாடி மகிழ்ந்தவர்கள்.

இந்த அணைகளையும், அருவி மின்சார நிலையங்களையும், சாலைகளையும், பாலங்களையும் பார்த்தபோது எனக்கு ஒரு எண்ணம் உண்டாயிற்று. உலகம் வளர்ந்தது போல இந்தியாவும் வெகு விரைவில் வளர்ந்துவிட முடியும். ரஷ்யாவும் அமெரிக்காவும் நம்மைப் பார்த்து வியக்கும் அளவுக்கு உன்னதமாக வளர முடியும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

சுதந்திரத்துக்கு முன்

வட இந்தியா சுதந்திரத்துக்கு முன் எத்தனையோ வகைகளில் வளர்ச்சி இல்லாமல் இருந்தது. அருமையான இயற்கையின் வளங்களை அவர்கள் உபயோகப்படுத்தவே இல்லை. அதன் காரணமாக அங்கு அமைந்துள்ள பூமியின் அமைப்பும், பல சமஸ்தான மன்னர்களின் ஆட்சியும் மக்களை வளர விடாமல் செய்து வந்திருக்கின்றன. இந்த விஷயங்களை அங்குள்ளவர்கள் கூறியதைக் கேட்டபோது என்னால் நம்பவே முடியவில்லை.

பஞ்சமும் பசியும் ஒருபுறம் மக்களை வாட்டக் கொள்ளைக்காரர்களின் அட்டூழியம் வேறு அவர்களைக் கொடுமைப்படுத்தி இருக்கிறது. கதைகளிலும் கற்பனையிலும் காண முடியாத அளவு கொள்ளைக் கூட்டத்தினர் கொடுங்கோல் ஆட்சி புரிந்திருக்கின்றனர்.

பஞ்சாப் கிராமத்துக்குள்ளே சென்று அங்குள்ள மக்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன், பஞ்சாப்பின் புதிய தலைநகரான சண்டிகர் நகரைப் பார்ப்பதற்கு முன், பஞ்சாப்பின் எல்லைப் பகுதிகளிலே, வட இந்தியாவின் பெரும் பகுதியிலே பிரசித்தி பெற்றிருந்த கொள்ளைக் கூட்டத்தினரைப் பற்றியும், அதில் மிகப் பிரபலமாக இருந்த மான்சிங் என்ற கொள்ளைக் கூட்டத் தலைவனைப் பற்றியும் தெரிந்து கொண்டு விடவேண்டும்.

உத்தரப்பிரதேசம்,மத்திய பிரதேசம்,மத்திய பாரதம், விந்திய பிரதேசம், ஹிமாசல பிரதேசம் ஆகிய ஐந்து ராஜ்ய போலீஸையும் சென்ற இருபத்தெட்டு ஆண்டுகளாகத் திணற அடித்துக் கொண்டு வந்த கொள்ளைக் கூட்டத் தலைவன் மான்ஸிங்கின் கதையைக் கேட்டால் "இப்படியும் நடந்திருக்குமா!" என்று வியப்படைய வேண்டியிருக்கிறது.

மான்சிங்கை உயிருடனோ, கொன்றோ கொண்டுவந்து கொடுப்பவர்களுக்குப் பதினையாயிரம் ரூபாய் பரிசு அளிக்கப்படும் என்று சர்க்கார் பறையறைந்தும் பலன் இல்லாமல் மாயாஜாலம் செய்து வந்த கள்வர் தலைவன் மான் சிங்கின் வாழ்க்கைச் சரித்திரம் அதிசயமும் அபார சாமர்த்தியமும், சூழ்ச்சியும் நிறைந்த உணர்ச்சி மிக்க சரித்திரம்.

அவனைப் பற்றி ஒரு ஆக்ராவாசி சொல்லுவதைக் கேளுங்கள். (தொடரும்)

நீரிழிவு

குணமாகும்

சிறு நீரில் சர்க்கரை காண்பது நீரிழிவு (DIABETES) நோயின் முக்கிய அறிகுறியாகும். உங்களுக்குப் பசியும் தாகமும் அதிகமாயிருந்தாலும், உடல் உருகிக் கொண்டு வந்தாலும், அடிக்கடி நீர் இறங்கினாலும் உங்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இக் கொடிய உடல் உருக்கி நோய், தான் பற்றினவர்களைக் கடைசி மூச்சு உள்ள வரையில் விடுவதில்லை; கொஞ்சம் கொஞ்சமாக அவர்களை மரண வாயிலுக்கு இழுத்துச் சென்று விடும். நீரிழிவு வியாதியைக் குணப்படுத்த இன்ஜெக்ஷன்கள் போடப்படுகின்றன; ஆனால் அவற்றினால் வியாதி கொஞ்சமும் குணமாவதில்லை. மேற்படி இன்ஜெக்ஷன்கள் நீரில் சர்க்கரையைக் குறைக்கின்றன—அதுவும் மருந்துச் சக்தி உள்ள வரையில்தான். ஆகவே, உபாதைகளைத் தடுக்க வாழ்நாள் முழுவதும் ஊசிகள் போட்டுக் கொள்ள வேண்டியதுதான். இதனால் அதிக செலவு ஏற்படுவது மட்டுமல்லாது உடலுக்கு கஷ்டம் உண்டாகிறது. நோய் குணப்படுத்தாது போனால் நீங்கள், புண்களினாலும், கண் நோய், பல் நோய், வயிற்றுக் கோளாறு முதலிய பலவித வேதனைகளால் சிரமப்பட நேருகிறது. நீரிழிவு வியாதியை, வீனஸ் சார்ம் மாத்திரைகளை உபயோகித்து, சிக்கனமாகவும், சுலபமாகவும், நிச்சயமாகவும், பத்திரமாகவும் சிகிச்சை பெறுங்கள்.

பண்டைக்கால யுனானி வைத்திய முறைகளைக் கொண்டு, அரிய மூலிகைகளின் சேர்க்கையுடன் தயார் செய்யப்படும் வீனஸ் சார்ம் மாத்திரைகள், நோயை அடியோடு அகற்றுவதுடன், எத்தனையோ பேர்களை இன்ஜெக்ஷன் அல்லது ஒருவிதமான பட்டினி இல்லாமல் குணமாக்கி யிருக்கிறது. இதை உபயோகித்த பல ஆயிரக்கணக்கானவர்கள், இந்நோயின் மரணப் பிடியிலிருந்து தப்பி யிருக்கிறார்கள். இம் மருந்தை உபயோகிக்கத் தொடங்கிய இரண்டு மூன்று நாட்களுக்கெல்லாம், நீரில் சர்க்கரை குறைகிறது; அத்துடன் அதிக நீர் இறங்குவதும் நிற்கிறது. சில நாட்கள் உபயோகித்தாலே நோய் தணிந்து திருப்தி ஏற்படுகிறது. வீட்டிலிருந்தபடி வீனஸ் சார்ம் சிகிச்சையைத் துவங்குங்கள். விசேஷ பத்தியம் எதுவும் இல்லை. நீங்களே அதன் குணத்தை அறிவீர்கள். இதுபற்றிய விரிவான இலவச ஆங்கிலப் பிரசுரத்தை வரவழைத்துப் பாருங்கள்.

50 மாத்திரைகள் கொண்ட புட்டி ஒன்றின் விலை 6-12-0

(பாக்கிங் தபாற் செலவு இனாம்)

வீனஸ் ரிஸர்ச் லாபரேட்டரி (K.M.)

தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா

ஜீ.ஜீ மிஸ்கி

பெருங்காயம்

தென்னிந்தியர்களின் ருசிக்கு ஏற்றவாறு விசேஷமாகத் தயாரிக்கப் பட்டது



கோபால்ஜீ அண்டு கம்பெனி

219, ஸாமுவல் தெரு, பம்பாய் 3.



EPHRILIME

எப்ரிலைம்


அவரது ஆஸ்த்மா உபாதைகளை குணப்படுத்த எப்ரிலைம் மிகச் சிறந்தது. ஒரு பாட்டில் மருந்தை உபயோகித்தால் அதன் பூரண பலன்களைக் காண்பார்.

நீண்ட நாட்பட்டதும், மிக்க உபாதை தரக்கூடியதுமான மார்ச்சளி, ஆஸ்த்மா முதலிய நோய்களுக்கு ஓர் சிறந்த [illegible] மருந்து.

யூனியன் டிரக் கம்பெனி, லிட்.

மதராஸ் டிப்போ: 2, ஜோன்ஸ் லேன், மதராஸ்-1

அழிந்த கோலம்



ஞானம்

"கமலா, உங்கள் வீட்டில் பண்டிகை கொண்டாடுவதில்லையென்றால் நீயும் உன் புருஷரும் அன்று எங்கள் வீட்டில்தான் சாப்பிட வேண்டும். இப்பொழுதே சொல்லி விட்டேன்" என்றாள் கோதாவரி.

"என் கணவர் அன்று ஊரில் இருக்க மாட்டாரே!" என்றாள் கமலா.

"அவர் ஊருக்குப் போய் விட்டாலும் நீ மட்டுமாவது வந்தாக வேண்டும், தெரிந்ததா?" என்றாள் கோதாவரி.

* * *

கதறும் கைக் குழந்தையையும், துறு துறு வென்று விஷமம் செய்ய அலையும் அறியாப் பாலகனையும் வைத்துக் கொண்டு மறுநாள் பண்டிகையை வரவேற்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தாள் கோதாவரி. கமலாவுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. கண்ணை மூடிப் படுத்துக் கொண்டிருந்தால் போதும் என்றிருந்தது. அவள் மனத்தில் உற்சாகம் இல்லை; தெம்பு இல்லை. ஆனால் கோதாவரி ஒண்டியாகத் திண்டாடுவதைப் பார்த்துக் கொண்டிருக்க மனம் ஒப்பாமல், சோர்வை உதறிவிட்டு அவளுக்கு உதவி செய்ய எழுந்தாள்.

"மாமி, ஏதாவது வேலை இருந்தால் நான் செய்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே வந்த கமலாவினிடம், "எல்லாம் செய்தாகி விட்டது, கோலம்தான் போடணும். நான் பார்த்துக் கொள்கிறேன். அப்புறம் ஒரு வேலையும் இல்லை. நீ உட்கார்" என்று கூறினாள் கோதாவரி.

"குழந்தையை வைத்துக் கொண்டு நீங்கள் பத்து நிமிஷமாவது உட்கார்ந்திருங்கள். நான் கோலம் போடுகிறேன்" என்று சொல்லிக் கமலா கோலப் பொடிக் கிண்ணத்தைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

முத்து முத்தாகப் புள்ளிகளை வைத்து, முடிவில்லா மாயச் சுழல் போல் இழைகளை வரைந்து கொண்டிருந்தாள் கமலா. கோதாவரி கம்பத்தில் சாய்ந்தபடி உட்கார்ந்து, கமலா கோலமிடும் அழகை ரஸித்துக் கொண்டிருந்தாள். நின்ற இடத்தில் நிற்காமல் பரபர வென்று அலையும் சிறுவன் ராஜு தவழ்ந்த நிலையில் படுத்துக் கொண்டு கமலாவின் விரல் இடுக்குகளிலிருந்து விழும் வெள்ளைப் பொடியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

கல்யாணக் கூடத்தில் பெரும் பகுதியை அடைத்துப் பூப்பந்தலிட்டாற் போலக் கோலத்தை வரைந்து விட்டு நிமிர்ந்த கமலா, கை விரல்களைச் சொடுக்கியபடியே தன் சிருஷ்டியை ரஸிக்கலானாள். ஒருகணம் அவள் மனம் மகிழ்ச்சியால் நிரம்பியது.

ராஜு கோலத்தைக் கண்ட மகிழ்ச்சியில் கையைக் கொட்டிக் கொண்டு, கோலத்தின் நடுவே குதித்துத் தாண்டவமாடினான். கீழே புரண்டான். முகம், கைகால், முதுகு, வயிறு எல்லாம் வெள்ளை வெளேர் என்று கோல மாவு ஒட்டிக் கொண்டது. கலகல வென்று வெண்கல மணி போல் ஒலித்த அவன் சிரிப்பு கமலாவைப் பைத்தியக்காரி போல் நிற்கச் செய்தது.

"ஏண்டா, இரண்டு மணி நேரமாக இடுப்பு ஒடியக் குனிந்து கொண்டு போட்ட கோலத்தை இப்படியா அழிக்கிறது!" என்று கையை ஓங்கினாள் கோதாவரி.

சட்டென்று கமலா ராஜுவைத் தன் பக்கம் இழுத்து அணைத்துக் கொண்டு, "பேசாமலிருங்கோ, மாமி!" என்றாள்.

"நீயே பார், கமலா! திருஷ்டிப் படுகிற மாதிரி எத்தனை அழகாகக் கோலம் போட்டிருந்தாய்! அத்தனையையும் இந்தத் தடியன் ஒருக்ஷணத்தில் பாழாக்கிவிட்டானே!"

"நல்ல நாளும் அதுவுமாகக் குழந்தையை அடிக்கலாவது? கோலத்தை அழிப்பதற்கு ஒரு குழந்தை வேண்டும் என்று எத்தனை பேர் தவம் கிடக்கிறார்கள்?"

"இப்பொழுது இப்படித்தான் சொல்வாய். அடுத்த வருஷம் உனக்கும் ஒன்று பிறந்து இப்படிச் செய்தால் சொல்வாய்!"

"பிறக்காது மாமி, பிறக்காது. இந்தப் பாவிக்குக் குழந்தை பிறக்கவே பிறக்காது!"

"அப்படி யெல்லாம் சொல்லாதே, கமலா. உனக்குக் கல்யாணமாகி அப்படி எத்தனை வருஷமாகி விட்டது, நீ மன மொடிந்து போக? கடவுள் அருள் இருந்தால், தானே பிறக்கும்."

"எனக்குத் தோன்றவில்லை, மாமி! நாலு வருஷங்களுக்கு முன் இதே தீபாவளிப் பண்டிகை. அந்த வருஷம் எனக்குத் தலை தீபாவளி. எனக்கு மட்டும்தான் தலை தீபாவளி; அவருக்குப் பழசுதான். ஆமாம் மாமி. நான் இளையாள்!"

"நிஜமாகவா? நீ அவருக்கு இளையாளா? பார்த்தால் அப்படித் தெரியவில்லையே?"

"தாயையும் தந்தையையும் இழந்து மாமா வீட்டில் கிடந்த என்னை வாழ்விக்க வந்தார் முரளியின் அப்பா."

"முரளி யார்? உன் மூத்தாள் பிள்ளையா?"

"ஆமாம். 'தாய் தந்தையற்ற உன்னை மணந்தால், தாயற்ற குழந்தை முரளியைத் தாயாகக் கவனிப்பாய் என்றுதான் உன்னைக் கைப்பிடித்தேன்' என்று கூறி முரளியை என்னிடம் ஒப்படைத்து விட்டார் அவர். அதன் பின் அனுவசியமாக விசாரமோ, சந்தேகமோ அவர் பட்டதே இல்லை. நம்பிக்கைத் துரோகம் செய்யும் எண்ணம் துளியும் இல்லாமல் இருந்தும் நான் அவருடைய நம்பிக்கையை ஒரே கணத்தில் இழந்து விட்டேன், மாமி!

"அருமையாக அழைத்துப் பெருமையாகத் தீபாவளிச் சீர் செய்ய எனக்கு அப்பாவும், அம்மாவும் இல்லாவிட்டாலும் என் கை பிடித்தவர் எனக்கு ஒரு குறையும் வைக்கவில்லை. தீபாவளியை மிக விமரிசையாகக் கொண்டாட எல்லா ஏற்பாடும் செய்திருந்தோம். முதல் நாள் மாலை...... இன்று நடந்ததுதான் அன்றும் நடந்தது. ஆனால் இன்று உங்களுக்குப் பொறுமையை உபதேசம் செய்த நான், அன்று மதியிழந்தவளாகி அழியாப் பழிக்கு ஆளாகி விட்டேன்!" — கமலா இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"அழாதே கமலா, முரளி எங்கே? அவன் என்னவானான்?"

"ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும், என் உயிரின் ஒவ்வொரு அணுவும் கேட்கும் கேள்வி அதுதான், மாமி. பத்து வயதில் அரும்பாடு பட்டுக் கற்றுக்கொண்ட ரத்தின ஜமுக்காளக் கோலத்தை என் வீட்டில், என் கையால் போட்டு விட்டு, அதை என்னுடையவர் கண்டால் எப்படி எல்லாம் புகழ்வார் என்று எண்ணியதும், நான் என்னையே மறந்து மகிழ்ந்து நின்றேன். நாலு வயதுகூட நிரம்பாத சிறுவன் முரளி கோலத்தின் நடுவே ஓடி, 'கோலம் போட்டாச்சே, பொட்டுக் கோலம போட்டாச்சே!' என்று பாடிக் கும்மியடிக்க ஆரம்பித்ததும் என் மகிழ்ச்சிக் கோட்டையை அவன் தகர்த்து விட்டதாகவே நினைத்து ஆத்திரப் பட்டேன். அப்பொழுதுதான் என் அசுர குணம் வெளியாயிற்று. அந்தப் பச்சைக் குழந்தையின் முதுகு சிவக்கும்படி பலமாக அறைந்து விட்டேன். அந்த அடி அவன் முதுகில் மட்டும் விழவில்லை, என் வாழ்விலும் விழுந்து விட்டது.

"'போதும் நிறுத்து! முரளியைத் தொடாதே!' என்று கர்ஜித்துக் கொண்டே அவர் ருத்திரனைப் போல் வந்து நின்றார். நடந்ததைச் சொல்லவோ, சமாதானம்


அழுகை...நிம்மதியின்மை...சந்தோஷமற்ற குழந்தை! அவனைத் தேற்றுவதில் அவன் தாய் களைத்து இளைத்தாள் — இரவில் அவளுக்கு தூக்கமேயில்லை — பகலில் ஓய்வு இல்லை.
கடைசியாக சந்தோஷத்துடனும் ஆரோக்கியமாயுமிருக்கும் சில குழந்தைகளின் தாய்மார்களாகிய தன் சிநேகிதிகளின் யோசனையைக் கேட்டாள். அவர்கள் யாவரும் ஒரே முகமாக 'க்ளாக்ஸோ'வையே தான் சிபாரிசு செய்தார்கள்.
குழந்தைகளின் எலும்பும் பற்களும் உறுதியாய் வளர 'விடமின் டி'யும், ரத்தம் வளம் பெற இரும்பு சத்தும் கலக்கப்பட்ட சுத்தமான புஷ்டியூட்டும் பால்-உணவு ஆகிய 'க்ளாக்ஸோ'வை தன் குழந்தைக்கும் கொடுக்க ஆரம்பித்தாள்.
SUNSHINE
Glaxo
இப்பொழுது அவனைப் பாருங்கள்! அவனுக்கு ஒரே ஆனந்தம்! அவனுடைய சந்தோஷத்துக்கு காரணம் அவன் தேக ஆரோக்கியம் தவிர ஆகாரம் நன்கு ஊட்டப்பட்டிருப்பதே-'க்ளாக்ஸோ'வுக்கு நன்றி.
Glaxo
'க்ளாக்ஸோ'-குழந்தைகளின் மிகச் சுத்தமான பால்-உணவு

சொல்லவோ அவர் இடமே வைக்கவில்லை. என் இரு கன்னங்களிலும் மாறி மாறிக் கை சலிக்குமட்டும் அறைந்தார். 'இது தான் நீ முரளியை நடத்தும் லட்சணமா? எத்தனையோ கஷ்டங்கள் அனுபவித்தும் அவனைக் கொடுமைப் படுத்துவதில்தானே உன் புத்தி போகிறது?' என்று ஏகமாகக் கத்தினார். எனக்குப் பேசச் சந்தர்ப்பமே இருக்கவில்லை. கையும் களவுமாகப் பிடிபட்ட பின் வாய்ப்பேச்சுக்கு இடமேது?

"மாமி! இதைக் கேட்டு நீங்கள் அவரைத் தாழ்வாக நினைக்கலாம். ஆனால் நான் அதைவிடத் தாழ்ந்தவளாகி விட்டேன். அவர் அடித்த அடியின் தழும்புகளும் வலியும் இரண்டு நாட்களில் மறைந்துவிட்டன. ஆனால் நான் அவருக்கு ஆறாத மனப் புண்ணை உண்டாக்கி விட்டேன்.

"அப்பாவும் அம்மாவும் அடிதடி ரகளை செய்து கொண்டும், அழுது வைது கொண்டும் இருப்பதைப் பார்த்துப் பயந்து அங்கிருந்து வாசலுக்கு நழுவிய முரளி எங்கோ போய் விட்டான்.

"அது முதற் கொண்டு ஒவ்வொரு தீபாவளியும் எனக்கு அழுகைதான். ஏனென்றால், அவர் முதல் நாளே வீட்டை விட்டுப் போய் விடுகிறார்; இரண்டு நாள் கழித்துத் தான் அவர் வீடு திரும்புகிறார். நானும் கேட்பவர்களுக்கு ஏதேதோ சாக்குச் சொல்லி வருகிறேன்.

"அதிலிருந்து அவர் என்னைப் பார்க்கவே கூசுகிறார். அவரை நிமிர்ந்து பார்க்கவே நான் அஞ்சுகிறேன். கைப் பிடித்த தோஷத்துக்கு, உலகத்துக்கு ஒப்ப, மனைவி என்று வீட்டில் இருக்க என்னை அனுமதித்திருக்கிறாரே, அதுவே பெரிசு. அவருடைய குழந்தையை அவரிடமிருந்து பிரித்துவிட்ட இந்தப் பாவிக்கு இந்த ஜன்மத்தில் என்ன, ஏழேழு ஜன்மத்துக்கும் குழந்தை பிறக்காது, மாமி......"

கோதாவரி ஏதோ சமாதானம் சொல்ல வாயெடுத்தாள். கமலாவின் அணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டு வாசலுக்குச் சென்ற ராஜு 'மாமா வந்துட்டாரே' என்று கத்திக் கொண்டு ரேழியில் நின்று கொண்டிருந்த கமலாவின் கணவனைக் கட்டிக் கொண்டான்.

கோதாவரி தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு சரேலென்று தன் அறைக்குள் போய் விட்டாள்.

காப்பியை எடுத்துக் கொண்டு போய் மேஜை மீது வைத்தாள் கமலா. வழக்கத்துக்கு மாறாக அன்று அவன் வீட்டுக்கு வந்தது அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. பீறிட்டு வரும் துக்கத்தை மறைக்க அறையை விட்டு வெளியேறலானாள்.

"கமலா! கமலா!!"

நாலு வருஷங்களுக்குப் பின் அவன் அவளைப் பெயர் சொல்லி அழைக்கிறான்.

"என்னை மன்னித்து விடு, கமலா!"

"நீங்கள் தான் என்னை மன்னிக்க வேண்டும். உங்களுக்குத் தீராத் துயரமளித்து விட்ட நான் பெரும் பாவி!" என்று கூறிக் கமலா விக்கி விக்கி அழுதாள்.

"இல்லை, கமலா! நான் தான் உன்னை வீணாக வருத்தப்பட வைத்து விட்டேன். அழாதே கமலா. முரளி சௌக்கியமாக இருக்கிறான்" என்றான்.

"நிஜமாகவா? முரளி உயிரோடு இருக்கிறானா? எங்கேயிருக்கிறான்? ஒரே ஒரு தரம் அவனைப் பார்த்து விட்டு எங்காவது போய் விடுகிறேன். இனி உங்களுக்கும் அவனுக்கும் இடையில் நான் நிற்கவே மாட்டேன். இது சத்தியம்." இதைச் சொல்லும் பொழுது கமலாவுக்குத் தொண்டையை அடைத்தது. உடல் நடுங்கிற்று.

"பதறாதே, கமலா! முரளி காணாமற் போகவே இல்லை. தெருக் கோடியில் நின்று கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். 'இனி அவனை உன்னிடம் விட்டு வைக்கக் கூடாது; அவனை ஒரு முறை அடித்ததற்காக உன்னை ஆயுள் முழுவதும் அழவைத்து விட வேண்டும்' என்ற குரூரமான எண்ணத்துடன் முரளியை, எட்டு மைல் தூரத்தில் இருக்கும் பால பவனத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டேன். எட்டு நாட்களுக்கு ஒரு முறை, பத்து நாட்களுக்கு ஒரு முறை பார்த்து விட்டு வருவதுடன், நாலு தீபாவளியாக அங்கேதான் போய் முரளியுடன் கழிக்கிறேன். இன்று ரயிலுக்குப் புறப்படும் அவசரத்தில் பணத்தைத் தொலைத்துவிட்டு வீட்டுக்கு வராதிருந்தால், ராஜுவைக் கோதாவரி மாமி அடிக்கக் கையை ஓங்கியதிலிருந்து நீ பேசி முடிக்கும் வரை ரேழியிலிருந்து கேட்காதிருந்தால், ஆயுள் முழுதும் பெரும் பாவத்தைச் செய்து கொண்டே இருந்திருப்பேன்.

"கமலா! நான் பொறுமையில்லாத மூடன் மட்டுமில்லை; இதயமற்ற கொடிய அரக்கன் கூட. ஆனால் இனியும் உன்னை அழ விட மாட்டேன். இந்தத் தீபாவளி தான் நம் நல்ல தீபாவளி. நான் போய் முரளியை அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேன். பாவம் அந்தக் குழந்தை அம்மா, அம்மா என்று ஏங்குகிறது. அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்று பொய் சொல்லி வைத்திருக்கிறேன்" என்று கூறிப் புறப்பட்டான் கமலாவின் கணவன்.

"நானும் கூட வருகிறேன். பால பவனத்திலேயே முரளியுடன் நம் நல்ல தீபாவளியைக் கொண்டாடலாம்" என்றாள் கமலா.


"சரி, புறப்படு......"

"இதோ, ஒரு நிமிஷம். கோதாவரி மாமியிடம் சொல்லிவிட்டு ஓடி வந்துவிடுகிறேன்" என்று அளவற்ற மகிழ்ச்சியுடன் கூறிவிட்டு உள்ளே ஓடினாள் கமலா.

வஸந்தத்தின் புத்துணர்ச்சி

உங்களுக்கு
இன்றும்....என்றும்!

காஷ்மீர்பொக்கே டால்கம் பௌடர் சுத்த மனோரம்மியமே! மிக்க மிருதுவாக உங்கள் உடலில் வஸந்தநாள் காலையின் புத்துணர்ச்சியை அள்ளித் தெளிக்கிறது—உடலை ரம்மியமணத்துடனும் குளிர்ச்சியுடனும் மணிக்கணக்காக வைத்திருக்கிறது. அதிகப்படி ஈரத்தை உறிஞ்சுகிறது ... அரிப்பையும் எரிச்சலையும் தவிர்க்கிறது ... உங்கள் வசீகரத்தையும் மென்மையையும் பன்மடங்காக்குகிறது.





காஷ்மீர் பொக்கே

டால்கம் பௌடர்


ஆண்கள் விரும்பும் நறுமணத்துடன்

ஒரு கால்கேட்—பாமாலிவ் தயாரிப்பு

கால்கேட் 1806 முதல் தரத்துக்குப் பெயர் போனது

CBG/14

இந்தியன் பாங்க், லிமிடெட்

(ஸ்தாபிதம்  1907)

தலைமை ஆபீஸ்: "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்", வடக்கு பீச் ரோடு, மதராஸ்-1

தென் இந்தியாவில எல்லா முக்கிய இடங்களிலும், பம்பாய், கல்கத்தா, புது டில்லி முதலிய இடங்களிலும் சப் ஆபீஸ்கள், கிளைகள் இருக்கின்றன.

மூலதனம்

அங்கீகரிக்கப்பட்டது	...	ரூ.	1,00,00,000
வழங்கப்பட்டது	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்டது	...	ரூ.	57,80,000
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	76,50,000
டெபாஸிட்டுகள் (30-6-55-ல்)	...	ரூ.	27·69 கோடிகள்

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் செய்யப்படும்

என். கோபால அய்யர், செக்ரடரி

புத்தம் புதியது-சுத்தமானது — ஏனெனில் இந்த பார்லி டின்னில் அடைக்கப்பட்டது!



ராபின்ஸன்ஸ் பெர்ல் பார்லி எப்பொழுதும் உங்கள் நம்பிக்கைக்கு உகந்தது. அது புஷ்டிமிக்க, உயர்ந்த ரக தானியங்களிலிருந்துத் தயாரிக்கப்பட்டு அவைகளின் புதுமையும் சுத்தமும் சிறிதளவும் கெடாத வண்ணம் சுகாதார முறைப்படி காற்றுப்புகாமல் டின்களில் அடைக்கப்படுகின்றன. நோயாளிகள், குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள் முதலியவர்களுக்கு இது ஒரு முழு பாதுகாப்புள்ள உணவு.

ராபின்ஸன்ஸ் பெர்ல்



பார்லியையே கேட்டு வாங்குங்கள்

முற்றிலும் சுத்தமானது

[இந்தக் கட்டுரையை வழங்கிய நா. இராமசந்திரன் அவர்களின் தகப்பனார் திருவண்ணாமலையில் பிறந்த ஒரு அந்தணர். சிறு வயதில் ஊரைவிட்டு மோரீஷஸ் தீவுக்குச் சென்றவர் அங்கே குடியேறி யிருந்த ஒரு நாயுடு அம்மையாரை விவாகம் செய்து கொண்டார். இருவரும் தென் ஆப்பிரிக்கா சென்றார்கள். மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்துக் கடை வைத்து வியாபாரம் செய்து, சம்பாதித்த சொத்துக்களை மனைவிக்கு எழுதி வைத்துவிட்டு மறைந்தார். மூத்த மகன் இராமசந்திரன் தமது சகோதரிகளுக்கு விவாக ஏற்பாடுகள் செய்து முடிக்கும் வரையில் தன் படிப்பை நிறுத்திக்கொண்டு குடும்பக் காரியங்களைக் கவனித்தார். பிறகு இந்தக் குடும்பக் கடமைகளை முடித்து விட்டு லண்டனுக்குச் சென்று பாரிஸ்டர் படித்து முடித்துத் தென் ஆப்பிரிக்கா திரும்பி வந்திருக்கிறார். தாய் நாட்டைப் பார்த்துப் போக வேண்டும் என்று தமிழகத்துக்கு வந்தபோது இந்தக் கட்டுரையைத் தந்தார். பீட்டர் மாரிட்ஸ்பர்க் என்கிற நேடால் நகரத்தில் இந்தத் தமிழருக்கு அழகான வீடும் பத்து ஏக்கரா தோட்டமும் உண்டு. —ஆசிரியர்]

தாயகம் கண்டேன்!

நா. இராமசந்திரன்

நான் ஒரு அசல் தமிழன். தென் ஆப்பிரிக்காவில் உள்ள நெட்டால் என்ற மாகாணத் தலைநகராக விளங்கும் பீட்டர் மாரிட்ஸ்பர்க் என்ற ஊரில் பிறந்தேன். என் தகப்பனார் திருவண்ணாமலையில் பிறந்தவர். பாலிய பருவத்திலே அவர் மோரீஷஸில் வந்து குடியேறினார். அங்கு சில காலம் தங்கிப் பிறகு நெட்டாலுக்கு வந்து வியாபாரம் செய்து வாழ்ந்து வந்தார். நான் இப்பொழுது பாரிஸ்டர் தொழில் செய்கிறேன். எங்கள் ஊரில் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. எனக்குத் தமிழ் எழுதப் படிக்கத் தெரியும். ஹிந்தி பாஷையும் கொஞ்சம் தெரியும்.


தென் ஆப்பிரிக்காவில் மொத்தம் இந்திய ஜனத்தொகை மூன்று லக்ஷம். இதில் தமிழர்கள்தான் அதிகம். மொத்தத்தில் எல்லோரும் ஒற்றுமைதான். ஆனால் வட இந்தியர்கள் முக்கியமாய் குஜராத்தியர்கள் தமிழர்கள் மீது கொஞ்சம் நிறத் துவேஷமாக இருப்பதைச் சில சமயங்களில் காணலாம். இது வருந்தத் தக்கது. தமிழர்கள் குஜராத்தியர்களுக்கு முன்பே குடியேறினவர்கள். குஜராத்திகள் காந்திஜி வந்த பிறகு வந்தவர்கள். வியாபாரம் செய்து செழிப்பாக இருக்கிறார்கள். வெள்ளையர்கள் நிறத் துவேஷம் காட்டுவதை இந்தியா வெறுக்கிறது. காந்திஜியும் வெறுத்தார். நேருஜியும் கண்டிக்கிறார். இப்படி யிருக்க, இந்தியர்களாகிய குஜராத்தியர்கள் ஏதோ தாங்கள் கொஞ்சம் வெள்ளை நிறமாக இருப்பதால், கருப்பு நிறமா யிருக்கும் இந்தியர்களாகிய தமிழர்களிடம் நிறத் துவேஷம் காட்டுவது சரியல்ல. இந்திய சங்கத்தில் குஜராத்திகள் தமிழர்கள் எல்லோரும் சமமான அங்கத்தினர்கள் தான். அரசியல் விஷயத்தில் தான் அப்படி. ஆனால் சமூக விஷயத்தில் கொஞ்சம் வேற்றுமைதான். கணேசர், சுப்பிரமணியர், விஷ்ணு கோயில்கள் இருக்கின்றன. 'விவேக பானு' என்ற தமிழ்ப் பத்திரிகை சில காலம் நடந்து இப்பொழுது நின்று விட்டது. ஸ்ரீ மணிலால் காந்தி நடத்தும் பாதி இங்கிலீஷ் பாதி குஜராத்தி வாரப் பத்திரிகை "இந்தியன் ஒபீனியன்" நடக்கிறது. "இந்தியன் வியூஸ்" என்ற ஆங்கில வாரப்பத்திரிகையும் நடக்கிறது. இது பாகிஸ்தானைப் பிராபல்யப் படுத்துகிற பத்திரிகை. இங்கே பிரபல வியாபாரிகளாக இருப்பவர்களில் மகம்மதியர்கள்தான் அதிகம். இவர்களில் 100க்கு 99பேர் இந்தியாவில் தேச உரிமை பூர்வீகம் சம்பந்தம் உள்ளவர்கள். ஆனால் இவர்கள் பாகிஸ்தானுடைய அரசியல் கொள்கைகளை முற்றிலும் ஆதரிக்கிறார்கள்.

எங்களுக்கு 'கல்கி'யும் இதுபோன்ற இன்னும் சில பத்திரிகைகளும் வருகின்றன. தீபாவளிதான் பெரிய பண்டிகை. எங்கள் தாய்நாடு இந்தியா எங்களுக்கு ஒரு புண்ணிய நாடு. எங்களில் பலர் அடிக்கடி வந்து போகிறோம்.

நான் 13-9-55ல் பம்பாயில் இறங்கி 29-10-55 வரை ஐயாயிரம் மைலுக்கு மேல் இந்தியா முழுதும் சுற்றிப் பார்த்தேன். இந்தியாவைப் பற்றி என் அபிப்பிராயம் இதுதான். இது முதல் தடவை. இந்தியாவைப் பார்த்தவுடன் பிரமித்து விட்டேன். பெரிய நாடு. எனக்கு இந்தியாவின் ஏழைமை நிலைமைதான் முதலில் கண்ணில் பட்டது. பஸ், ரயில் இவைகளில் வசதி மிகவும் குறைவு. கூட்டம் அதிகம். சென்னையில் பஸ் மிகவும் கஷ்டம், கூட்டம் அதிகம். நான் இந்தியா முழுதும் சுற்றிக் கடைசியாகச் சென்னைக்கு வந்தேன். சென்னைதான் மற்ற பாகங்களைவிட நாகரிக முதிர்ச்சி, புத்திசாலித்தனம், அன்பு இவைகளில் சிறந்து இருப்பதாக எனக்குத் தெரிகிறது. ஒருவேளை நான் தமிழனா யிருப்பதால் அப்படி எண்ணி யிருக்கலாம். எந்த பாஷை பேசினால்தான் என்ன! இந்தியா நம் தேசம் என்று அறிகப் பிரிவினையில்லாமல் ஒற்றுமையாய் இருப்பதுதான் பலம். நல்லது. நான் சென்ற இடமெல்லாம் ஸ்ரீநகரிலிருந்து சென்னை வரை என்னை எல்லோரும் அன்புடன் உபசரித்தார்கள். எனக்கு அன்னிய நாட்டிலிருந்து வந்ததாகவே தோன்றவில்லை. பல சினிமாப் படங்களைப் பார்த்தேன். வடநாட்டு, தென்னாட்டுப் படங்கள் எல்லாம் பொதுவாக நன்றா யிருக்கின்றன. இருந்தாலும் இன்னும் திருந்த வேண்டிய நிலைமையில்தான் இருக்கின்றன. இந்தியாவின் பழம் பெருமை உலகமெல்லாம் அறிந்த விஷயம். தற்காலப் பெருமையை உயர்த்துவதுதான் முக்கியம். அதற்கு வேண்டியதைத் தலைவர்கள் செய்வது நல்லது.'

புனித பாரத நாட்டுக்கு என் நமஸ்காரம்.

பாவம், மைதிலி!



கே. ஆர். கௌஸல்யா

'டன்' 'டன்' என்று கடிகாரம் பன்னிரண்டு முறை அடித்து ஓய்ந்தது. நள்ளிரவாகியும் தூங்கத் தோன்றாமல் புரண்டு கொண்டிருந்தாள் மைதிலி. துவார பாலகர்கள் மாதிரி பக்கத்துக்கு ஒருவராக அவளருகில் படுத்திருந்த இரு நாத்தனார்கள் கமலா, விமலாவும், சற்றுத் தள்ளி மாமி ஜானகமும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தனர். கூடத்து அறைப் பக்கம் தலையை உயர்த்திப் பார்த்தாள் மைதிலி. நீல வர்ணக் கம்பளியால் உடம்பை நன்றாகப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தான் அவள் கணவன் கிருஷ்ணமூர்த்தி.

சில தினங்களாக அவனுக்கு மும்முரமான மலேரியா ஜுரம். தோட்டத்துப் பன்னீர் இலைகளின்மேல் சிதறிக் கொண்டிருந்த வெண்ணிலவின் ஒளி அவன் படுத்திருந்த அறையிலும் அசையும் இலைகளின் நிழலுடன் படிந்திருந்தது. கணவனின் அருகிலே சென்று அவன் கன்னத்தில் கை வைத்து ஜுரம் எப்படியிருக்கிறதென்று அறிய அவளுக்கு நெஞ்சம் துடித்தது. ஆனால் அப்படிச் செய்யும்போது, திடுமென்று எதிர்பாராத ஸ்பரிசத்தால் அவள் கணவன் திடுக்கிட்டுக் கத்தி வாய் குழறி விட்டால் அப்புறம் நிலைமை மோசமாகி விடுமே! 'நான்தான்' என்று அவள் அறிவித்து அவனுக்கு விவரம் புரிவதற்குள் நாத்தனார்களும் மாமியாரும் எழுந்து அங்கு படை எடுத்து வந்துவிட மாட்டார்களா? இரவு படுக்கும்போது கட்டளையிட்டு விட்டு அல்லவா படுத்தார்கள்! 'ஆகாரம், மருந்து எல்லாம் கொடுத்தாகி விட்டது. நிம்மதியான தூக்கம் வேண்டும் அவனுக்கு. யாரும் போய் எழுப்பித் தொந்தரவு செய்ய வேண்டாம்' என்று கட்டளை! 'யாரும்' என்ற வார்த்தை மைதிலிக்காகத்தான்!

விளையாட்டுப் போலக் கிருஷ்ணமூர்த்தி உடம்புக்கு வந்து படுத்து இரண்டு வாரங்களுக்கு மேல் ஓடிவிட்டன. இந்த நாட்களுக்குள் மைதிலிக்குக் கணக்கில்லாமல் ஏச்சுப் பேச்சுக் கிடைத்துக் கொண்டிருந்தது, ஓய்ச்சல் இல்லாத அடை மழை போல.

"இதுவரைக்கும் அவன் ஒரு நாளில் 'உடம்பு'க்கு வந்து படுத்ததில்லை. தலை வலி என்றால் கறுப்பா சிவப்பா என்று கேட்பான்......இவள் போனமாசம் வந்தான். இந்த மாசம் பிறந்து ஒரு வாரம் அவன் ஆபீஸ் போகவில்லை. படுத்து விட்டான்...வந்த வேளையின் மகிமை..."

கோவில் மணி அடிப்பது போலத் தவறாமல் தினமும் பொழுது விடிந்தால் இந்தப் பேச்சு கேட்டு 'மனம்' இடிந்து விட்டது மைதிலிக்கு.

உள்ளத்தின் புழுக்கத்தால் ஏற்பட்ட வெம்மை தலையணையையும் பாதித்தது. படுக்கையில் இருப்புக் கொள்ளவில்லை. தலையணையைத் திருப்பிப் போட்டுக் கொண்டு அவள் படுத்தாள்.

“கொஞ்சம் வெந்நீர் வேண்டும் குடிக்க!” என்று முனகிய குரல் வந்தது கிருஷ்ண மூர்த்தியிடமிருந்து.

‘இதோ வந்தேன்’ என்று குரல் கொடுக்க மைதிலி துடித்தாள். ஆனால் குரல் கேட்டு நாத்தனார்கள் எழுந்து விடுவார்களே! அதை நிறைவேற்ற மைதிலிக்குக் கிடைத்த அந்த ஒரு அரிய சந்தர்ப்பத்தையும் பறிப்பதற்கு என்று பதில் குரல் கொடுக்காது ஆவலை அடக்கித் தன்னிக் கொண்டு உள்ளே சென்றாள். பிளாஸ்கிலிருந்து சூடான வெந்நீரை டம்ளரில் ஊற்றிப் புடவைத் தலைப்பில் வைத்து ஜாக்கிரதையாக எடுத்துக் கொண்டு வந்த போது “இப்படிக் கொடு மன்னி அதை! அண்ணா குரல் கேட்டு எனக்கும் விழிப்பு வந்தது” என்று தூங்கி வழியும் கண்களுடன் நின்று கொண்டிருந்தாள் சின்ன நாத்தனார் விமலா. குட்டிச்சாத்தான் எதிரிலே தோன்றினாற் போலிருந்தது மைதிலிக்கு. பேசாமல் டம்ளரை அவளிடம் கொடுத்து விட்டுப் படுக்கையில் விழுந்தபோது ஊஞ்சல் சங்கிலி அறுந்து விழுந்தாற் போல் அவள் உள்ளம் ஏமாற்றத்தினால் அதிர்ந்தது.

* * *

மைதிலிக்கு இரண்டு மாதங்களுக்கு முன்புதான் விவாகமாகிச் சென்ற மாதம் தான் புக்ககம் வந்திருந்தாள். புதிய மனிதர்களின் சுபாவ குண விசேஷங்களை அறிந்து கொண்டு நடத்தத் தவித்ததற்கு விரைவிலேயே சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. கிருஷ்ணமூர்த்தி முதலில் சாதாரண ஜுரம் என்று படுத்துப் பிறகு அது மலேரியாவாக உருவெடுத்தபோது.

முதலில் உடம்பு சரியில்லை என்று அவன் படுத்தவுடன் கொஞ்ச நாட்களுக்குக் கஷாயம், கஞ்சி இவற்றிலேயே சரியாகி விடும் என்று வீட்டு வைத்தியமே செய்யப்பட்டது. புகையும் விறகை ஊதி ஊதிக் கண்களும், முகமும் சிவக்கத் தவியாய்த் தவித்துக் கஷாயமும் கஞ்சியும் தயாரிக்க வேண்டிய வரைதான் அவள் பொறுப்பு. அதை ரொம்பச் சுலபமாக எடுத்துச் சென்று மிகவும் பரிவோடு, “கஞ்சி சாப்பிடுகிறாயா? போட்டுக் கொண்டு வந்திருக்கிறேன்” என்று உருக்கமாகக் கிருஷ்ண மூர்த்தியை எழுப்பி அவன் வாயில் ஊற்றுவது மாமியார், நாத்தனார்களின் பொறுப்பு. தன் கையால் தயாரித்துத் தானே தன் கணவனுக்கு எடுத்துச் சென்று அவன் தலைமாட்டில் அமர்ந்து பரிவுடன் அவன் வாயில் ஆகாரம், மருந்து எல்லாம் ஊற்ற மைதிலிக்குக் கொள்ளை ஆசை. ஆனால் அவள் வரையில் அது நிறைவேறாத மனோரதமாகிக் கொண்டிருந்தது.

வீட்டு வைத்தியத்தில் குணமேற்படாமல் போகவே, மறு நாள் கிருஷ்ணமூர்த்தி டாக்டரை வரவழைத்தான். டாக்டர் மலேரியா என்று சொல்லி மாத்திரைகள், மருந்து எல்லாம் கொடுத்தார். குளிர் ஒடுக்குகிறது என்று அவன் துடித்த போது மைதிலி ஓடியாடித் தலையணை, போர்வை, கம்பளி எல்லாம் கொண்டு வந்தாள். மாமியார் போர்த்தி விடுவதற்கு வந்து விட்டாள். அந்தந்த நேரத்துக்கு மருந்தை அவுன்ஸ் கிளாஸில் அளவாக எடுத்துக் கொடுக்கும் வரை மைதிலியின் உரிமை. அது அவன் கைக்கு மாறுவதற்குள் மற்றொருவருடைய கை இடையில் குறுக்கிட்டாக வேண்டும்,—நாத்தனார்கள் மாற்றி மாமியார்.

அன்று கிருஷ்ணமூர்த்தி கஞ்சி சாப்பிட்டதும் சாப்பிடாததுமாக முழுவதையும் வாந்தி எடுத்து விட்டான். “மன்னி!





எழும்பூர், வேத சபா, குழந்தைகளிடையே நற்பண்புகளை வளர்க்கவும், அவர்களுடைய நல்வாழ்வுக்கு நலம் பயக்கும் பல நல்ல காரியங்களைச் செய்யவும் முற்பட்டு மிகவும் சிரத்தையுடன் தொண்டாற்றி வருகிறது. மகா ருத்ரம், புருஷ ஸூக்தம், வேத பாராயணம் முதலியவற்றை யெல்லாம் இளமையிலேயே எளிதிற் பயிலக் குழந்தைகளுக்கு நல்ல வாய்ப்பை அளிக்கிறது. 26-10-55 விஜயதசமியன்று கஸ்தூரி கோபாலன் அவர்களின் பரிசாகக் குழந்தைகளுக்கு விஷ்ணு சஹஸ்ரநாம புத்தகம் வழங்கப்பட்டது. மேற்படி நவராத்திரி விழாவில் பரிசு பெற்ற சிறுவர் சிறுமியர்களைப் படத்தில் பார்க்கலாம்.

இதை அலம்பி விடு நன்றாக. நாலு தோண்டி ஜலம் விடு. சிக்கனம் பார்க்க வேண்டாம்!'' என்ற உத்தரவு பிறந்தது. வேறு வழியில்லாமல் மைதிலி அடிபணிந்து கட்டளையை நிறைவேற்றினாள்.

கைதி சிறைக்குள் வலிய வருவது போலக் குமையும் உள்ளத்துடன் வீட்டில் நடமாடினாள் அவள்.

* * *

மலைச் சாரல் மழைபோல ஓய்வில்லாச் சிந்தனையின் அலைப்பில் இரவெல்லாம் தவித்த மைதிலிக்குக் காலை எழுந்திருக்கும் போது உடலும் உள்ளமும் ஓய்ந்து போய்க் கிடந்தன.

சற்றைக்கெல்லாம் டாக்டர் வந்தார். நோயாளியைப் பரிசோதித்து விட்டு வெளியே வந்தபோது ஜனகம், கமலா விமலா பின்தொடர வந்து, "என்ன டாக்டர், எப்படியிருக்கிறது?'' என்று கவலையுடன் கேட்டாள்.

எல்லாரையும் பரிதாபமாகப் பார்த்து விட்டு, "ஜுர வேகம் உச்ச நிலையிலிருக்கிறது. இப்போது பரிசோதித்தபோது நினைவே இல்லை. இன்னும் இரண்டு நாட்களுக்கு உங்களில் ஒருவர் அவர் அருகிலேயே இருந்து ரொம்ப ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும். ராத்திரி வேளைகள் சிவராத்திரி மாதிரி கழியும். என்ன செய்வது? மணி தவறாமல் மருந்து கொடுக்க வேண்டும். யார் இருந்து அவரைக் கவனிக்கப் போகிறீர்கள்? நேரம், முறை எல்லாம் சொல்லுகிறேன்'' என்றார் டாக்டர் கவலைக் குறியுடன்.

"இதோ இவள்தான்! தூங்கா வரம் வாங்கி வந்திருக்கிறாள். வெறும் நாட்களிலேயே தூங்க மாட்டாள்'' என்றாள் ஜனகம், மைதிலியைச் சுட்டிக் காட்டி. "இரவு எட்டு மணிக்கு மிக்சர் ஒரு டோஸ்; எட்டு ஐம்பத்தி ஆறுக்கு ஒரு மாத்திரை; ஒன்பதடித்து மூன்று நிமிஷத்துக்குக் கஞ்சி'' என்று கூறினார். இப்படி அவர் சொல்லிக் கொண்டே போனது ஜனகம், கமலா, விமலா எல்லோருக்கும் ஒரேயடியாகத் தலை சுற்றியது. "இதையெல்லாம் செய்தால் எங்களுக்கு அடுத்த நாள் குழப்பத்திலேயே மூளை கலங்கி விடும்!'' என்றனர்.


மைதிலியின் கட்டிப் போட்டிருந்த ஆசை கடைசியில் தளர்ந்து அவிழ்ந்தது. "இத்தனை பொறுப்பு வாய்ந்த நிலையில் என் தலையில் பாரத்தைத் தள்ளுகிறீர்களே!'' என்று மனம் கலங்கினாள்.

அந்த இரண்டு நாட்களில் கிருஷ்ணமூர்த்தி மைதிலிக்கு அளித்த திகிலும், வருத்தமும் சொல்லி முடியாது. ஏதேதோ வாய் பிதற்றலுடன் அவன் படுத்துக் கொண்டிருந்தான்.

"அம்மா! அம்மா!'' என்று கத்திவிட்டு "என்னடா அப்பா!'' என்று அவளை பரிவோடு வந்து கேட்டபோது அவளைப் பயங்கரமாக விழித்துப் பார்த்துவிட்டு முகத்தை மூடிக் கொண்டான். கண்களில் ஜலம் ததும்ப, "மைதிலி! உன் சிசுருஷையிலே இருக்கிறது அவன் பிழைப்பு. அவன் நல்லபடியாக எழுந்தால் அது உன்னால்தான் அம்மா!'' என்றாள் மாமியார் உருக்கமாக.

மைதிலிக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாக கழிந்தது. "கஞ்சி கொண்டு வா!'' என்று தனது கணவன்

உமது விருந்தினர்கள் ருசிமிக்க போஜனத்தை எதிர்பார்க்கிறார்கள்



துஷார் சுத்திகரித்த எண்ணெயும் கிடைக்கும்

டெல்லியில் நடைபெறும் இந்தியன் இண்டஸ்ட்ரீஸ் பொருட் காட்சியில் உள்ள பிர்லா தொழிற்காட்சிப் பகுதியில் எமது ஸ்டால் நெ. B-71க்கு விஜயம் செய்யுங்கள்

கட்டிலை விட்டு அதைக் கொண்டு வந்து நீட்டிய போது அதை வாங்க முன் வந்த அவன் கரம் பலமாக உதறல் கண்டு அசைந்தது. "படுத்துக் கொள்ளுங்கள் ஊற்றுகிறேன்" என்று அவனைப் படுக்கையில் கிடத்தி விட்டு, பக்கத்தில் அமர்ந்து கஞ்சியைக் கொஞ்சம் கொஞ்சமாய் வாயில் ஊற்றினாள். சற்றைக்கொரு தரம் விழுங்காமல் நின்று அவளுடைய முகத்தையே விறைத்து நோக்கிய போது, "அம்பிகே! தாயே! என்ன சோதனை!" என்று கண்களில் நீர் துளிக்கப் பயத்துடன் முணுமுணுத்தான்.



சென்னை நகரசபைக்குத் தியாகராயநகர் தொகுதியிலிருந்து தேர்ந்து அனுப்பப்பட்ட காங்கிரஸ் அபேட்சகர் திரு கே. எம். சுப்பிரமணியம் அவர்களுக்கு அவரது நண்பர்கள் சமீபத்தில் விருந்துபசாரம் செய்து மகிழ்ந்தார்கள்.

"போர்த்திவிடு! மரம் மாதிரி நிற்கிறாயே! மண்டையைப் பிளக்கிறது, தலைவலி. மருந்து தடவு..." என்று அவன் மனைவியை அதட்டிய போது வாயிற்படியில் நின்று கொண்டிருந்த கமலாவும் விமலாவும் 'பாவம், மன்னி!' என்று அனுதாபப்பட்டனர்.

அன்று மாலை. ஜனகம் இரு பெண்கள் சகிதம் கோவிலுக்குச் சென்றிருந்தாள். கண்ணீருடன் ஜன்னலோரம் நின்று வெளியே பார்த்துக் கொண்டிருந்த மைதிலி தூக்கிவாரிப் போட்டவளாகத் திரும்பினாள். சற்று முன் வரையில் பிறர் உதவியின்றி எழுந்து படுக்க இயலாதிருந்த அவள் கணவன் இப்போது தானாகக் கட்டிலில் இருந்து இறங்கி யிருந்ததுடன் அவள் தோள்களின்மீது இரு கரங்களும் வைத்துக் கொண்டிருந்தான். "ஐயோ! குளிர் ஜுரம் அதிகமாகி ஜன்னி கண்டு விட்டதா?" என்று மைதிலி அலறினாள்.

உடல் வெடவெடக்க, கால் தடுமாற, கண்கள் மருண்டு நோக்கி நின்றிருந்த அவளை, "பயப்படாதே!" என்று அன்புடன் அழைத்து வந்து கட்டிலில் தன் அருகில் உட்கார வைத்துக் கொண்டான் கிருஷ்ணமூர்த்தி.

"வாசற் கதவைத் தாளிட்டுவிடு!" என்று உத்தரவு இட்டான். மைதிலி திகைப்புடன் அதை நிறைவேற்றினாள். "மைதிலி! எனக்கு ஜுரமும் இல்லை. குளிருமில்லை இப்போது. உடல் நிலை சமநிலைக்கு வந்து இரண்டு நாட்களாகின்றன. உனக்கு என் உடம்பைக் குணமாக்கிய நல்ல பெயர் கிடைக்கச் செய்ய நான் போட்ட திட்டம் தான் இந்த இரண்டு நாளைய ஜுரமும், வாய்ப் பிதற்றலும், கை உதறலும், உன்னைக் கோபமாகப் பேசியதும்......"

"திட்டமா?" மைதிலி வியப்புடன் கேட்டாள்.

"ஆமாம்! மனிதர்களுக்கு இரண்டு கண்களிருந்தாலும் அவர்களால் ஒரு சமயத்தில் ஒரு பொருளைத்தான் பார்க்க முடிவதுபோல, 'சுயநலம்' என்ற ஒன்றில் மனம் லயித்து விட்டபோது அதை படுத்துள்ள பிறர் உணர்ச்சிகள் என்ற ஒரு விஷயத்தை அவர்களால் பார்க்க முடிவதே இல்லை. மேற்படி தன்மையினால்தான் உன் மனக் குமுறலை என் அம்மாவும் சகோதரிகளும் உணரத் தவறி உன்னிடம் வேலை வாங்கி என்னிடம் அதைத் தாங்கள் செய்ததாகக் காட்டிக் கொண்டனர். இதை நான் நன்றாகக் கவனித்தேன். இந்நிலையில் நான் தேறி எழுந்தவுடன் தாங்கள்தான் என்னைக் குணப்படுத்தியதாக அல்லவா பெருமையடித்துக் கொள்வார்கள்! உனக்கு அவர்களிடம் நேரடியாக ஒன்றும் கேட்க முடியாது போனதைப் போலவே, நானும் உனக்குப் பரிந்து பேசினால் 'நேற்று வந்தவள் பெரியவளாகி விட்டாளா?' என்று தூஷணை கிடைக்குமல்லவா? இருவர் மேலும் பழி யில்லாமலிருக்க வேண்டும். அதனால் இரண்டுநாட்கள் வேணுமென்றே படுக்கையில் கிடக்கத் தீர்மானித்தேன்.

டாக்டர் என் அத்தியந்த நண்பர். எனக்கு உடம்பு அதிகமென்றும் என்னைச் சிரமப்பட்டுக் கவனிக்க வேண்டியது பற்றிய விவரங்களும் தெரிவிக்கச் சொன்னேன். என் யுக்திக்கு அவர் ஒத்துழைத்தார். அம்மாவும் சகோதரிகளும் பெயர் பெற்ற சோம்பேறிகள் என்பதுதான் கண்கண்ட உண்மை! நான் எதிர்பார்த்தபடியே பொறுப்பை உன்னிடம் தள்ளி விட்டனர். நாளையதினம் டாக்டர் வருவார். உன் திறமை மிக்க கவனிப்பில்தான் நான் பிழைத்ததாய்ச் சொல்லப் போகிறார். விட்டில் உனக்குக் கனகாபிஷேகமே நடக்கும்! எப்படி என் யோசனை......?"

மைதிலி வியப்பிலும் அடங்கா மகிழ்ச்சியிலும் சிலையாகி விட்டாள்.

"...அப்படியானால் இரண்டு நாட்களில் நீங்கள் சாப்பிட்ட மருந்துகள்......?"

"......அவை மருந்தா!......பாட்டில் மருந்து வெறும் ஜலம்; மாத்திரை என்று நீ கொடுத்து வந்தது உயர்ந்தரக பெப்பர் மிண்ட்! உன்னிடம் உண்மையைச் சொல்லத் துடித்தேன். ஆனால் உன் பதை பதைப்பையும், பரிவையும், என்னைப் பிடித்து, எழுப்பி, உட்கார வைத்து, படுக்க வைத்து அப்பாவித்தனமாய்ப் பணிவிடை செய்ததைப் பார்த்து, அனுபவித்து மகிழ்ந்தேன். உன் தளிர்க் கரம் பட்டு அந்த வகை சிசுருஷை இனி எப்போது மீண்டும் ஜுரம் வந்து கிடைக்குமோ......?"

"போதும் போதும். மீண்டும் உடம்பாம்! நான் பட்ட மனவேதனை ஈசன் அறிவார்! இப்போதுள்ள மகிழ்ச்சியில் எனக்குக் குளிர் ஜுரம் வரும் போலிருக்கிறது" என்று கொஞ்சினாள் மைதிலி.

தடதட வென்று வாயிற் கதவு தட்டப்படும் சப்தம். கணவனின் பிடியிலிருந்து விடுபட்டு ஓடினாள் மைதிலி, கதவைத் திறக்க. கிருஷ்ணமூர்த்தி பழையபடியே போர்வையை நன்றாக இழுத்துப் போர்த்திக் கொண்டு தலையை நத்தை போல் உள்ளுக்குள் இழுத்துக் கொண்டான்.

தமிழ் கூறும் நல்லுலகம்

பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழா அக்டோபர் 26ம் தேதி மேற்கு பிராந்திய ரயில்வே ஜெனரல் மானேஜர் திரு எம். கணபதி அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. திரு கணபதி அவர்கள் தமிழ்ச் சங்கம் பற்றியும், அது தமிழுக்கு ஆற்றி வரும் தொண்டைப் பற்றியும் வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.

ஆண்டு விழாவை ஒட்டிச் சென்ற 28, 29, 30 தேதிகளில் தமிழ்ச் சங்கத்தினர் தமிழ் விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடினார்கள். பம்பாய் முதலமைச்சர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் தமிழ் விழாவைத் துவக்கி வைத்தார். பேராசிரியர் அ. சீனிவாஸ ராகவன் அவர்கள் 'கம்பனும் ஷேக்ஸ்பியரும்' என்ற தலைப்பில் அழகாகப் பேசினார்.

அடுத்த இரண்டு தினங்களிலும் அவர், 'வடித்த சிந்தை' 'கவிதைத் தொழில்' 'தெய்வத் தமிழ்' 'மானும் கழுகும்' என்ற தலைப்புகளின் கீழ் அழகாக விரிவுரைகள் நிகழ்த்தினார். மூன்று தினங்கள் நடந்த தமிழ் விழாவில் பிரசங்கங்களைத் தவிர, திரு சுபஸ்ரீ, ஹரிஹரன் கோஷ்டியார் பாடிய பாரதியின் 'பாஞ்சாலி சபத' வில்லுப் பாட்டும், குமாரி கஜீவாவின் பரத நாட்டியமும் கலை நிகழ்ச்சிகளாக இடம் பெற்றன.

கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தமிழ் மொழிக்குத் தொண்டு புரிந்து வரும் பம்பாய்த் தமிழ்ச்சங்கத்துக்குத் தற்பொழுது சொந்தமாக ஒரு கட்டடம் உருவாகி வருகிறது.

திரு டி. கே. எஸ். சகோதரர்கள் கவாப் ராஜமாணிக்கம் கோஷ்டியார்களின் நாடகங்களை இங்கு நடத்தி அதன் மூலம் கட்டட நிதிக்குப் பொருள் சேர்த்தார்கள்.

அடுத்த ஆண்டு விழா, பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின், சொந்தக் கட்டடத்தில், தமிழ்க் கொடி வானளாவிப் பறக்க, சிறப்பாக நடைபெறும் என்பதில் ஐயமில்லை.

*

புனிதநன்னமான விஜயதசமி யன்று பம்பாய் மேயர் திரு பூபாலா அவர்கள் தலைமையில் பம்பாய் மாதர் சங்கத்தின் கலை விழா வெகு சிறப்பாக நடந்தேறியது. அதையொட்டி, பாரதீய வனிதா சமாஜத்தினர், உதவி ஜனாதிபதி, ராஜாஜி, விந்திய பிரதேச கவர்னர் மற்றும் அநேக பிரபல பிரமுகர்கள் முதலியவர்களின் ஆசிச் செய்திகளுடன் கூடிய ஒரு அழகிய மலரை வெளியிட்டுள்ளனர்.

மூன்று தினங்கள் நடைபெற்ற இக் கலை விழாவில், முதல்நாள் திரு பூபாலா தலைமையில் ஸ்ரீமதி சாவித்திரி கணேசன் குழுவினரின் இன்னிசைக் கச்சேரியும் விமரிசையாக நடந்தது.

இரண்டாவது நாள் பம்பாய் முன்னாள் கவர்னர் திரு மங்கள்தாஸ் பக்வாஸா அவர்கள் தலைமையில் டாக்டர் ராமச்சந்திரன் புதல்விகளும், ராஜ ராஜேஸ்வரி கலா மந்திரத்தின் மாணவிகளுமான குமாரி ராதா, குமாரி சாவித்திரி அவர்களின் பரத நாட்டியமும், மூன்றாவது நாள் பம்பாய் கவர்னர் திரு ஹரிகிருஷ்ண மஹதாப் முன்னிலையில் சங்கத்தின் அங்கத்தினர்கள் நடித்த வள்ளி திருமணம் என்ற நாடகமும் வெகு சிறப்பாக நடந்தேறின.

இக் கலைவிழா பாரதீய வனிதா சமாஜின் கட்டட நிதிக்காக நடைபெற்றது.

— ஆர். கண்ணன்

வசுமதியின் விவாகம்

சரஸன்

மாலை மணி ஐந்தடித்தது. வசுமதி தனது தம்பி ராஜாமணியின் அறையைச் சுத்தம் செய்து, சாமான்களை யெல்லாம் ஒழுங்காக அவை இருக்க வேண்டிய இடங்களில் சீராக வைத்தாள். தினமும் இந்த வேலையை அவள் செய்வது வழக்கந்தான். ஆனால் இன்று, இன்னும் கருத்துடன் செய்தாள். காரணம், ராஜாமணி இன்று மாலை காரியாலயத்திலிருந்து வரும் போது, மானேஜரையும் அழைத்து வரப் போவதாகக் கூறிவிட்டுச் சென்றதுதான்.

மணி ஐந்தரையாயிற்று. வாசலில் கார் வந்து நின்றது. அதிலிருந்து முதலில் ராஜாமணி இறங்கினான். அடுத்து இறங்கிய அதிகாரியை வாசல் அறையிலிருந்து கண்ணோட்டம் பார்த்த வசுமதிக்குச் 'சொரேர்' என்றது. இந்த உணர்ச்சி ஒரே கணந்தான். சட்டென்று அவள் சமாளித்துக் கொண்டாள்.

தன் அதிகாரியை உள்ளே தன் அறைக்குள் அழைத்து வந்து உட்கார வைத்தான் ராஜாமணி. வசுமதி தயாராய் வைத்திருந்த பலகாரம் காப்பி வகைகளைக் கொண்டு வந்து மேஜைமீது வைத்தாள். அப்போது அவளை நிமிர்ந்து நோக்கிய அதிகாரியின் முக பாவம் மாறு பட்டதைச் சகோதரி மட்டுமல்லாமல், சகோதரனும் கவனித்தான்.

அதிகாரி எப்படியோ சமாளித்துக் கொண்டு விட்டார். எனினும், அவருடைய மனம் மட்டும் சரியான நிலையில் இல்லையென்பதைச் சம்பாஷணையின் மூலம் அறிந்து கொண்டான் ராஜாமணி.

"ஏன் ஸார், ஒருமாதிரியாய் இருக்கிறீர்கள்! உடம்புக்கு ஏதாவது......! புறப்பட்டபோது காணப்பட்ட உற்சாகம் காணோமே இப்போது! ஒரு வேளை......" என்று இழுத்தான் ராஜாமணி.

"மிஸ்டர் ராஜாமணி! அதெல்லாம் ஒன்று மில்லை. அடடா! மறந்தே போய் விட்டேன். இன்று மாலை ஆறு மணிக்கு ஒருவரை என் வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கிறேன். எனக்கு நேரமாகி விட்டது. இன்னொரு சமயம் நான் சாவதானமாக வருகிறேன்" என்று கூறிவிட்டு 'விடுவிடு' என்று எழுந்து போய்க் காரில் உட்கார்ந்து கொண்டார் அதிகாரி.

ராஜாமணிக்குத் தன் அதிகாரியின் செய்கை வியப்பை உண்டாக்கியது. தன் தமக்கையை அவர் முன்பே அறிந்திருக்கிறாரா! — அதை ஏன் வசுமதி தன்னிடம் கூறவில்லை! எந்தச் சந்தர்ப்பத்தில் அவளை அவர் அறிந்திருந்தார்!

"அக்கா! அவர் போக்கை நீ கவனித்தாயல்லவா! ஏன் இவ்விதம் நடந்து கொண்டார்! ஒருவேளை உன்னைப் பார்த்துவிட்டுத்தான் இவ்விதம் திடீரென்று போய் விட்டாரா! உன்னை அவர் ஏற்கனவே அறிந்திருக்கிறாரா! எப்படி! எப்போது!" என்று தன் சகோதரியை நோக்கிக் கேட்டான் ராஜாமணி.

"அதென்னமோ, ராஜாமணி! எனக்கும் வியப்பாகத்தான் இருக்கிறது. என்னை அவருக்குத் தெரியாதே. சரி! அதற்காக நீ ஏன் கவலைப் படுகிறாய்!" என்று ஒன்றுமறியாத வளைப் போலப் பதில் கூறிவிட்டு, உள்ளே சென்று விட்டாள் வசுமதி.





ராஜாமணியின் சந்தேகம் நீங்கியபாடில்லை. தன் சகோதரியும் எதையோ மறைக்கப் பார்க்கிறாள் என்று உணர்ந்து கொண்டே, அவன் வெளியே சென்றான்.

வசுமதியின் பெற்றோர் அடுத்தடுத்துக் காலமானபோது, அவளுக்கு வயது பதினாறு. அவள் தம்பி ராஜாமணிக்கு வயது எட்டு. போதிய செல்வம் உள்ள குடும்பம் அவர்களுடையதாகையால், வசுமதி தன் இளந் தம்பியுடன் தனிமையில் இந்தப் பரந்த உலகில் விடப்பட்டபோது, குடும்பம் நடத்தச் சிரமப் படவில்லை. நல்ல வேளையாக, வீட்டுக்குப் பெரியவளாக, அவள் தாய்வழியில் உறவு கொண்ட ஒரு வயோதிக ஸ்திரீ துணைக்கு வந்து சேர்ந்தாள்.

ஐசுவரியமும், நல்ல அழகும் பொருந்திய வசுமதியை மணக்க எத்தனையோ இளைஞர்கள் விரும்பிப் போட்டி யிட்டனர். கிழவியும் அதற்குத் தகுந்தாற்போல, தூபம் போட்டுக் கொண்டே வந்தாள். எனினும் வசுமதியின் மனம் தன் திருமணத்தைப் பற்றிச் சிந்திக்கவே யில்லை. “என் கல்யாணத்துக்கு என்ன அவசரம், பாட்டி!” என்றாள்.

தன் அருமைத் தம்பிக்குத் தாயின் ஸ்தானத்தில் இருந்து கொண்டு, அவன் கண் கலங்கா வண்ணம் காத்து வரத் தன் கல்யாணம் ஒரு பெருந் தடையாயிருக்கும் என்று கருதியே, தன் கல்யாணத்தைப் பற்றிச் சிந்திக்காமலிருந்தாள் வசுமதி.

ஒருநாள், வசுமதியின் தோழி அலமேலு வந்திருந்தாள். இருவரும் சம வயதுடையவர்கள். அவளுக்குக் கல்யாணம் ஆகி, ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்டு, இரண்டாம் பிரசவத்திற்குப் பிறந்தகம் வந்திருந்தாள். தன் தோழி இன்னும் மணம் செய்து கொள்ளாமல் இருப்பது குறித்து மிகவும் ஆச்சரியப் பட்டாள் அலமேலு.

“வசு, நீ உன் தம்பியின்மீது வைத்திருக்கும் வாஞ்சையை நான் அறியாதவளல்ல. உன் தம்பியின் எதிர்காலம் உன் கல்யாணத்தினால் தடைப்பட்டுப் போகக்கூடும் என்று நீயாக ஏன் கற்பனை செய்து கொள்கிறாய்! வேண்டுமானால் உன்னை மணக்க விரும்பும் இளைஞனுக்கு ஒரு நிபந்தனை போடலாம். அதாவது, உன் தம்பியையும் உன்னுடனேயே வைத்துக் கொள்ளச் சம்மதம் தெரிவித்தால் தான் மணக்க முடியும் என்று கூறலாம்.”

இவ்விதம் யோசனை கூறினாள் அலமேலு.

தன் தோழி கூறிய யோசனை ஏற்றுக் கொள்ளக் கூடியதாய்த் தான் இருந்தது வசுமதிக்கு. ஆனால் இந்த நிபந்தனைக்கு உட்படக்கூடிய இளைஞன் கிடைக்க வேண்டுமே! எல்லா இடங்களிலும், தன் தோழி அலமேலு கூறியதைப் போன்ற பரந்த மனம் படைத்த கணவன் இருக்க முடியுமா என்று வசுமதி ஐயம் கொண்டாள்.

ஒரு சமயம்—அப்போது ராஜாமணி ஸ்கூல் பைனல் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான்—ராஜாமணி பள்ளிச் சிறுவர்களுடன் சில தென்னாட்டு ஸ்தலங்களுக்கு உல்லாசப்பயணம் சென்றிருந்தான். திரும்ப ஒரு வாரம் பிடித்தது. அந்தச் சமயம் ஒரு இளைஞன் வசுமதியைப் பார்க்க வந்தான். அவன் அவளுடைய நிபந்தனைக்கு உட்பட்டான். அவனையும் அவளுக்குப் பிடித்திருந்தது. பெண் பார்த்து விட்டு அவன் எழுந்த சமயம், வாசலில் தந்திச் சேவகன் வந்து ஒரு தந்தியைக் கொடுத்து விட்டுச் சென்றான். வசுமதிக்கு ஆங்கிலம் தெரியாதாகையால், கிழவி அந்த இளைஞனையே பிரித்துப் பார்க்கும்படி கூறினாள்.

தந்தியைப் படித்த இளைஞனின் முகம் மாறுபட்டது. “என்ன! என்ன!” என்று தன்னையும் மீறிக் கூவி விட்டாள் வசுமதி.

“ஓ! உங்கள் வீட்டுப் பையனுக்கு இழுப்பு வலி உண்டா! என் வீட்டுக்கு உங்கள் பெண் காலடி எடுத்து வைக்கும்போதே, நோயாளித் தம்பியை அழைத்து வருவதை நான் சிறிதும் விரும்பவில்லை. எனவே, என்னை நம்ப வேண்டாம்” என்று கூறினான்.

இதைக் கேட்டதும் வசுமதியின் உள்ளம் துடித்தது. “நானும் அவரை நம்பவில்லை என்று சொல்லுங்கள், பாட்டி! என் தம்பியைப் போல அவருக்கும் ஒரு தம்பி இருந்து, அவனுக்கும் இம் மாதிரி சரீரக் கோளாறு ஏற்பட்டால் அவர் என்ன செய்வாராம்! சற்று சிந்தித்துப் பார்க்கச் சொல்லுங்கள்” என்றாள் துடுக்குடனும், ஆத்திரத்துடனும்.

“அடா! மகா வாயாடி போலிருக்கிறதே இந்தப் பெண்!” என்று அந்த இளைஞன் வெறுப்புடன் கூறிவிட்டுச் சென்றது வசுமதியின் காதில் விழுந்தது.

தந்தியைப் பற்றிக் கூறவேண்டும் அல்லவா! உல்லாசப் பிரயாணம் செய்யச் சென்ற அவள் தம்பி திடீரென்று இழுப்பு வலியால் பாதிக்கப் பட்டிருப்பதாகவும், அது காரணமாய், அவர்கள் திரும்புவது ஒரு நாளுக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது என்றும், உடன் சென்ற ஆசிரியர் ஒருவர் ராஜாமணியின் வீட்டாருக்குத் தந்தி கொடுத்திருந்தார்.


தன் தம்பிக்கு இந்த நோய் உண்டு என்பதை வசுமதி அறிவாள். ஆனால் அது அடிக்கடி வருவதில்லை. எப்போதாவது வரும்; சில சமயம் வருஷக் கணக்கில்கூட வராமலே இருப்பதுண்டு.


தன் தம்பியின் நோய் காரணமாகத் தன்னை ஏற்க மறுத்த அந்த இளைஞன் மீது வசுமதிக்குப் பரம கோபம் உண்டாயிற்று. அவனுடைய மறுப்புப் பேச்சே அவளுக்குத் தன் கல்யாணத்தின் மீது அத்தனை வெறுப்பு ஏற்படக் காரணமாக இருந்தது.

சற்று நினைத்துப் பார்த்ததில், பிறருக்கு அது இடைஞ்சல்தான் என்று எண்ணத் தோன்றியது. தான் வேண்டுமானால், தன் தம்பியாயிற்றே என்ற ரத்தபாசம் காரணமாக அந்தக் கொடுமையைச் சகித்துக் கொள்ளலாம். ஆனால் பிறரும் அம்மாதிரி இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது மடத்தனம் என்று தோன்றியது. எனவே தன் தம்பியின் கடமையை ஏற்றுப் பிறர் ஏன் சிரமப்பட வேண்டும்! அந்த நிலையே ஏற்படாதவாறு தான் இருந்து விட்டால் ...

இதை எண்ணிப் பார்த்தவள் தன் தம்பியின் பொருட்டுத் தன் வாழ்க்கைச் சுகத்தையே தியாகம் செய்யத் துணிந்து விட்டாள்.

தன் தமக்கையை அந்த இளைஞன் பெண் பார்க்க வந்த விவரம் ராஜாமணிக்குத் தெரி


ஹத்திபாயின்
தராசு மார்க்
உத்திரவாதமான
ஸ்டெய்ன்லஸ்
ஸ்டீல்
பாத்திரங்கள்
உயர்ந்த ரகம்-நேர்த்தியான தயாரிப்பு
ஹத்திபாய் துள்ஸிதாஸ் அண்டு ஸன்ஸ், பம்பாய்-2



சென்னை தியாகராயநகர் டி.யு.வி.எஸ். கிளை ஒன்றின் வெள்ளி விழா சென்ற மாதம் விஜயதசமியன்று மாஜி மந்திரி டாக்டர் பூ. கிருஷ்ண ராவ் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக இக் கிளை புரிந்துள்ள சேவையைப் பச்சையப்பன் கல்லூரி பிரின்ஸிபல் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அவர்களும் மற்றும் பல அங்கத்தினர்களும் பாராட்டிப் பேசினார்கள்.

யாது. வசுமதியாகட்டும், கிழவியாகட்டும்; அதைக் கூறவில்லை.

ஒரு நாள் ராஜாமணி கேட்டான்: "அக்கா! எனக்காக நீ எவ்வளவோ பாடுபட்டிருக்கிறாய். நீ கல்யாணம் செய்து கொண்டு கணவன், மக்களுடன் வாழ்வதை நான் கண்டு அனுபவிக்க வேண்டாமா!"

"அதற்கென்னடா இப்போது அவசரம்! உன் க்ஷேமம்தான் எனக்கு முக்கியம்" என்றாள் பரிவுடன் வசுமதி.

இதற் கடுத்தாற் போலத்தான் அவனுடைய அதிகாரி அவனுடைய வீட்டுக்கு வந்து போன சம்பவம் நிகழ்ந்தது.

மறுநாள் காரியாலயத்தில், தன் அதிகாரியைக் கண்டு அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்க விரும்பிய ராஜாராமனுக்கு அதிகாரியிடமிருந்தே அழைப்பு வந்தது.

"மிஸ்டர் ராஜாமணி! நேற்று நான் உங்கள் வீட்டில் நடந்து கொண்ட முறை உங்களுக்கு வியப்பை உண்டாக்கியிருக்கும் என்று எண்ணுகிறேன்" என்றார் அதிகாரி.

"ஆமாம், ஸார்! அதைப்பற்றி நானே கேட்க விரும்பினேன்" என்றான் ராஜாமணி.


அதிகாரி மேலும் தொடர்ந்தார். "உங்கள் தங்கையை நான் ஏற்கனவே அறிவேன். ஒரு சமயம் அவளைப் பெண் பார்க்கச் சென்றேன். அப்போது நீங்கள் வீட்டில் இல்லை. உல்லாசப் பிரயாணம் சென்றிருந்தீர்கள். எனக்கு அவளைப் பிடித்திருந்தது. அவளுடைய நிபந்தனைக்கும் உட்பட்டேன். தற்செயலாக அப்போது உங்களுக்கு இழுப்பு வலி கண்டிருப்பதாக ஒரு தந்தி வந்தது. நான்தான் அதைப் படித்துக் காட்டினேன். உடனே என் மனம் மாறியது. ஒரு நோயுள்ள பையனை என்னுடன் வைத்துக் கொள்ள விரும்பவில்லை. அதைப் பற்றிப் பச்சையாய்க் கூறிவிட்டேன். உங்கள் தங்கை பதிலுக்கு என்ன கேட்டாள், தெரியுமா! 'அவருடைய தம்பிக்கு இம்மாதிரி வந்தால் அவர் என்ன செய்வாராம்!' என்றாள். அது ஒரு துடுக்கான பேச்சு என்று அப்போது எண்ணி வந்து விட்டேன். இப்போது என்னைப் பார்க்கையில் முற்றும் உண்மையான பேச்சு-தீர்க்கதரிசனமான வார்த்தை என்றுதான் தோன்றுகிறது. அவளுடைய சகோதர உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுக்காமல் அவள் மனம் புண்படும் வண்ணம் பேசி விட்டதன் பலனை இன்று அனுபவிக்கிறேன். என் உடன் பிறந்த தம்பி சித்தசுவாதீனம் இல்லாமல் இருக்கிறான். திடீரென்று தான் இந்தக் கோளாறு ஏற்பட்டது. நேற்று உங்கள் தமக்கையைக் கண்டதும், அவளைக் காண என் கண்கள் கூசின. மனம் சலனப்பட்டு விட்டது. அது காரணமாகத்தான் திடுதிப்பென்று எழுந்து வந்து விட்டேன். என் சகோதரன் மூளைக் கோளாறு காரணமாகவே நான் இன்னும் மணம் செய்து கொள்ளாமலிருக்கிறேன். நல்ல வேளை, இப்பேர்ப்பட்ட இரக்கமற்றவனை உங்கள் தமக்கை மணக்காமலிருந்ததே உத்தமமான காரியம். நேற்று உங்கள் வீட்டில் நான் இருந்த அறையை ஒரு தடவை கண்ணோட்டம் விட்டபோது, அந்த அறை எத்தனை சுத்தமாயும் துப்புரவாகவும் இருந்தது! தன் கணவனுடைய அறையை எத்தனை அழகாக வைத்திருக்கிறாள் என்று வியந்தேன். ஆண்டவன் உங்கள் தமக்கையையும், அவள் கணவன், குழந்தைகளையும் க்ஷேமமாய் வைத்திருக்க வேண்டும்" என்று கூறிக் கண்ணீர் பெருக்கினார்.

"ஸார், என் தமக்கைக்கு இன்னும் மணமே ஆகவில்லை. நீங்கள் நேற்று கண்டதெல்லாம் என் அறைதான்! உங்கள் ஆசியின் பலத்தினால்தான் இனி நடக்க வேண்டும். உங்களுக்கு விருப்பமானால்..." என்றான் ராஜாமணி.

வசுமதி சுதர்சனத்தின் கையைப் பிடித்த வேளைதானோ என்னவோ, சுதர்சனத்தின் தம்பியின் உடல் நிலையும் பழைய நிலைக்கு வர ஆரம்பித்தது. அது மட்டுமா! ராஜாமணியின் இழுப்பு வலியும் வைத்திய சிகிச்சையினால் பூரண குணமடைந்து விட்டது.

இவ் வருஷம் அவ்வீட்டில் மூன்று தலை தீபாவளிப் பண்டிகைகள் அமோகமாக நடந்தன.

ஆற்றங்கரையினிலே



பேராசிரியர், ரா. பி. சேதுப்பிள்ளை

45. கும்பகோணம் (தொடர்ச்சி)

வட நாட்டில் நிகழும் கும்பமேளா என்னும் விழாவைப் போன்று கும்பகோணத்தில் பன்னிரண்டுக்கு ஒரு முறை நடைபெறுவது 'மாமாங்கம்' என்னும் மகாமகம். நினைப்பிற்கு எட்டாத நெடுங் காலமாக நடந்து வரும் மகாமக விழாவிலே கோடிக் கணக்காக மக்கள் கூடுவர்; புனித நீர் ஆடுவர்; ஈசன் புகழ் பாடுவர்.

**"தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
சரஸ்வதிபொற் றாமரைபுட் கரணி
தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தம் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெம்
கூத்தனாரே"**

(கோவி - கோமி என்னும் கோமதி: வட நாட்டிலுள்ள நதி)

என்னும் தேவாரத் திருவாக்கால் மகாமகத்தின் பெருமை ஒருவாறு விளங்கும். இத் திருவாக்கைத் தழுவி,

**"பூமருவும் கங்கைமுதல்
புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தான் ஆடுதற்கு
வந்துவழி படுங்கோயில்"**

என்று திருத்தொண்டர் புராணமும் பாடிற்று.

இத்தகைய சீர்மை வாய்ந்த குடந்தையம் பதியில் கலை வளர்க்கும் கல்லூரி யொன்று சிறப்புற்று விளங்குகின்றது. வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியின் வட கரையில் கண்ணுக்கினிய சோலையின் நடுவே காட்சி யளிக்கும் அக்கலைக் கோயில், தமிழ்நாட்டுத் தலைவர் பலரை உருவாக்கித் தந்த பெருமை யுடையதாகும். எண்ணிலும் எழுத்திலும் வல்லார் பலரை ஈன்றளித்துப் பிறநாட்டு நல்லறிஞர் சூட்டிய புகழ்மாலையும் பெற்றதாகும்.

எண்ணியல் ஆராய்ச்சியில் வல்லவர் என மேலை நாட்டு நுண்ணறிவாளரும் பாராட்டிய கணித மேதையாகிய இராமானுசம் இளமையிற் கலை பயின்ற கல்லூரி அதுவே! ஆங்கில மொழியை ஐயந்திரிபற ஓதியுணர்ந்து, இனிமையாகச் சொற்பொழிவாற்றும் திறமை பெற்றுச் "சொல்லின் செல்வர்" என்று எல்லோராலும் புகழப் பட்ட சீனிவாச சாஸ்திரியாரை உருவாக்கிய கல்லூரியும் அதுவே! இன்னும் பாரத நாட்டில் பெயர் பெற்ற பேராசிரியர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், நீதிபதிகளாகவும், நிர்வாகத்திறனுடையோராகவும், அமைச்சராகவும், ஆட்சியாளராகவும் விளங்கிய அறிஞர் பலர் அக் கல்லூரி மாணவர்களே யாவர்.

நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல் தண்டமிழ்ப் பெருந் தொண்டராகிய சாமிநாதையர் அக்கல்லூரியில் ஒரு நல்லாசிரியராக அமர்ந்தார். இருபதாண்டுகளுக்கு மேலாக அங்கு இடையறாப் பணி செய்தார். ஏட்டில் அடங்கி யிருந்த தமிழ்ப் பெருங் காவியங்களையும் சங்க நூல்களையும் ஆராய்ந்து அச்சிட்டு அழியாப் புகழ் எய்தினார். நாடுதோறும் சென்று ஏடு தேடி, அகப்பட்ட சுவடிகளை எழுத்தெழுத்தாக ஆராய்ந்து, விளங்காத பொருள்களை வல்லார் வாய்க் கேட்டுணர்ந்து, அல்லும் பகலும் அரும்பாடு பட்டு அவர் வெளியிட்ட சிந்தாமணிக்

காவியத்தைத் தமிழகம் பொன்னே போல் போற்றி மகிழ்ந்தது.

சென்னைமா நகரில் ஆங்கிலப் புலமையும் அருந்தமிழ் ஆர்வமும் உடையார் சிலர் அக்காலத்தில் வாழ்ந்தனர். அன்னவருள் ஒருவர் பூண்டி அரங்கநாத முதலியார். சென்னை அரசாங்கக் கல்லூரியில் பேராசிரியராக வீற்றிருந்து புகழ் பெற்ற அவ்வறிஞரிடம் சிந்தாமணியை நேரில் அளித்து இன்புற ஆசைப்பட்டார் ஐயர் பெருமான். ஆனால் அவரைக் காணுதற்கேற்ற வாய்ப்புக் கிடைக்கவில்லை. கும்பகோணத்திற்குத் திரும்பி வந்தவுடன் பூண்டி அறிஞருக்குப் பாட்டிலே ஒரு கடிதம் தீட்டினார்.

"திருத்தருமா முனிவன்அருள் தேன்வியசிந்
தாமணியைத் திருவிலாதேன்
வருத்தமிக ஆய்ந்துஅச்சில் பதிப்பித்து
முடித்தபெரு மகிழ்வை ஓதும்
கருத்துடையேன் ஆகிஅந்த நூலையும்கைக்
கொடுநின்னைக் காண வந்தும்
பெருந்தஅபாக் கியம்என்னைத்
தடுத்தமையால்
நினைக்காணப் பெற்றி லேனால்"

என்று ஐயரவர்கள் எழுதி விடுத்த பாட்டின் பொருள் உணர்ந்து அகங் குழைந்தார் அரங்கநாதர். சிந்தாமணியை அச்சிடும்போது பதிப்பாசிரியர் அடைந்த தொல்லைகளை யெல்லாம் நினைந்து வருந்தினார். "மூந்தித் தவம் கிடந்து, அந்தி பகலாய் ஈசனை வந்தித்து ஓர் ஆண் மகவைப் பெற்ற அன்னையின் இன்பம் போன்றதன்றோ ஐயரவர்கள் பெற்ற இன்பம்? தான் பெற்ற மகவைத் தன் ஆருயிர்த் தோழியிடம் காட்ட விரும்பும் தாய் போலன்றோ சிந்தாமணியை அவர் என்னிடம் எடுத்துவந்தார்? அதனை அன்புடன் வாங்கி, அகமகிழ்ந்து நோக்கி முகமலர்ந்து நான் மெச்சி யிருந்தால் அவர் இன்பம் உச்ச நிலை அடைந்திருக்குமன்றோ" என்று பலவாறாக எண்ணி உருகினார். இத்தகைய உணர்ச்சி வசப்பட்டு ஒரு தமிழ்ப் பாட்டியற்றினார்.

"அன்றனைக் காண நயந்தனை ஐய
அமயம்ஒவ் வாமையால் அமைவாய்ச்
சென்றனை நின்னைக் கண்டிலாக் குறையது
என்னதே சிற்றறி வுடையேன்
ஒன்றல பலவாம் பிழைசெயத் தருமே
உத்தம குணம்ஒருங் குடையாய்
கன்றினைக் காராக் கவியுறக் காக்கும்
கனிவொடு கமித்தல்நின் கடனே"

(அமயம் - சமயம்; கமித்தல் - பொறுத்தல்)


என்ற பாட்டை மறு மொழியாக அனுப்பினார் அரங்கநாதர். "சிந்தாமணியைத் தங்கள் செங்கரத்தால் வாங்கும் பேறு பெற்றேனில்லை; சிறியேன் செய்த பிழையெலாம் பொறுப்பது பெரியோராகிய தங்கள் கடனே" என்று அவர் பாடிய பாட்டில் அமைந்த பண்பாட்டைப் பாராட்டினார் ஐயர் பெருமான்.

சிந்தாமணியைத் தொடர்ந்து சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் அச்சிட்டு உதவினார் சாமிநாதய்யர். பத்துப் பாட்டும் புறநானூறும் பிற நூல்களும் ஒன்றன் பின் ஒன்றாய் அச்சேறி வரக் கண்டு தமிழகம் பேரின்பம் அடைந்தது. செந்தமிழ்ச் செல்வத்தை ஐயரவர்கள் வாயிலாக வாரி வழங்கிய கும்பகோணத்தைத் திசை நோக்கி வணங்கிற்று.

கீதாவின் அரங்கேற்றம்

சென்னை இந்திய நுண் கலைச் சங்கத்தின் ஆதரவில், குமாரி கீதாவின் நாட்டிய அரங்கேற்றம் சென்னை மியூஸியம் தியேட்டரில் அக்டோபர் 30-ந் தேதி வெகு விமரிசையாக நடந்தேறியது. இந்தியா ஸ்டாண்டர்ட் மோட்டார் புராடக்ஸ் கம்பெனியின் பிரதம இன்ஜினியர் திரு கே. என். ராமநாதன் அவர்களின் புதல்வியான குமாரி கீதா பந்தணைநல்லூர் திரு சொக்கலிங்கம் பிள்ளை அவர்களிடம் முறையாகப் பரத நாட்டியம் பயின்றவர். மேற்படி அரங்கேற்ற வைபவத்துக்குத் தலைமை வகித்த 'ஹிந்து' பத்திரிகையின் துணை ஆசிரியர் திரு என். ரகுநாதய்யர் அவர்கள் குமாரி கீதாவின் நடனத்தைப் பாராட்டிப் பேசினார்.





அன்னை உள்ளம்

துரோணன்

'டாக்காணு ஸ்டேஷனில் எனக்கு ஸ்டேஷன் மாஸ்டர் உத்தியோகம்' என்ற அவசர உத்தரவைக் கண்டதுமே என் உள்ளம் 'பகீ' ரென்றது! தற்பொழுது, மனிதன் மிருகம்போல் செயல் புரிந்து பிரபலமாகியிருக்கும் கோவா நகரின் பக்கத்து ஸ்டேஷனதான் இந்த 'டாக்காணு!' ஆனால், இந்த ஸ்டேஷனில் எனக்கு எட்டு நாளைய உத்தியோகம்தான். இந்த எட்டு நாட்களும்தான், எனக்கு எட்டு ஜென்மங்களாகி விட்டனவே!

சில சமயங்களில், மனிதன் செய்யும் மிருகச் செயல்கள் போதாதென்று, தெய்வமும் கூடச் சேர்ந்து கொண்டு சோதனை செய்கிறதல்லவா? அதேதான் அந்த துக் தாம் நாளன்று—

வான முகட்டில் பைசாசங்களின் நர்த்தனம்தான் அப்பொழுது நிகழ்ந்து கொண்டிருந்தது போலும்! 'பட பட' வென்று தொடர்ந்த இடி முழக்கங்களின் கோர சப்தம் செவிகளின் சக்தியைப் பறிப்பது போன்றிருந்தன. உட்புறம் தொங்கிக் கொண்டிருந்த கூண்டு விளக்குகளோ, காற்றின் ஆவேசச் சுழலில் தத்தளித்துக் கொண்டிருந்தன. நான் கதவுகளிரண்டையும் தாளிட்டு விட்டு வந்து அமர்ந்தேன். 'உஸ் உஸ்' என்ற சாரல் காற்று மேல் புறத்துச் சாளரங்களின் வழியே சீறிற்று.

மூன்று மணி காலமாகக் கீழே பிரக்ஞையற்றவன் போன்று படுத்திருந்த போர்ட்டர் கனீல் பரபரப்புடன் எழுந்தான். பாவம், இரண்டு தினங்களாக, தீராத வயிற்று நோய் அவனைப் படாதபாடு படுத்திக் கொண்டிருந்தது. நான் அவனைச் சமிக்ஞையுடன் நோக்கவும், "ஸார், நான் எதிர் கூடாரத்துக்கே சென்று படுத்துக் கொள்ளுகிறேன் ஸார்! அந்த இடம்தான் எனக்குத் தகுதியானது—" என்றான் கெஞ்சலான குரலுடன்.

அவனது வேண்டுகோள் என்னைத் திகைப்பில் ஆழ்த்திற்று. இரண்டு தினங்களாகச் சரியான ஆகார மின்மையால் அவனுடலில் சோர்வு மிகுந்திருந்தது. பேசவும் சக்தியற்ற அவன் எவ்வாறு இரண்டு தண்டவாளங்களையும், குறுக்கே நிற்கும் 'கூட்ஸ்' வண்டியையும் தாண்டிக் கொண்டு, எதிர்ப்புறமிருந்த சாமான் கூடாரத்துக்குச் செல்ல முடியும்?

நான் கனீலை நோக்கி, அவனது உடலின் பலவீனமான நிலையை மீண்டும் விளக்கி

னேன். அவன் சற்றே தைரியத்துடன், "நான் ஓடியே விடுகிறேன் ஸார்" என்று கூறிய வண்ணம் கீழேயிருந்த போர்வையையும் சுருட்டிக் கொண்டான். அதன் பின்னர் நான் அவனைத் தடை செய்யவில்லை. சுவரில் மாட்டியிருந்த சாவிக் கொத்தையெடுத்து அவனிடம் கொடுத்துவிட்டுப் பிளாட்பாரத்தின் கதவைத் திறந்தேன். கனில் பரபரப்புடன் பிளாட்பாரத்தில் இறங்கி, ஒரு கொடிப் பொழுதுக்குள்ளாகவே இரண்டு தண்டவாளங்களையும், கூட்ஸ் வண்டியையும் கடந்து, எதிர்ப்புறத்தின் மேட்டில் ஏறிவிட்டான்.

சிந்தனையின் போக்கில் என்னையறியாமலே சற்றுக் கண்ணயர்ந்து விட்டேன் போலும். பதினைந்து நிமிஷங்கள் கூடக் கழிந்திருக்காது. வெளிப்புறத்தின் கதவை இடிக்கும் சப்தம் கேட்டது. சற்று நேரம் பேசாமலே உட்கார்ந்திருந்தேன். கதவை மீண்டும் தட்டி விட்டு, கொச்சையான மகாராஷ்டிர பாஷையில், 'கடவுளே, உனக்கு இரக்கமில்லையா?—' என்ற தீனமான குரல் கேட்டது. அடுத்த கணம் போர்வையை உதறிவிட்டு எழுந்து சென்று கதவை இலேசாகத் திறந்தேன். என் விழிகள் அசைவற்று விட்டன!

"பாபுஜி, பாபுஜி!"—இவ்வாறுவ பரபரப்பும் விசியும் நிறைந்த குரலை விடுத்தபடியே, முக்காடிட்ட ஒரு கோஷாப் பெண் நின்று கொண்டிருந்தாள். அவளது தலையும், மேலிருந்த வெண்மைச் சால்வையும் பிழிந்தெடுக்கும் நிலையில் நனைந்திருந்தன. அவளது முகத்தினின்றும், அவள் இருபது வயதான இளம் பெண்ணென்பது தெரிந்தது. ஆனால், அவள் போர்த்தியிருந்த போர்வையின் கனமோ, அவளை மிகப் பருமனான ஸ்திரீயாக எடுத்துக் காட்டிற்று.

அவள் தடுமாறிய குரலுடன், "பாபுஜி! சீக்கிரமாக என்னை மறைத்து வைத்துக் காப்பாற்றுங்கள். வெறியர்கள் என்னைத் துரத்தி வருகிறார்கள்—நான் அபலை—" என்றாள். அவள் பேசியது பிழை நிறைந்த ஹிந்துஸ்தானி பாஷை. அதில் மகாராஷ்டிரமே பெரும்பாலும் கலந்திருந்தது.


அடுத்த கணம் நான் சற்றும் தாமதிக்கவில்லை. ஏனெனில், வெறியர்களின் அட்டகாசக் குரல்கள் சமீபத்தில் முழங்கிக் கொண்டிருந்தன. அவளை உட்புறத்துக்கு அழைத்துச் சென்று விட்டுக் கதவுகளின் தாழ்ப்பாளைப் பிணைத்தேன். அவள் தலை குனிந்தவாறு சுவரின் மூலைப் புறத்தைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

நல்ல வேளையாக, கீழ்த் தளத்துப் 'பெட்ரோல் அறை' காலியாக இருந்தது. மேல் புறத்தினின்றும் நோக்குபவர்களுக்குச் சாதாரணமாக அந்த இடமே தெரியாது. அதன் மேல் மட்டத்தை மூடியிருந்த கம்பிக் கதவுகளைத் தூக்கிவிட்டு, அதில் அவளை இறங்கி உட்காரச் சொன்னேன். அவள் நன்றி நிறைந்த பார்வையுடன் கீழ் இறங்கிச் சென்றாள்.

வெளி வானத்தின் ஆர்ப்பாட்டங்கள் சற்றே குறைந்திருந்தன. ஆனாலும், சாளரத்தின் வழியே தெரிந்து கொண்டிருந்த மின்னலொளிகள் 'பளீர், பளீ' ரெனக் கன்னத்தில் அறைவது போன்றிருந்தன. கடிகாரத்தை நோக்கினேன். மணி நான் கடிக்கப் பதினைந்து நிமிஷங்களே யிருந்தன.

"சால்கார்ஜி! சால்கார்ஜி!" என்ற பெருங் கூப்பாடுகளுடன் அறையின் கதவுகள் தட்டப்பட்டுக் கொண்டிருந்தன. வெளிப்புறத்தில் முழங்கிக் கொண்டிருந்த குரல்களின் மூலம், நாலைந்து முரடர்கள் இருப்பதாக ஊகித்தேன். சற்று நேரம் என்ன செய்வதென்று தெரியாமல் சிலையாகவே நின்றேன். மீண்டும், வலிவுடன் தடதட என்ற ஓசை எழுந்தது.

போர்வையை இழுத்துப் போர்த்திய வண்ணம் கதவைத் திறந்தேன். வெளிப்புறத்தில் மூவர் இருந்தனர். ஏறக்குறைய இந்தியர்களைப் போன்றிருந்த அவர்கள்—போர்த்துகீசியர்கள்! அவர்களது கைகளில் 'பள பள' வென்ற குறுந்தடிகள் இருந்தன! அவர்களது விழிகளோ, செந்நிறமான அபாய விளக்குகள் போன்றிருந்தன!



பம்பாய் பட்டணத்தில் சென்ற முப்பது ஆண்டுகளாகத் தென் இந்திய சமூகத்தினருக்குச் சமூக சம்பந்தமாகவும், மத சம்பந்தமாகவும் ஸ்ரீ ரகுநாத பட்டாச்சாரியார் அருந் தொண்டு செய்து வந்திருக்கிறார். நன்றி மிக்க பம்பாய் பிரமுகர்கள் ஸ்ரீ பட்டாச்சாரியார் அவர்களுடைய ஷஷ்டியப்த பூர்த்தியை விழாவாகவே சென்ற செப்டம்பர் 23-ம் தேதி வேத மந்திர ராமாயண பாராயணங்களுடன் கொண்டாடினார்கள். ஸ்ரீ பட்டாச்சாரியார் தம்பதிகள் ஆண்டவன் அருளால் நீடூழி வாழ்ந்து தங்கள் சீரிய பணியைத் தொடர்ந்து புரிவார்களாக!

அவர்களில் ஒருவன் மட்டும் என்னை நோக்கித் தலையைத் தாழ்த்தியவண்ணம் வணக்கம் தெரிவித்தான். மற்றவர்களது விழிகளெல்லாம் அறையின் உட்புறத்தை ஊடுருவி நோக்கின.

"எங்கே அவன்?" என்று கேட்டான் ஒருவன். அவனது குரல் இடியோசை போன்றிருந்தது.

அடுத்தகணம், அவர்கள் என் அனுமதியின்றியே ஸ்டேஷன் அறைக்குள் நுழைய முற்பட்டனர். நான் வாயிற்படியை மறைத்தவண்ணம் நின்று, "நில்லுங்கள்! உங்களுக்கு என்ன வேண்டும்? இது சர்க்கார் கட்டடம் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்றேன், அவர்களது பாஷையிலேயே!

அவர்கள் சற்றே திகைப்படைந்தனர். ஆனால் ஒரு முரடன், "பதறாதே! உனக்கும் உன் சர்க்காருக்கும் நாங்கள் கெடுதி செய்வதற்காக வரவில்லை. உள்ளேயிருக்கும் அந்தக் கள்ளியை வெளியே தள்ளு!" என்றான். அவனது சொற்களில் அலட்சியமான மரியாதைக் குறைவும், கண்டிப்பும் பிரதிபலித்தன.

நான் கலக்கமடைந்தேன். அவர்களுடைய பார்வைகள் என் உயிருக்கு எச்சரிக்கை விடுவது போல் இருந்தன.

அவர்களது கவனத்தை வேறு வழியில் எப்படித் திருப்பலாம் என்ற யோசனை புரியாமல் குழம்பினேன். ஆனாலும் சாவதானத்துடன், "நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள்? விஷயம் புரியும்படி கூறினால் நானும் உங்களுக்கு உதவி செய்வேனே!" என்று கூறினேன்.

மூவரும் ஏககாலத்தில் என் முகம் நோக்கி ஏளனமிட்டனர். "உள்ளே நீ மறைத்து வைத்திருக்கும் கள்ளி எங்களை ஏமாற்றி விட்டு வந்திருக்கிறாள். அவளுக்குப் பிறந்துள்ள குழந்தையை எங்கள் நாட்டின் பிரஜையாகப் பதிய வைக்காமல் எடுத்துக் கொண்டு ஓடி வந்து விட்டாள். அவளை நீ வெளியே தள்ளாவிட்டால், அவளது கணவனுக்கு என்ன நேர்ந்ததோ, அதுவே உனக்கும்."—இவ்வாறு மிகப் படபடப்புடன் அவர்களில் ஒருவன் கூறினான். மற்றொருவனோ தன்னுடைய கையில் இருந்த தடியினால் கதவின் மேல் ஓங்கி அடித்தான்.

விஷயம் எனக்கு ஒருவாறு விளங்கியது. எதிர்ப்பின் மூலம் அவர்களைச் சந்திக்க முடியாது என்பது எனக்கு ஒருகணத்தில் தோன்றி விட்டது. உட்புறச் சுவரில் கடிகாரத்தின் அருகாமையிலிருந்த காந்திஜியின் படம் என்னை சாத்வீகத்தின் மூலம் வெற்றியடையப் புத்தி கூறுவது போலிருந்தது. அதைத் தொடர்ந்து ஒரு யுக்தியும் தோன்றிற்று. கனிவ் இருந்த அந்த ஷெட்டின்புறம் அவர்களைத் திருப்பி விட்டு, வேறு ஏற்பாடு செய்து விடலாம் என்ற திட்டம் என் உள்ளத்தில் உருவாயிற்று. எல்லாம் ஒரே நிமிஷப் பொழுதில்!

ஆனால், துர்ப்பாக்கியமான நிகழ்ச்சியே அப்பொழுது நடந்தது! இத் தடத்திலிருந்து அப்பெண்ணுக்குத்தான் எத்தகைய கொடுமதி தோன்றியிருக்க வேண்டும்? பைத்தியக்காரி!

அறையின் மறுபுறத்திலிருந்த பிளாட்பாரத்தின் கதவை அவசரமாகத் திறக்கும் ஓசை கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினேன். அவள் தம் கரங்களில் எதையோ ஏந்தியவண்ணம், புற்றீசல் போல் வெளிப்புறத்துக்குப் பாய்ந்தாள். அடுத்த கணமே, வெறியர்களின் அட்டகாச நகைப்புக்கள் வெளியாயின. என்னைப் பயங்கரமான பார்வையினால் எரித்த வண்ணம் அவர்கள் என்மேல் விழுந்தவாறே உட்புறம் வழியாக ஓடினர்.

அவளது ஏந்தலான கரங்களில் ஆமாம், துணியினால் மூடப்பெற்றிருந்த அந்தச் சிசு இருந்தது! அவள் இங்கு வரும் போது எனக்குக் கூடத் தெரியாமல் எவ்வாறு அதைக் கொண்டு வந்தாள்?


ஸ்டேஷனின் நேர்ப் பார்வைக்கு ஐம்பது கெஜ தூரம் கூட இல்லை, அந்த வாராவதி இருந்த இடம். அதில் இரும்புப் பாதையைத் தவிர்த்து, நடந்து செல்லுவதற்குரிய பாதையுமில்லை. அதன் கீழேயோ — குமிப்புடன் ஓடும் காட்டாற்று வெள்ளம்.

வாராவதியின் முகட்டிலேயே, அவள் முரடர்களின் பிடிகளுக்குச் சிக்கி விட்டாள். ஆனால், அடுத்த இமைப் பொழுதின் காட்சியினால் என் இதயம் வெடித்து விடும் போன்றிருந்தது. என்னையறியாமலே நான் 'ஓ' வெனக் கூச்சலிட்டும் விட்டேன். அவள்—தன் கைகளிலிருந்த சிசுவை முன் பின் யோசியாது பிரவாகத்தில் எறிந்து விட்டாள். இக் கொடூரத்தைக் காட்டிலும் அதை அந்த முரடர்களிடமே ஒப்படைத்திருக்கலாமே? உண்மையான பாசம் நிறைந்த தாய்க்குத் தன் குழந்தை உயிருடனிருப்பதானால், அது எந்த நாட்டுப் பிரஜையாகத் தானிருந்தாலென்ன? கணவனையும் முரடர்களுக்குப் பலி கொடுத்து, குழந்தையையும் தன் கைகளாலேயே கொல்லுவிக்கும் அந்தப் பெண் மட்டிலும் உயிருடனிருந்து என்ன ஆக வேண்டும்? அதைக் காட்டிலும், அச்சிசுவை அணைத்தவாறு, அவளே அதில் குதித்திருக்கலாமே? பாதகி!

என் சிந்தனை அறுந்தது. நான் மீண்டும் வெளியே வந்து பார்த்தேன். வெறியர்களையோ அந்தப் பெண்ணையோ அங்கே காணவில்லை.

வானத்தின் புயலும், பூமியின் புயலும் ஒருவாறு ஏக காலத்தில் ஓய்ந்தன. எதிர்ப்





உறுதி, நம்பிக்கை மற்றும் நீடித்த மைல்கள் ஓடி உழைப்பதற்கு சூப்பர் இந்தியா நீயாண்ட் டயர்களுக்கு* (லாரி, பஸ் டயர்கள்) ஈடு இணையில்லை. அனுபவசாலிகளான ரஸ்தா போக்குவரத்து வாகன முதலாளிகள் பெரும்பான்மையோர் தங்கள் லாரிகளுக்கும் பஸ்களுக்கும் இப்பிரசித்தி பெற்ற டயர்களையே வெகுகாலமாக உபயோகித்து வருகின்றனர்.

* இந்த டயர்களுக்கு இப்பொழுது ரேயான் கோனிங் உள்ளதனால், ஓடும் போது டயர்கள் அதிகமாக சூடாகாது . . . அதிக மைலேஜும் கிடைக்கிறது.

"சிவப்பு வட்டமுள்ள டயர்கள்"

(T. 9492 (s)


பூரண வாய் சுத்தத்திற்கென தயாரிக்கப்பட்டது
• கிருமிகள் அகற்றப்பெற்ற நைலான் முடிகள்.
• அழகிய பிளாஸ்டிக் பிடியில் நன்கு இணைக்கப்பட்ட முடிகள்.
• உங்கள் பற்களுக்கான உருப்பெற்றது; சுலபமாக சுத்தம் செய்கிறது.
• மிருதுவான சுத்தி—பல்லின் எனமலை பாதிக்காது.
• மெதுவான முறையில் ஈறுகளை பலப்படுத்துகிறது.
அதிக பலனுடன்!
பற்களைப் பூரணமாக சுத்தம் செய்கிறது. ஈறுகளை மிருதுவாக தடவி விடுகிறது.
மூன்று அளவுகள்: பெரியவர்களுக்கு, சிறியவர்களுக்கு, குழந்தைக்கு • ஹார்ட் • மீடியம் • ஸாப்ட்
கால்கேட்
நைலான் டூத் பிரஷ்
மலிவு-நீடித்த உழைப்பு


டியூபுகளில் ஏன் பாட்டில்களல்ல?
* கலவைப் பொருள்கள் புத்தம் புதியதாகவும் சுருசுருப்புடனும் இருக்கும்.
* தூய்மை கெட்டுப் போக முடியாது.
* வேண்டிய அளவில் வெளியே எடுக்க முடியும் ஆகையால் சிக்கனமானது.
NOPAIN
நோபெயின் பாம்
சுகாதார முறையில் அடைக்கப்பட்ட ட்யூபுகளில்
தலைவலி, தசைக் குறிய வலி, மார்ச் சளி இவைகளுக்கு
ஒரு கல்கத்தா கெமிக்கல் தயாரிப்பு
CF-3TMB-55
தென் இந்திய ஆபீஸ்: 5/149. பிராட்வே, சென்னை - 1



கொழும்பு பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தினர் சென்ற அக்டோபர் 22, 23 தேதிகளில் ''யார் வைத்தியர்?'' என்ற நாடகத்தை கிங் ஜார்ஜ் மண்டபத்தில் நடித்தனர். ஏராளமான மக்கள் நாடகத்தைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தனர். நாடகத்தில் கிடைக்கும் வருமானம் பல்கலைக் கழக நூல் நிலையத்துக்குத் தமிழ் நூல்கள் வாங்கச் செலவிடப்படும் என அறிகிறோம்.

புறம் கூடாரத்திலிருந்த கலீலும் சாவதானத்துடன் நடந்து வெளியே வந்தான். எனது பாழும் ஞாபக மறதிக்கு அப்பொழுதுதான் அவன் இருப்பதை அறிவிக்கத் தோன்றிற்று.

''ஸார், இப்பொழுதுதான் என் வயிற்று வலி கொஞ்சம் படிமானமாகியிருக்கிறது ஸார்! கூடாரத்திலிருந்த மண்ணெண்ணெயில் இரண்டு அவுன்ஸ் குடித்தேன் ஸார்!'' இவ்வாறு கலீல் பரபரப்புடன் செய்தி கூறிக் கொண்டு வந்தான். அவனது முகத்தில் ஏதோவொரு கோட்டையைப் பிடித்து விட்டது போன்ற மகிழ்ச்சி பிரதிபலித்தது. எனக்கோ, அவனது செய்திகள் சற்று எரிச்சலாகவே யிருந்தன. ''ஊஹூம்!'' என்றேன், சிரத்தையின்றி.

கலீல் அறையைச் சுற்றி, புதுமையாக கடைபழகுகிறவன் போன்று வட்ட மிட்டான். பின்னர், பரபரப்புடன் என்னிடம் ஓடி வந்து. ''ஸார் இந்தப் பை ஏது ஸார்? இது இங்கே எப்படி வந்தது?'' என்றான்.

நான் திடுக்கிட்டு அவனை நோக்கினேன். அவனது கையில் மிகச் சிறிய நீல நிறத் துணிப்பை யிருந்தது. அது எனக்கும் சற்றே வியப்பை யளித்தது. ''ஏன், அது எங்கே யிருந்தது?'' என்றேன்.

''இது இங்கேயே தான் கீழே கிடந்தது. இது என்னுடைய பைதான் ஸார்!'' என்றான் ஏதோவொரு படபடப்புடன்.

''அது உன் பையானால் இங்கே கிடப்பதும் நியாயம்தானே?'' என்றேன்.

அவன் இடைமறித்தவாறு, ''ஸார், நாலைந்து தினங்களுக்கு முன் — அதாவது நீங்கள் இங்கு வருவதற்கு முதல் நான் இதை கோவாவிற்கல்லவா எடுத்துச் சென்றிருந்தேன்? இது இப்பொழுது இங்கே எப்படி வந்தது?'' என்று கேட்டான்.

அவனது செய்தியின் பொருள் விளங்காது நான் விழித்தேன். ''ஆமாம், நீ என்ன சொல்லுகிறாய் இதைப் பற்றி?'' என்றேன். அவன் கூறிய செய்திகளின் மூலம் என் இதயம் விண்டு விடும் போல் இருந்தது!

இதே ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தவரின் மனைவி, சுமார் இருபது தினங்களுக்கு முன், கோவாவிலிருந்த தாயின் வீட்டில் பிரசவித்திருந்தாளெனவும், அவளையும் குழந்தையையும் பார்ப்பதற்காக, அப் பையில் பழங்களுடன் தான் சென்றிருந்ததாகவும், அப் பையை அங்கேயே வைத்து விட்டு வந்துவிட்டதாகவும் கூறிவிட்டு அப் பையை ஆச்சரியத்துடன் நோக்கினான் கலீல். அவன் கூறி முடிப்பதற்குள்ளாகவே, நான் அவனிடம் அநேகம் குறுக்கு விசாரணைகளை விடுத்துவிட்டேன். எஞ்சியிருந்த செய்திகளும் எனக்குக் கிடைத்தன.

நான் டாக்காணு ஸ்டேஷனுக்கு வருவதற்கு மூன்று தினங்களுக்கு முன்புதான் பழைய ஸ்டேஷன் மாஸ்டர் அரை நாள் ரஜாவுடன் கோவாவிலிருந்த தம் மனைவியைக் காணச் சென்றார் எனவும், துரதிருஷ்டவசமாக வெறியர்களின் தாக்குதல்களுக் குள்ளாகி, சர்க்கார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறா ரெனவும் அறிந்தேன். இச் செய்தியைப் பலஹீனத்துடன் உள்ள தம் மனைவிக்குத் தெரிவிக்க வேண்டாமென அவரே கூறியிருந்ததாகவும் அவன் கூறினான்.

கலீல் கூறிய விவரங்களிலிருந்து நான் வேறு என்ன தெரிந்து கொள்ளவேண்டும்?

ஹூம்! என் கண்ணெதிரே சிசு பாதகம் செய்த அந்தப் பெண்ணா ஸ்டேஷன் மாஸ்டரின் மனைவி? ஆனால், அவள் தன் கணவர் இறந்து விட்டதாகவே அல்லவா கருதி விட்டாள்? அப்படி யிருந்தாலும், இத்தகைய பாதகச் செயல் புரிய எத்தனை துணிவு வேண்டும்?

எனது மௌனமான நிலையினால் கலீல் வெருண்டு விட்டான் போலும்! அவன் உரிமையுடன் என் கரங்களைப் பற்றியவாறு, ''ஸார், நீங்கள் எதையோ கூறாமல் மறைக்கிறீர்கள்! இங்கே என்ன நடந்தது?—'' என்றான் பதற்றமான குரலுடன். அவனது விழிகள் என் முக பாவத்திலிருந்த செய்திகளைத் துருவி ஆராய்ந்தன.

அதன்பின்னர், என் நெஞ்சிலிருந்த செய்திகள் எவ்வளவு நேரம்தான் தேங்கியிருக்க முடியும்? அவன் இவ்விடத்தை

விட்டுக் கிளம்பிச் சென்றது முதல் அந்த நிமிஷம் வரையில் நடந்தவற்றை அவனிடம் விவரமாகக் கூறி, அவள் அக் குழந்தையை ஈவிரக்கமின்றி வெள்ளத்தில் எறிந்ததையும் வெறுப்புடன் கூறினேன்.

அவன் விஷம் தீண்டப் பெற்றவன் போன்று துள்ளினான். "ஸார், அவளா அதை ஆற்றில் எறிந்தாள்? நீங்கள் பார்த்தீர்களா? தான் பெற்ற குழந்தையை, அதன் தாயேவா எறிந்தாள்!—" என்றான்.

நான் அவனை நோக்கி உறுதியும், வெறுப்பும் மிகைப்பட "ஆமாம், ஆமாம்!" என்றேன். அடுத்த கணம் அவனது விழிகள் கலங்கின. பாவம், பழகின தோஷம்—அவனது முதுமையுள்ளத்தில் பாசத்தை வளர்த்திருந்தது போலும்! அவன் மீண்டும் கூறிய ஒரு செய்தி என் சிந்தனையைப் பொடியாக்கி விட்டது.

அக் கோஷாப் பெண் தனது கணவர் இறந்து விட்டதாகவே ஏமாற்றமடைந்து, தான், வீட்டை விட்டு வெளியேறி ஆபத்திலும் சிக்கிக் கொண்டு விட்டாள்! ஆனால்—அவர் ஆஸ்பத்திரியிலிருந்த செய்தியைக் கனீல் ஒருவனே யறிவான்.

நான் கனீலை நோக்கி, "உனக்குத்தான் கோவாவில் அப் பெண்ணின் வீடு தெரியுமே—நீ அவளை எங்கேயாகிலும் விசாரித்துக் காப்பாற்ற இயலுமா?" என்றேன்.

அவன், "நானும் அதைத்தான் ஸார் யோசிக்கிறேன். எனக்கு இப்பொழுதே அனுமதி கொடுத்தீர்களானால், முரடர்களைச் சந்தித்து, எப்படியும் அவளைக் காப்பாற்ற என்னால் முடியும்!" என்றான்.

நான் வியப்படைந்தவாறு, "உன்னால் எப்படி முடியும்?" என்று கேட்டேன்.

அவன் மிக அலட்சியத்துடன், "நானும் ஒரு போர்த்துகீசியப் பிரஜைதானே ஸார்?" என்றான். அவன் இதைக் கூறி முடித்தவுடனேயே, திடீரெனத் தன் கைகளால் வயிற்றை அமுக்கிக் கொண்டு, வேதனையுடன் முனகினான். பாழும் வயிற்று வலி மீண்டும் அவனைத் தேடி வந்துவிட்டது! அவனது விழிகள் அறையின் நாலா புறங்களையும் ஏறிட்டுவிட்டு என்னை நோக்கின. அவன் பேச முடியாது, சைகையின் மூலம், அவனது தலையணையைக் கேட்டான். அப்பொழுதுதான் எனக்கும், அத்தலையணையை மூலைப் புறத்துக்குத் தள்ளிப் போட்டதன் ஞாபகம் வந்தது. நான் அதை அறை முழுவதிலும் தேடி விட்டேன். அதைக் காணவில்லை!

கனீல் சலிப்படைந்தவாறு கீழே படுத்தான். பாவம், துணியைச் சுருட்டி வயிற்றின் கீழே அவன் வைத்துக் கொண்டிருந்த காட்சி எனக்குப் பரிதாபமாக இருந்தது.

மௌனத்தின் ஆட்சியிலேயே பதினைந்து நிமிஷங்கள் கழிந்தன. நான் பெருமூச் செறிந்தவாறு நிமிர்ந்து உட்கார்ந்தேன். அந்த நிமிஷம்தான்—என் சிந்தனைகளையும், கனீலின் அலங்கோலமான படுக்கையையும் திடீரென்று உலுப்பிய சம்பவம் நிகழ்ந்தது!

நான் என் கண்களையும், செவிகளையும் நம்பவே முடியவில்லை. ஆயிரம் மைல் வேகத்தில் என் அறிவுக்கு ஒரு வேலையும் கிடைத்தது! கனீலோ, ஆவேசம் கொண்டவன் போன்று துள்ளியெழுந்துவிட்டான். அவனது கடும் வயிற்று நோய் அக்கணம் எங்குதான் சென்று விட்டதோ? ஏனெனில், என்னால் சுவரோரமாகத் தள்ளப் பெற்ற தலையணை காணாமற் போயிருந்ததின் இரகசியம் அப்பொழுது தான் அம்பலமாயிற்று! ஆமாம், அதைத் தான் அவள், குழந்தை போல் ஏந்திச் சென்று காட்டாற்றின் வெள்ளத்தில் எறிந்து விட்டாளே! இதன் மூலம் நானும் அந்தக் கோவா முரடர்களும் மட்டுமின்றி, எத்தனை முதலைகளும் தான் ஏமாற்றமடைந்தனவோ!

ஸ்டேஷன் அறைக்குள்ளிருந்த இரகசியமான 'பெட்ரோல் அறை'யில் அல்லவா அவன் தங்கியிருந்தான்? இப்பொழுது அவ்வறையிலிருந்து, 'குவா, குவா' என்ற குழந்தையின் அழுகுரல் வெளியாகிக் கொண்டிருந்தது!

கனீலும் நானும் பரபரப்புடன் ஓடிக் கம்பிக் கதவுகளைத் தூக்கினோம். பிறந்து இருபதே தினங்களாகியிருந்த அச் சிசு மெத்தை போன்ற துணிகளின் மீது அழகாகக் கிடத்தப்பட்டிருந்தது.

அவள் உண்மையான தாய்தான் என்பதை அந்தக் குழந்தையின் அழுகுரல் மெய்ப்பித்தது!

தவறு செய்தவன்



எஸ்.ஆர்.எம்.

தெற்கு நோக்கிச் செல்லும் புகை வண்டி பெரிய உறுமலாக உறுமிவிட்டுப் பெருமூச்சு விட்டுக் கொண்டு புறப்பட்டது. பிளாட்பாரம் கலகலத்து நின்றது. வண்டித் தொடருடன் கூடவே நடந்து வழியனுப்பிக் கொண்டிருந்த பல ஆத்மாக்களின் நடுவே பரிபூரணானந்தன் தன் அருமை மனைவியையும் செல்வக் குழந்தையையும் ஏற்றிச் செல்லும் பெட்டியை விடாமல் பிடித்துக் கொண்டு நடந்து வந்தான். அவன் கண்களில் ஜலம் ததும்பிற்று. பேச்சு ஒன்றும் வெளிவரவில்லை.

"போய்விட்டு வருகிறேன். கவலைப்படாதீர்கள். வீணுக்கு எல்லாம் மனசைப் போட்டு உழப்பிக் கொள்ளாதீர்கள். அடுத்த மாசம் நவராத்திரிக்கு முன்னால் இரண்டொரு தினமாவது ஓய்வு எடுத்துக் கொண்டு ஊருக்கு வந்து விட்டு வாருங்கள்" என்று கூறினாள், ஓடும் ரயிலிலே உட்கார்ந்து கொண்டிருந்த பரிபூரணானந்தனின் மனைவி சீதாலக்ஷ்மி. வண்டி அவசரத்துடன் கிளம்பிற்று.

பரிபூரணானந்தன் பெருமூச்சு விட்டுக் கொண்டு பிளாட்பாரத்தில் நின்றான். எதிரே பிளாட்பாரம் அவன் கண்களுக்கு வெறிச்சோடிப் போய்க் கிடந்தது, சூன்யமாகி விட்ட அவன் மனசைப் போல.

பரிபூரணானந்தனுக்கு வீட்டுக்குப் போகவே பிடிக்கவில்லை. அங்கே என்ன இருக்கிறது! இப்படியே எங்காவது ஓட்டலிலாவது சினிமாவிலாவது கழித்து விடலாமா என்று எண்ணினான். அவனிடம் அறியாமல் அவன் கால்கள் அவனைச் சினிமாக் கொட்டகைக்கு எதிரே இழுத்து வந்து நிறுத்தின. "தி டிபார்ச்சர்" பிரிவு என்ற ஆங்கிலப் படம் அன்றைய தினம் நடக்க விருப்பதாகப் போட்டிருந்தது. பரிபூரணானந்தன், 'என்ன படம்! யார் நடித்திருக்கிறார்கள்!' என்பதை எல்லாமா கவனிக்கப் போகிறான்! நடைப்பிணம் மாதிரி உள்ளே போய் உட்கார்ந்தான்.

"பிரிவு" அந்த வார்த்தைதான் எத்தனை பயங்கரமானது! இளம் காதலர்களின் பிரிவு எவ்வளவு அசம்பாவிதமான சம்பவங்களைச் சிருஷ்டித்து விட்டிருக்கிறது. சிந்தனை செய்ய முடியாத அளவுக்கு அந்தப் பிரிவு மனமுறிவை ஏற்படுத்தி விடுகிறது. அந்தப் படத்திலே கூட இதைத்தான் எடுத்துக் காட்டினார்கள்.

பரிபூரணானந்தனுக்குத் தலையைச் சுற்றிற்று. அந்தக் கதை அவனுடைய அப்போதைய நிலையையே சித்திரிப்பதாக இருந்தது. படத்தின் பாதியிலேயே எழுந்து வெளியேறி விட்டான் அவன்.

"சீதா இத்தனை நேரம் செங்கல்பட்டு தாண்டி இருப்பாள். நாம்தான் இத்தனை மனசைக் குழப்பிக் கொள்கிறோம், அவள் ஊருக்குப் போகிறோமே என்று கொஞ்சமாவது கவலைப்பட்டாளா! கல் நெஞ்சக்காரி. எல்லாம் இருக்கிற வரையில் தான். பெண்களுக்கே எப்போதும் பிறந்த வீடுதான் உயர்த்தி. கணவன், கணவன் என்று சொல்வதெல்லாம் வெறும் வெளி வேஷம்" என்று எண்ணமிட்டான் பரிபூரணானந்தன்.

வீட்டுக்கு வந்து விளக்கைப் பொருத்தினான். சீதாவும், குழந்தையும் இல்லாத அந்த வீட்டைப் பார்க்கவே அவனுக்கு அருவருப்பாக இருந்தது. விளக்கை அணைத்து விட்டு இழுத்து மூடிக்கொண்டு படுத்தான். ஊம்! கண்ணை மூடவே முடியவில்லை. வராந்தாவில் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு வான வீதியை அண்ணாந்து பார்த்துக் கொண்டே உட்கார்ந்தான். அப்படியே கண்ணயர்ந்து விட்டான்.

பரிபூரணானந்தன் இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்னால் பி. ஏ. பாஸ் செய்தான். எடுத்த எடுப்பிலேயே நூறு ரூபாய் சம்பளத்தில் ஒரு கமிஷன் வியாபாரியிடம் ஏஜண்ட் வேலை கிடைத்தது அவனுக்கு. வேலை கிடைத்த மறு மாசத்தில் அவனுடைய அருமைச் சீதா அவன் வீட்டை வந்தடைந்தாள். மறு வருஷத்தின் ஆரம்பத்தில் சின்னப் பயல் சாமாவும் வந்து குதித்தான்.

பரிபூரணானந்தனுக்கு இப்போது புதுப் புதுப் பிரச்னைகள் எல்லாம் வந்து முளைத்தன. 'சீதாவுக்கு அது வாங்க வேண்டும்! சீதாவுக்கு இது பிடிக்காது. சீதாவுக்கு இந்தச் சாமான் வாங்கிக் கொண்டு போனால் சௌகரியமாக இருக்குமா! சின்னப் பயல் என்ன செய்து கொண்டிருக்கிறானோ! சளி பிடித்திருந்ததே! என்ன மருந்து வாங்கிக் கொடுக்கலாம்!' என்பவை போன்ற பல கேள்விக் குறிகள் அவன் மனத்தைச் சுற்றி வட்டமிட ஆரம்பித்தன.

சீதா இரண்டு தடவை இருமினால் போதும், ஒரு வேலையும் ஓடாது அவனுக்கு. ஒரு வேதனையும் இல்லாமல் இருக்கும்போதே அவன் குழந்தை எப்போதும் எட்டு மணிக்குத் தூங்க ஆரம்பிப்பவன், இன்று மட்டும் ஏன் ஏழரைக்கே தூங்கி விட்டான்! உடம்பில் ஏதாவது கோளாறு இருக்குமோ! ஏதாவது ஒரு கவலையைத் தனக்குத்தானே சிருஷ்டித்துக் கொண்டு கவலைப்படுவான். இம்மாதிரி கவலைப் படும் மனிதனாகவே ஆகி விட்ட பிறகு பரிபூரணானந்தன் தான் பார்த்து வரும் வேலையில் தவறுகள் பல செய்ததில் ஆச்சரியமில்லை.

சீதாலட்சுமி ஊருக்குப் போவதற்கு முன்னால் இப்படித்தான் ஒரு சம்பவம் நடந்தது.

"தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த ஒரு மரச் சாமான்கள் வியாபாரி பரிபூரணானந்தன் வேலை பார்க்கும் கம்பெனியில் சுமார் இரண்டாயிரம் ரூபாய்க்குச் சரக்குகள் வாங்க வேண்டிப் பரிபூரணானந்தனைத் தேடிக் கொண்டு வந்தார்.

பரிபூரணானந்தன் வீட்டுக்கு வந்த அவர் விலை விவரங்களை எல்லாம் கேட்டு விட்டுத் தமக்கு சரக்குகள் உடனடியாகத் தேவை என்றும் இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் ஆகவேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்து தாம் தங்கியுள்ள ஹோட்டலுக்கு 'போன்' செய்தால் சௌகரியம் என்றும் அப்படி செய்யத் தவறினால், தாம் வேறு இடத்தில் பார்த்துக் கொள்வதாகவும் கண்டித்துக் கூறிச் சென்றார்.

பரிபூரணானந்தன் ஆபீசுக்குப் போகக் கிளம்பினான். உள்ளே சீதா முனகினாள். கோட்டைக் கழற்றி வீசி எறிந்து விட்டு உள்ளே ஓடினான். "எனக்கு ஒன்றுமில்லை! நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள்!" என்று சீறி விழுந்தாள் சீதா. பரிபூரணானந்தனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. இது என்ன இவள் எரிந்து எரிந்து விழுகிறாள். தன்னுடைய உதவியும் ஆறுதலும் தேவையில்லை என்று எண்ணுகிறாளா! அப்படி ஏன் அவள் நினைக்க வேண்டும்! இதற்கெல்லாம் என்ன காரணம்!

இவ்வாறு யோசனை செய்துகொண்டே உட்கார்ந்திருந்தான் பரிபூரணானந்தன். அவனுக்கு நேரம் போனதே தெரியவில்லை. அன்று பூராவும் அவன் ஆபீசுக்கே போகவில்லை.

மறுநாள் காலையில் வேண்டா வெறுப்பாக அவன் படுக்கையை விட்டு எழுந்தான். அப்போது அவன் வீட்டு வாசலில் கார் ஒன்று வந்து நின்றது. எதிர்பாராத விதமாக அவனுடைய முதலாளியே பரிபூரணானந்தத்தைத் தேடிக் கொண்டு வந்திருந்தார்.

பரிபூரணானந்தத்துக்குத் தன் முதலாளியின் திடீர் விஜயத்துக்குக் காரணத்தை அறிந்து கொள்ள முடியவில்லை.

"மிஸ்டர் பரிபூரணம்! நேற்றைய தினம் தஞ்சை ஜில்லா பர்மிச்சர் ஆர்டர் ஒன்றை நழுவ விட்டு விட்டீர்களே!" என்று முதலாளி சொன்ன போதுதான் பரிபூரணானந்தத்துக்கு முன் தினம் நடந்தது நினைவுக்கு வந்தது. அடாடா! எவ்வளவு பெரிய முட்டாள்தனம்! அவ்வளவு பெரிய ஆர்டரை நழுவ விட்டு விட்டோமே! என்ன செய்வது! முதலாளியின் அவமதிப்பி லிருந்து தப்ப வேண்டுமே!

"தஞ்சை ஜில்லா ஆர்டரா!" என்று ஒன்றுமே அறியாதவன்போல் கேட்டான் பரிபூரணானந்தன்.

"மிஸ்டர் பரிபூரணம்! அப்படியானால் உங்களிடம் ஆர்டர் எதுவும் நேற்று வரவில்லை என்று சொல்லுங்கள்!" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் முதலாளி.

"இல்லையே!" என்று துணிச்சலுடன் பொய் ஒன்றைச் சொன்னான் பரிபூரணானந்தன்.

"ஓகோ! நான் கேள்விப்பட்டது தவறு போலிருக்கிறது! சரி! நான் போய் விட்டு வருகிறேன்!" என்று கூறிவிட்டு அவர் போய் விட்டார்.

உள்ளே நுழைந்த போன பரிபூரணானந்தன் சீதாலக்ஷ்மியின் கோபத்தைக் கக்கும் முகத்தைப் பார்த்தான். என்னவோ அவள் முகத்தைப் பார்க்கவே அவனுக்கு நாணமாக இருந்தது.

இருவரும் ஒருவரோடு ஒருவர் இரண்டொரு தினங்கள் பேசிக் கொள்ளவில்லை. நடுவில் அவர்களது குழந்தை அகப்பட்டுக் கொண்டு திணறிற்று.

மூன்றாவது நாள் சீதாலக்ஷ்மியின் தகப்பனார் பெண்ணை அழைத்துக் கொண்டு போக வேண்டுமென்று சொல்லிக் கொண்டு வந்தார். பரிபூரணம் மறுத்துப் பேசவில்லை.

ஏதோ மகத்தான பெரிய தவறுதலைச் செய்து விட்ட குற்றவாளியைப்போல் அவன் சீதாவுக்கு முன்னால் தலை குனிந்து நின்றான். கல்யாணமான தினத்திலிருந்து தன் மனைவியைப் பிரிந்து அதிகமாக அவன் வாழ்ந்ததில்லை. அவளிடத்திலே அவன் வைத்திருந்த அன்பு எத்தகையது என்று நாம் சொல்வதற்கில்லை. அந்தப் பாசத்துக்கு ஈடு இணை என்று எதையுமே சொல்வதற்கில்லை. அவளைத் தன் தெய்வமாக அவன் மதித்த காரணத்தால்தான் அவன் இவ்வாறு அவளுக்கு முன்னால் தன் தவறுக்காக வருந்தி வெட்கப்பட வேண்டியிருந்தது.

சீதாலட்சுமி ஊருக்குப் போய் விட்டாள். ஆனாலும் பரிபூரணானந்தனின் மனதில் இருந்த பெரும் சுமை இறங்கவில்லை. அவளுக்கு முன்னால் கேவலமாக ஒரு பொய்யைச் சொல்லித் தன் எஜமானிடம் தப்பித்துக் கொண்ட சம்பவம் அவன் மனத்தை உறுத்திக்கொண்டே இருந்தது. தன்னை எவ்வளவு கேவலமாக அவள் மதித்திருப்பாள்! ஒரு பொய்யன், அயோக்கியன், என்ற முடிவுக்கு வந்திருப்பாள். ஆனால் தன் கடமையில் அவன் தவறியதற்குக் காரணம் யார்! அவள்தானே! அவளுக்கு உடம்பு



சரியில்லையே என்ற கவலையில்தானே அவன் தஞ்சை ஜில்லாக்காரர் ஆர்டரை ஆபீசில் தெரிவிக்க மறந்து விட்டான். அந்த மறதிக் கெல்லாம் குடும்பத்தின் மீது அவன் கொண்ட பற்றுதல்தானே காரணம்! குடும்பத்தின்மீது பற்றுதல் இருக்க வேண்டியதுதான். மனைவி யிடம் பிரியமாக இருக்கத்தான் வேண்டும். ஆனால் அதற்காக எஜமானனுக்குத் துரோகம் செய்யலாமா! கூடவே கூடாது! காலைக்கு இந்த உண்மை வெளியே வந்து வேலையை விட்டுப்போ என்று கூறிவிட்டால் குடும்பத்தின் கதி என்ன ஆகும்! அப்போது உலகம் அதைப் பெரிதாக எண்ணி அவனைப் பாராட்டுமா! எள்ளி நகையாடும். கைகொட்டிச் சிரிக்கும். கேலி செய்யும். பரிபூரணானந்தன் ஒரு கோழை என்று வாய்க்கு வாய் சொல்வார்கள்.

வெளி வராந்தாவில் நாற்காலியில் உட்கார்ந்தபடியே தூங்கிக் கொண்டிருந்த பரிபூரணானந்தன் தூக்கி வாரிப் போட்டு எழுந்தான். மணி எங்கேயோ இரண்டு அடித்தது. அவனுடைய மனம் ஒரு நிலையில் இல்லை. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டி வெள்ளமாகி இருந்தது. உலகம் அவனுடைய அற்பத்தனமான நடத்தையைப் பார்த்து இன்னமும் சிரித்துக் கொண்டிருந்தது. நாற்காலி சிரித்தது. மேஜை சிரித்தது. வானம் சிரித்தது. பூமி சிரித்தது. அதோ! அதோ! அவன் மனைவி சீதாலட்சுமியும் சிரித்தாள். அந்தப் புகைப் படம்தான் சிரித்த சிரிப்பிலே ஆடித் தடாரென்று கீழே விழுந்து சுக்கல் சுக்கலாகச் சிதறிற்று. பதறி விட்டான் பரிபூரணானந்தன். நிறை மாசத்துக் கர்ப்பிணி ஊருக்குப் பிரசவத்துக்குப் போயிருக்கிறாள். தன் ஈனச் செயலை எண்ணி எப்படி எப்படியோ மனம் புழுங்குவானே! இந்த நிலையில் அபசகுனம்போல் அவளுடைய படம் உடைந்திருக்கிறதே!

அவனது உடம்பெல்லாம் ஆடிற்று. இனந் தெரியாத பயம் ஒன்று அவனைப் பிடித்துக் கொண்டது. பெற்றுப் பிழைத்து அவள் வீட்டுக்கு நல்லபடியாக வந்து சேர வேண்டுமே!..... அப்படி ஏதாவது அசம்பாவிதமாக நிகழ்ந்து விட்டால்......! ஆண்டவனே! அப்படி ஒன்றும் நிகழ விட்டு விடாதே! தான் செய்த ஈனச் செயலால் சீதாவின் பொன்னான உள்ளம் உடைந்து சிதறி விட்டிருக்கும். அது அவளுடைய உடலையும் மனத்தையும் அணு அணுவாக அரித்திருக்கும்!

பரிபூரணானந்தனால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. எழுந்து அந்த இருட்டில் கடற்கரையை நோக்கி ஓடினான்.

நிசப்தமான அந்த நேரத்தில் "ஹோ" என்ற பேரிரைச்சலுடன் அலைகள் தாவிக் குதித்துக் கொண்டிருந்தன.

"பொய் சொல்லிக் குடும்பத்தைக் காப்பாற்றிவிட்ட கயவனே! உண்மையை மறைத்து உயிர் வாழ எண்ணும் கோழையே! போ! உண்மையைச் சொல்லு! உன் எஜமானன் வீட்டுக்கு ஓடு! நீ பொய் சொல்லி விட்டதைச் சொல்லு! தண்டனையை அனுபவி! மனித இனத்திலே நீயும் ஒருவன்தான் என்பதை நிரூபி! போ! போ!" என்று கடலைபுறமும் பெருங் கூச்சலாகக் கேட்பதுபோல இருந்தது. பரிபூரணானந்தன் எழுந்து நின்றான். சற்று முன்பு ஓய்ந்து கிடந்த அவன் அங்கங்களுக்குள்ளே ஒரு புதுத் தென்பு எங்கிருந்தோ வந்து புகுந்து கொண்டது. கால்கள் நடக்கத் துடித்தன. உடம்பெல்லாம் பறந்தது.

அடுத்த கணம் அவன் அடையாறை நோக்கி விரைவாக நடந்து கொண்டிருந்தான்.

விடியக் கருக்கல் நேரத்தில் தன்னை வந்து எழுப்பிய பரிபூரணானந்தத்தை ஏற இறங்கப் பார்த்தார் அவனுடைய முதலாளி.

பரிபூரணானந்தன் பட பட வென்று பேசினான். தன்னை மறந்து பொரிந்து தள்ளினான். "சார்! நான் அயோக்கியன், பொய்யன்! அன்று தஞ்சை ஜில்லா வியாபாரி இரண்டாயிரம் ரூபாய்க்கு ஆர்டர் கொண்டு வந்தார். நான்தான் அதை வீட்டுக் கவலையின் காரணமாகக் கவனிக்க மறந்து நழுவ விட்டேன்! குற்றத்தை மறைத்து உங்களிடம் பொய் சொன்னேன்! நான் வேலையை விட்டு நின்று கொள்கிறேன். உங்கள் அன்புக்கும் ஆதரவுக்கும் நான் அருகதை யற்றவன். யோக்கியதை அற்றவன்.........நான் போகிறேன்....!"

இதைச் சொல்லி முடித்ததும் பரிபூரணானந்தன் அங்கிருந்து கிளம்பினான்.

"நில்லுங்கள், மிஸ்டர் பரிபூரணம்! தாங்கள் செய்த குற்றத்தைவிட நான் பெரிய குற்றத்தைச் செய்து வந்திருக்கிறேன். அதற்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுக்கலாம்."

பரிபூரணம் பிரமித்துப் போய் நின்றான். முதலாளி பேசினார்: "மிஸ்டர் பரிபூரணம்! உங்கள் அநுபவத்துக்கும் யோக்கியதைக்கும் ஆரம்பத்திலேயே பிரதம ஏஜண்டாக நியமித்திருந்தால் உங்களிடம் இந்த அசிரத்தை ஏற்பட்டிருக்குமா! நூறு ரூபாய் சம்பளத்தில் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொண்டு வியாபாரத்தையும் கவனிக்கச் சாத்தியப்படுமா? மிஸ்டர் பரிபூரணம்! என்னை மன்னியுங்கள்! இன்று முதல் உங்கள் சப் ஏஜண்ட் வேலை ரத்தாகிறது. இனி தாங்கள் நமது கம்பெனியின் பிரதம ஏஜண்ட்!"

பரிபூரணம் தலை நிமிர்ந்தான். ததும்பிய அவன் கண்ணீர் "பொல பொல" வென்று உதிர்ந்து ஓடிற்று.


எதிரே ஏசு கிறிஸ்துவின் கருணை ததும்பிய படம் ஒன்று நின்றது.

நிறைவுடன் கூடிய மனத்துடன் வீட்டுக்குள் நுழைந்த பரிபூரணானந்தன் தனக்கு முன்னாலேயே தந்திச் சேவகன் காத்திருப்பதைக் கண்டான்.

தந்தி சொல்லிற்று: "சீதா சௌகரியமாகப் பிரசவித்து, ஆண் மகவை ஈன்றாள். தாயும் சேயும் சௌக்கியம்!"

கீழே ஒரு சின்னப் பயல் பாடம் படித்துக் கொண்டிருந்தான்.

"தவறு செய்தவன் தன் தவறுக்காக வருந்தும் போது, ஆண்டவன் அவனிடம் அன்பு காட்டி அரவணைக்கும் தாயாகவும் தந்தையாகவும் நடந்து கொள்கிறார்!"


இந்த
அடையாளத்தைக்
கவனியுங்கள்



அழ. வள்ளியப்பா

19. குண்டுமணி

ஆனந்தனுடைய அப்பா அல்லது அம்மா அருகிலே இருக்கும்போது, "ஆனந்தா, எட்டும் நான்கும் எத்தனை ?" என்று உரத்த குரலில் கேட்பார் வாத்தியார்.

உடனே ஆனந்தன், "எட்டுக்கு அப்புறம்...ஒன்பது..."என்று இழுப்பான்.

" ம் " என்பார் வாத்தியார்.

" பத்து !"

" ம் !"

" பதினொன்று !"

" ம் !"

" பன்னிரண்டு !"

' ம், ம், ம் !"

சேர்ந்தாற்போல் வாத்தியார் மூன்று தடவை 'ம்' போட்டதும், ஆனந்தன் நிறுத்தி விடுவான்! மேலே போக மாட்டான். உடனே, " அடடே! நம் பிள்ளை சரியாகச் சொல்லுகிறானே !" என்று நினைத்து, அவன் அப்பா அம்மா ஆனந்தப் படுவார்கள். ஆனால், வாத்தியார் 'பன்னிரண்டு' என்றதும் 'ம்,ம்,ம்' என்று சொல்லாமல், 'ம்' என்று ஒரே ஒரு தடவை மட்டும் சொல்லியிருந்தால் ஆபத்துத்தான்! அவன் நிறுத்தியிருக்கவே மாட்டான். 13, 14, 15 என்று சொல்லிக் கொண்டே போயிருப்பான். எங்கு போய் நிறுத்துவானோ, தெரியாது!


இவ்வாறு மண்டுவாக இருந்தும், அவன் ஐந்து வகுப்புவரை ஒரு வகுப்பில்கூடத் தோல்வியடைந்ததில்லை. இதற்குக் காரணம் வேறொன்றுமில்லை. அவன் படித்து வந்த ஆரம்பப் பள்ளியின் தலைமை ஆசிரியரே அவனுக்கு ஐந்து வருஷமும் வீட்டுப் பாடம் சொல்லிக் கொடுக்கும் போது, பையன் தோல்வி அடையலாமா? தோல்வியடைந்தால், தலைமை ஆசிரியருக்கு அல்லவா கேவலம்?

ஆனால், ஆறுவதுக்குச் சென்றதும், ஆனந்தனின் சாயம் வெளுத்து விட்டது! அஸ்திவாரம் பலமில்லாத போனால் கட்டடம் நிலைத்து நிற்குமா? வகுப்பிலே கடைசி அவன்தான். ஆறுவதில் இரண்டு வருஷங்கள் இருந்தான். அதற்கு மேலும் பல வருஷங்கள் அவன் அதே வகுப்பில் இருந்திருப்பான். ஆனாலும், அந்தப் பள்ளியிலே ஒரு வழக்கம் உண்டு. இரண்டு வருஷங்களுக்கு மேல் ஒரு பையனை ஒரு வகுப்பில் நிறுத்துவதில்லை என்பதுதான் அந்த வழக்கம். அதனால்தான், மூன்று வது வருஷமும் ஆனந்தன் அதே வகுப்பில் இருக்கவில்லை. ஏழாவதுக்குத் 'தூக்கி'ப் போடப் பட்டான். ஏழாவதில் ஆண்டுப் பரீட்சை நடந்தது. முடிவு வெளிவந்தது. ஆறுவதிலிருந்து ஏழாவதுக்குப் புதிதாக வருகிறவர்களை வரவேற்க வேண்டுமே, அதற்காக ஆனந்தனை ஏழாவது வகுப்பிலேயே நிறுத்தி வைத்து விட்டார், அந்த உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்! ஆனாலும், தான் தேறி விட்டதாகப் பொய் சொல்லி அப்பாவிடம் கடிகாரப் பரிசு வாங்கி விட்டான், ஆனந்தன். அன்று விருந்துக்கு அப்பா ஏற்பாடு செய்வதாகக் கூறியதைக் கேட்டதும், பயந்து சென்னைக்கு ரயிலேறி விட்டான். சென்னையில் பேனாவை விற்கப் போய், போலீஸில் அகப்பட்டுக் கொண்டதும், மாமா மதுரநாயகம் அவனை விடுவித்ததும் தெரிந்த கதை.

மதுர நாயகத்தின் கடிதத்தைப் பார்த்ததிலிருந்து, ரமணியை எப்படியாவது தேடிக் கண்டு பிடித்துவிட வேண்டும் என்று ஆனந்தன் ஆசைப்பட்டான். அன்றே மதுரநாயகத்துக்குப் பதில் கடிதமும் போட்டு விட்டான். "நீங்கள் கொஞ்சங்கூடக் கவலைப்பட வேண்டாம். எனக்குப் பள்ளிக்கூடம் திறக்க இன்னும் சரியாக ஒரு வாரம் இருக்கிறது. அதற்குள் ரமணி எங்கிருந்தாலும் தேடிக் கண்டு பிடித்து அவனை உங்களிடம் அனுப்பி வைப்பேன்" என்று உறுதியாக எழுதினான்.

அந்தக் கடிதத்தை உடனேயே தபால் பெட்டியில் சேர்த்து விட்டு வீட்டுக்கு வந்தான். கையிலே ஓர் அரிவாளை எடுத்துக் கொண்டான். நேராகத் தோட்டத்திலுள்ள வேப்ப மரத்தின் அருகே சென்றான். 'விறு விறு' என்று அதன்மேல் ஏறினான். வளையாமல்

இருந்த ஒரு நீண்ட கிளையை அரிவாளால் வெட்டிச் சாய்த்தான். பிறகு, கீழே இறங்கி வந்து அதை எடுத்து நன்றாகச் செதுக்கினான். அது ஒரு தடி போல் ஆகி விட்டது. உடனே, அவன் தன் அறைக்குள்ளே சென்றான். அங்கேயிருந்த அரை அடி 'ஸ்கேல்' ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தான். ஸ்கேலால் ஒன்பது தடவைகள் அந்தத் தடியை அளந்தான். $9 \times \frac{1}{2} = 4\frac{1}{2}$ அடி ஆகி விட்டதல்லவா? நாலரை அடியோடு அந்தத் தடியை வெட்டினான். வெட்டி முடியும் சமயம் அவன் அம்மா அங்கே வந்து சேர்ந்தாள்.



"என்னடா செய்கிறாய் ஆனந்தா?" என்று கேட்டாள்.

"அளவுகோல் செய்கிறேன் அம்மா. அந்த ரமணி நாலரை அடி உயரம் இருப்பதாக மாமா எழுதியிருக்கிறாரே, ஞாபகம் இல்லையா? அவனைத் தேடிக் கண்டு பிடிக்க அளவுகோல் வேண்டாமா?" என்று கேட்டான் ஆனந்தன்.

அம்மாவுக்கு இதைக் கேட்டதும் சிரிப்புத்தான் வந்தது. ஆனாலும், அவள் சிரிக்க வில்லை. "மாமா எழுதியது உண்மைதான். ஆனாலும், 'நமது ஆனந்தனும், ரமணியும் ஒரே உயரம் தான் இருப்பார்கள்' என்று கூட அந்தக் கடிதத்தில் இருந்ததே, அதை நீ படிக்க வில்லையா? அவன் உன் உயரம்தான் இருப்பான் என்றால், இந்த அளவுகோலெல்லாம் எதற்கு?" என்று கேட்டாள் அம்மா.

"அடடே! ஆமாம், அம்மா! அவனுடைய உயரம், நிறம், வயது எல்லாமே என்னைப் போலத்தானாம்! அதனாலே தான் பட்டணத்துப் போலீஸ்காரர்கள் அவனுக்குப் பதிலாக என்னைப் பிடித்து ஜெயிலுக்குள்ளே தள்ளி விட்டார்கள்! சரி, அப்படியானால், இந்த அளவுகோல் வேண்டாம். எவன் மேலே யாவது சந்தேகம் வந்தால், உடனே நான் என்ன தெரியுமா செய்வேன்? அவன் பக்கத்திலே போய் நின்று பார்ப்பேன். என் உயரமும், அவன் உயரமும் சரியாக இருந்தால், அவன் ரமணிதானா என்று விசாரிப்பேன். ரமணியாகவே இருந்தால், உடனேயே மாமாவுக்குத் தந்தி அடித்து விட மாட்டேனா!" என்று குதூகலமாகக் கூறினான் ஆனந்தன்.

"என்னவோ, நாம் கண்டு பிடித்தால் நமக்கும் நல்லது; மாமாவுக்கும் நல்லது" என்றாள் அம்மா.

"கண்டு பிடிக்காமல் விடுவேனா?" என்று வீறாப்புப் பேசினான் ஆனந்தன்.

சினிமாவில் துப்பறியும் 'சிங்கம்'களையும், 'புலி'களையும் பார்த்துப் பார்த்து ஆனந்தனுக்கும், அவர்களைப் போல் துப்பறியும் ஒரு சிங்கமாகவோ அல்லது புலியாகவோ மாற வேண்டும் என்ற ஆசை வெகு நாட்களாகவே உண்டு. அதற்கு இப்போது ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதே அவன் விடுவானா?

அன்றைக்குச் சாயங்காலமே அவன் ஒரு 'பைனாகுலர்' வாங்கி விட்டான். வெகு தூரத்தில் ரமணி போனால் கண்டு பிடிக்க வேண்டாமா? அதற்குத்தான் அந்தப் 'பைனாகுலர்'! மறுநாள் காலையில் பலகாரம் சாப்பிட்டதும், புஷ்கோட், முழுக்கால் சட்டை, பூட்ஸ், தலையில் மடக்குத் தொப்பி முதலியவற்றை அணிந்து கொண்டான். கழுத்திலே பைனாகுலரைத் தொங்க விட்டுக் கொண்டான். சட்டைப் பையில் ரமணியின் அடையாளங்கள் அடங்கிய சிறிய நோட்டுப் புத்தகத்தை வைத்துக் கொண்டான். உடனே அவன் வெளியே கிளம்பி விட்டான்.

வீட்டை விட்டுச் சிறிது தூரம் வந்ததும், அவனுக்குச் 'சட்'டென்று ஒரு யோசனை தோன்றியது. உடனே வேகமாகப் பெரிய கடை வீதியை நோக்கிச் சென்றான். சிறிது தூரம் சென்றதும் ஒரு குறுகிய தெருவிலே திரும்பினான். அந்தத் தெருவிலிருந்து அங்கிருந்த ஒரு சந்திலே புகுந்தான். அந்தச் சந்திலிருந்து மற்றொரு சந்து. இப்படி

நிராலா

சோப்



வெளுப்பதை
எளிதாக்குகிறது



வியர்க்க விறுவிறுக்க அடித்து, கசக்கி, தேய்த்து அவஸ்தைப்பட வேண்டாம். நிராலா சோப்பை உபயோகித்தால்; அதன் நிறைந்த நுரை துரிதமாக துணிகளுக்குக் கெடுதலில்லாமல் அழுக்கையும், கறைகளையும்போக்கும்.

அடைப்புகள்
அற்றது

ங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
கர்நூல்

பிரதிநிதிகள் இல்லாத இடங்களுக்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள் தேவை

மூன்று சந்துகளைக் கடந்து நான்காவது சந்துக்கு வந்தான். திருச்சியில் இப்படிப்பட்ட சந்து பொந்துகளுக்குத்தான் பஞ்சமே இல்லையே! நான்காவது சந்தில் வந்ததும் அங்கிருந்த மாடியில்லாத ஓர் ஓட்டு வீட்டின் முன்னால் ஆனந்தன் நின்றான். அது சாத்தப்பட்டிருந்தது.

உடனே, பக்கத்திலிருந்த திண்ணையில் ஏறினான். திறந்து கிடந்த ஜன்னல் வழியாகப் பார்த்தான். "நாம் நினைத்தது சரியாகத்தான் இருக்கிறது. இன்னும் தூங்கிக்கொண்டிருக்கிறான், தூங்குமூஞ்சி!" என்று முணுமுணுத்துக் கொண்டே கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த பைனாகுலரை எடுத்துக் கண்களில் வைத்துப் பார்த்தான். உடனே அவனுக்குப் பலமாகச் சிரிப்பு வந்து விட்டது!

ஆனந்தன் நின்று கொண்டிருந்த ஜன்னலுக்கு நேரே ஒரு கூடம் இருந்தது. கூடத்துக்கும் அப்பால் ஓர் அறை இருந்தது. அந்த அறையின் மத்தியில் மல்லாந்தபடி மலை போல ஓர் உருவம் படுத்திருந்தது. அந்த உருவம் கண்ணைத் திறந்து ஆனந்தனைப் பார்க்கவும் இல்லை; வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசவும் இல்லை. வாய்தான் பேசவில்லையே தவிர, மூக்கு பேசிக் கொண்டுதான் இருந்தது! ஆனால், அது மெதுவாகப் பேசவில்லை; 'டர்ர்...டொர்ர்...' என்று பலமாகச் சத்தம் போட்டுப் பேசிக் கொண்டிருந்தது!


அந்த உருவத்தைப் பைனாகுலரில் பார்த்ததும்தான் ஆனந்தனுக்குச் சிரிப்பு வந்து விட்டது. சிரித்துக் கொண்டே, "டேய், குண்டுமணி! குண்டுமணி!!" என்று கூவினான்.

ஆம், அந்த உருவம் வேறு யாருடையதும் அல்ல; ஆனந்தனின் அருமை நண்பன் குண்டுமணியுடையதேதான்!

'மணி' என்பது அவனுடைய இயற்பெயர். அதாவது, அப்பா, அம்மா வைத்த பெயர். 'குண்டு' என்பது பள்ளிக்கூடப் பிள்ளைகள் அன்போடு கொடுத்த காரணப் பெயர்! நாலைந்து வருஷங்களுக்குமுன்பு புடலங்காய்போல் இருந்த மணி தான் இப்போது பறங்கிக்காய் போலப் பருத்து விட்டான். எல்லாம் அந்த டைபாயிட் காய்ச்சல் செய்த வேலைதான். அது வந்த பிறகு தான் அவன் காற்றடித்த பலூன் போல் நாளுக்கு நாள் உப்பிக்கொண்டே வந்தான். இப்போதும் அப்படித்தான். போன வாரம் இருந்ததைப் போல் இந்த வாரம் இருக்க மாட்டான். இந்த வாரம் இருப்பதைப் போல் அடுத்த வாரம் இருக்கமாட்டான். அடுத்த வாரம் இருப்பதைப் போல் அதற்கு அடுத்த வாரம் இருக்க மாட்டான். ஒவ்வொரு வாரமும் அவனுடைய சுற்றளவு அதிகமாகிக் கொண்டே யிருக்கும். இதனால், தையல்காரர்களுக்கும் குண்டுமணிக்கும் அடிக்கடி தகராறு வந்து விடும்!

விளையாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி, சித்திரப் போட்டி — இப்படிப் பள்ளிக்கூடங்களில் என்ன என்னவோ போட்டிகள் வைக்கிறார்களே, சாப்பாட்டுப் போட்டி என்று ஒரு போட்டி வைக்கக் கூடாதா? அப்படி ஒரு போட்டி வைப்பதாயிருந்தால், அதில் முதல் பரிசு யாருக்குத் தெரியுமா கிடைக்கும்? குண்டுமணிக்குத்தான்!

குண்டுமணியைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் ஒரு சர்க்கஸ் குண்டோதரனின் கதைதான் ஞாபகத்துக்கு வருகிறது. (தொடரும்)





32. இதயக் கடல்

சோமு

ஆஸ்பத்திரியை நோக்கிக் காரை வேகமாக ஓட்டிக் கொண்டு சென்ற சாவித்திரி அம்மாள் திடீரென்று அந்தக் காரை வேறு பக்கம் திருப்பியதைக் கண்டு திகைத்தாள், காரில் உடனிருந்த பெண்மணி.

"ஆஸ்பத்திரிக்கு இந்தப் பெண்ணைக் கூட்டிக் கொண்டு போனால், அங்கே பலருடைய முன்னிலையில் இந்தப் பெண் அநேக கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டி நேரிடலாம். நீண்ட நாள் நோயில் அழுந்தியவளாக இருந்தால், கேள்விகள் நோயைப் பற்றியே இருக்கும். ஆனால் இவள் சமாசாரமோ அப்படியில்லை. ஆடிக் கொண்டிருந்தபோதே, திடீரென்று மயங்கி விழுந்து விட்டாள். இது மனத்தைப் பற்றிய ஒரு காரியம் என்று எனக்குத் தோன்றுகிறது. அந்தப் பாட்டு இருக்கிறதே, அதில்......"

இந்த இடத்தில் சந்திரிகா நன்றாகக் கண்களைத் திறந்து பார்த்தாள். "அம்மா! நாம் இப்பொழுது எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?" என்று கேட்டாள்.

"நம்முடைய வீட்டுக்குத்தான் அம்மா!" என்றாள் சாவித்திரி.

"ஆஸ்பத்திரிக்கு இல்லையே?" என்று மறுபடியும் கேட்டாள்.

"அது புரிந்துதானே வீட்டை நோக்கிக் காரைத் திருப்பினேன்" என்றாள் சாவித்திரி அம்மாள்.

வீட்டுக்கு வந்து சேர்ந்ததும், சாவித்திரி அம்மாள் தனக்குத் தெரிந்த ஒரு டாக்டருக்கு 'போன்' பேசப் போவதாகக் கூறினாள். சந்திரிகா சொன்னாள்: "அவசியம் இல்லை அம்மா. எனக்கு மயக்கம் தெளிந்து விட்டது. மறுபடி ஏதாவது ஒரு மாதிரியாக இருந்தால் சொல்லுகிறேன். அப்பொழுது டாக்டருக்குத் தகவல் கொடுத்தால் போதும். இப்போது வேண்டாம்!"

இப்படிச் சொன்ன போது அவளுடைய முகக் குறிப்பைப் பார்த்தால் "டாக்டர் வருகிறார்" என்றால் மறுபடி மயக்கம் போட்டு விழுந்து விடுவாள் போல இருந்தது!

அன்றிரவு எவ்வித சம்பவமும் இல்லாமல் கழிந்தது. மறு நாள் மாலை சாவித்திரி அம்மாள் சந்திரிகாவைக் கூப்பிட்டு, "சந்திரிகா, இப்படிக் கொஞ்சம் காற்றாட வெளியே போய் விட்டு வரலாம், வருகிறாயா?" என்றாள்.

"கூட்டம் அதிகமாக இல்லாத இடமாக இருந்தால் பரவாயில்லை அம்மா!"

"சரி. இங்கே ஒரு சிறு பார்க் இருக்கிறது. நாம் ஒரு மூலையில் ஸிமெண்ட் பெஞ்சிலே போய் உட்கார்ந்து காற்று வாங்கிக் கொண்டேயிருக்கலாம். யாரும் தொந்தரவு செய்ய மாட்டார்கள்!" என்றாள் சாவித்திரி.

சந்திரிகாவும் சாவித்திரியும் காரிலே புறப்பட்டார்கள்.

காரில் சென்று கொண்டிருக்கும் போதே சாவித்திரி அம்மாள் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தாள்.

"தம்பி என்னிடம் உன்னைப் பற்றிப் பேசியிருக்கிறான் அம்மா. அதனால்தான் உங்கள் வீட்டில் திருடன் வந்த செய்தி எனக்குத் தெரியும்!" என்றாள் சாவித்திரி.

"அதெப்படி? உங்கள் தம்பி எப்பொழுது பம்பாய்க்கு வந்தார், இதைச் சொல்ல?" என்று ஆச்சரியத்தோடு சந்திரிகா கேட்டாள்.


"அவன் இங்கே வரவில்லை. நான்தான் அங்கே வந்திருந்தேன். உங்கள் வீட்டில் திருடன் குதித்த அன்றைக்கு, நான் திருச்சியில் இருந்தேன். பொன்மலையில் ஒரு கல்யாணத்துக்காக வந்திருந்தேன்!"

"அப்படியா? என்னைப் பற்றிப் பேச என்ன சந்தர்ப்பம் வந்தது?"

"அன்று இரவு திடீரென்று எங்கள் வீட்டிலிருந்து தம்பி காணாமற் போய் விட்டான் அல்லவா? அவன் வீடு திரும்புவதற்கு வெகு நேரம் ஆயிற்று அல்லவா? நாங்கள் எல்லாம் பயந்து விட்டோம். சாதாரணமாக அவன் இரவில் எங்குமே வெளியே போக மாட்டான். சிறுபிள்ளையில் அவன் என்ன செய்வான் தெரியுமோ? எங்கள் வீட்டிலேயே இருட்டுக்குள்ளே ஸ்டோர் ரூமுக்குப் போய் ஏதாவது சாமான் எடுத்து வரக் கூடப் பயப்படுவான். யாராவது ஒருத்தர் வெளியே இருந்து 'ராமநாதா! ராமநாதா!' என்று கூப்பிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அப்படியானால்தான் ஸ்டோர் ரூமுக்குள்ளே போய் ஒரு சாமானை எடுத்து வருவான். இருட்டில் அத்தனை பயம்! ஆனால் பள்ளிக்கூடத்தில் எப்படி என்று நினைக்கிறாய்? ஸ்போர்ட்ஸில் அவனுக்குச் சாம்பியன் என்று பெயர். ஓட்டப் பந்தயத்தில் அவன்தான் எப்பொழுதும் முதல்! ஆனால் எங்கள் வீட்டில் அவர் பரிகாசம் பண்ணுவார், 'திருடன் வந்தால் உன் தம்பி நன்றாக ஓடுவான்' என்று."

இப்படி சாவித்திரி அம்மாள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, சந்திரிகா மனத்துக்குள் எண்ணினாள் :—

'இப்படிப் பட்ட சாது ராமநாதனா அன்று அத்தனை தைரியமாக மாடியிலே குதித்து வந்தார்!' என்று. அப்பொழுது சாவித்திரி அம்மாள் சொன்னாள்: "இதெல்லாம் அந்தக் காலம். இப்பொழுது அவன் தைரியம் யாருக்கு வரும்? உங்கள் வீட்டு மாடியில் இவனும் ஏறிக் குதிக்க வேண்டும் என்றால் எத்தனை துணிச்சல்!—நான் ஒன்று சொல்லுகிறேன் வித்தியாசமாக நினைத்துக் கொள்ள மாட்டாயே?" என்று கேட்டாள் சாவித்திரி.



"இல்லை" என்றாள் சந்திரிகா.

"இங்கே இவரிடம் அந்தச் சம்பவத்தைச் சொல்லிக் கொண்டிருந்தேன். அவர் என்ன சொன்னார் தெரியுமா?

"காற்றில் ஏறிஅவ் விண்ணையும் சாடுவோம்—
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே!"

என்று பாட ஆரம்பித்து விட்டார். எங்களவருக்கு ராமநாதனைப் பரிகாசம் பண்ணுவது என்றால் அத்தனை ஆனந்தம். அவனிடம் அத்தனை பிரியம் இவருக்கு!"

சாவித்திரி அம்மாள் இப்படி ஒரு பாரதியார் பாட்டைச் சொன்னது சந்திரிகாவுக்கு எப்படியோ இருந்தது. ஆனாலும் அம்மாளிடம் அவளுக்கு இருந்த அன்பு அதைச் சகித்துக் கொண்டது!

கார் பூங்காவிலே வந்து நின்றது. இருவரும் இறங்கிச் சென்று ஒரு சிமென்ட் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டார்கள்.

"சந்திரிகா! உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டதிலிருந்தே உன்னைப் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஒரு ஆசை உண்டு. தம்பி அத்தனை தூரம் சொன்னான் உன்னுடைய திறமையைப் பற்றி. ஆனால் இப்படி இங்கே நாம் சந்திக்கப் போகிறோம் என்று நான் நினைத்தே பார்த்ததில்லை!"

"அம்மா, உங்கள் தம்பி உங்களைப் பற்றித் தில்லிக்குப் போகுமுன் ஒருநாள் எங்கள் வீட்டிலே சொன்னதும், எனக்கு என்னவோ பம்பாய்க்கு வரப் போகிறதாகவும் உங்களோடு தங்கப் போகிறதாகவும் ஒரு எண்ணம் என் மனசில் உதித்தது. அதனால்தான் உங்களுடைய விலாசத்தைக் கூடக் குறித்து வைத்துக் கொண்டேன். ஆனால் தனியாக இங்கே வருவேன், இப்படி ஒரு அதிசயச் சந்திப்பு ஏற்படும் என்று நானும் கூட எண்ணிப் பார்க்கவில்லை!" என்றாள் சந்திரிகா.

"தனியாக என்றால்? ரவீந்திரனும் உன்னோடு வருவார் என்று எதிர் பார்த்தாய்.

அப்படித் தானே?'' என்று சாவித்திரி கேட்டாள்.


''ஆமாம்.ஆனால்...''

சந்திரிகா பெருமூச்சு விட்டாள். சாவித்திரி அம்மாள் கேட்டாள் :

''சந்திரிகா! ஏன் இப்படிப் பெருமூச்சு விடுகிறாய்? நீ இங்கே எப்படி வந்து சேர்ந்தாய் என்ற விஷயத்தை விவரமாகச் சொல்லுவாய் என்று அல்லவா நான் எதிர் பார்த்தேன்!''

சற்று மௌனம் நிலவியது. பிறகு சந்திரிகா பேச ஆரம்பித்தாள். தான் திருச்சிக்கு வந்து சேர்ந்தது, வளர்ந்தது, வாழ்ந்தது, வாழ நினைத்தது, பிறகு வாழ்வை முடிக்க நினைத்தது, எல்லாவற்றையும் சாவித்திரியிடம் சந்திரிகா மனம் விட்டுக் கூறினாள். ஒரே அநுதாபத்தோடும் சிரத்தையோடும் கேட்டுக் கொண்டே வந்தாள் சாவித்திரி. சந்திரிகா தன்னுடைய பேச்சை முடித்து விட்டுக் கைக் குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு விம்மியதும் சாவித்திரி அம்மாளுக்கு மிகவும் கஷ்டமாகப் போய் விட்டது.

''சந்திரிகா, உன்னுடைய கஷ்டம் எல்லாம் எனக்குப் புரிகிறது அம்மா. ஆனாலும் சொல்லுகிறேன், வாழ்க்கையில் நம்பிக்கை இழக்கக் கூடாது. உலகத்தில் பிறப்பதற்கு நமக்கு எப்படி உரிமை இல்லையோ, அப்படியே இறப்பதற்கும் உரிமை இல்லை. நம்மை இந்த உலகத்துக்கு அனுப்



''அம்மா, அதைச் சொல்லுவதற்குத் தான் இப்படி ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டேன். ரயில் புறப்படுவதற்கு முன்னால் பெருமூச்சு விடுகிறது அல்லவா? அப்படித்தான் இது!'' என்றாள் சந்திரிகா.

பிய சக்தியே, நம்மை இந்த உலகத்திலிருந்து அழைத்துக் கொள்ளவும் செய்யும். அதுவரை நாம்—''

''ஏன் அந்தச் சக்தியே நமக்குள்ளே புகுந்து கொண்டு நம்மை நாமே கொன்று முடித்துக் கொள்ளும்படி செய்யக் கூடாதா?

மரணம் என்றால் நோயினால் ஏற்படுவது ஒன்றுதானா?"

எல்லையற்ற விரக்தியினால் இப்படி ஒரு கேள்வி போட்டுக் கொண்டே சந்திரிகா மீண்டும் கைக் குட்டைக்குள்ளே முகத்தை மறைத்துக் கொண்டு பொருமினாள்.

"அட பெண்ணே! இப்படி அசடு மாதிரிப் பேசலாமா? ஒன்று சொல்கிறேன், கேள். நமக்குத் தோன்றியதை யெல்லாம் செய்து விட்டு, இதுவும் பரம் பொருள் எனக்குள்ளே இருந்து கொண்டு செய்கிற காரியந்தான் என்று சொல்வது பிசகு. நம்மைப் படைத்த கடவுள் நமக்குள் மனம் என்ற ஒரு சக்தியை வைத்து அனுப்பி யிருக்கிறான். ஆனால் இந்த மனம் இருக்கிறதே இதை இரண்டு சக்திகள் பிடித்து ஆட்டுகின்றன. ஒன்று நல்ல புத்தியைக் கொடுக்கிற சக்தி. மற்றொன்று தவறான காரியங்களைச் செய்யத் தூண்டுகிற பிசாசு. இந்த இரண்டுக்கும் நடக்கிற போராட்டம்தான் வாழ்க்கை. இந்தப் போராட்டத்தை அறிவாளிகள் வேடிக்கையாகக் கருதி, மேலே தாமரை இலைத் தண்ணீரைப் போல் நின்று பார்த்து ரஸிப்பார்கள். நம்மைப் போன்ற பிறவிகளோ இந்தப் போரிலே கலந்து கொண்டு அவதிப்படுகிறோம். கிறிஸ்தவ வேதத்தில் இந்த நன்மை தீமைப்போராட்டத்தைப் பற்றி மிக நன்றாகச் சொல்லி யிருக்கிறார்கள். எங்களவர் சொல்லிக் கேட்க வேண்டும். இவருக்கு பைபிள் என்றால் உயிர். திருச்சியில் ஜோசப் கல்லூரியில் படித்த போது இவர் எங்கே பாதிரியாகப் போய் விடுவாரோ என்று பயந்துதான் எங்கள் மாமனார் சிறு வயதிலேயே என்னைப் பிடித்து அவருடைய காலிலே கட்டி விட்டார் என்று எங்களவர் அடிக்கடி சொல்லுவார்!"

இப்படிச் சொல்லிக் கொண்டே சாவித்திரி அம்மாள் சிரித்தாள். சந்திரிகாவுக்கும் சிரிப்பு வந்து விட்டது.

"அம்மாடி! ஒரு மட்டும் சிரித்தாயே! இப்பொழுதுதான் அழகாக இருக்கிறது. இந்தா பார், சந்திரிகா, உன்னுடைய முகத்துக்கு அந்தச் சிரிப்பு எத்தனை அழகாக இருக்கிறது தெரியுமா? அப்படியே சந்திரன் உதித்து வந்த மாதிரி இருக்கிறது. எந்த அதிர்ஷ்டசாலி இந்த முகத்துக்குத் தவம் செய்திருக்கிறானோ!"

இப்படிச் சொல்லிக் கொண்டே சாவித்திரி அம்மாள் சந்திரிகாவின் முகத்தைப் பார்த்தாள். அந்த முகத்திலே சற்று நேரத்துக்கு முன்பு உதித்து வந்த சந்திரன் இப்பொழுது இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பூரணமாக அஸ்தமித்து விட்டிருந்ததைக் கண்டாள். ஆனாலும் பேச்சை நிறுத்த வில்லை சாவித்திரி.

"சந்திரிகா, உன்னை எனக்கு உண்மையாகவே பிடித்துப் போய் விட்டது! ஆகையினால் உன்னிடம் என்ன வேண்டுமானாலும் கேட்பேன். பேசுவேன். நீ கோபப்பட மாட்டாயே!"

"அம்மா! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். உங்களிடம் நான் கோபப்பட்டால் அதைப்போலப் பாபம் வேறில்லை. என்ன பாபத்தைச் செய்தேனோ, இப்படி ஆயிற்று என் வாழ்க்கை. இனியும்—"

"இப்பொழுது என்ன ஆயிற்றாம் உன் வாழ்க்கை? சந்திரிகா, நாளைக்கு உன்னை எங்கள் சேவா சங்கத்துக்கு அழைத்துச் செல்கிறேன். அங்கே பார் எத்தனை திக்கற்ற பெண்கள், வாழ்க்கையில் புதிய நம்பிக்கை பெற்றவர்களாய் வாழ்கிறார்கள் என்று. உலகம் தெரியாத பெண்ணாக இருக்கிறாயே நீ!"

ஸிமெண்ட் பெஞ்சில் சற்று நேரம் மீண்டும் மௌனம் நிலவியது. பிறகு சாவித்திரி அம்மாளே பேச ஆரம்பித்தாள்.

"சந்திரிகா, உன்னைப் பற்றி எல்லா விவரங்களும் சொன்னாய். ஆனாலும் ஒரு சிறு சந்தேகத்தை உன்னிடம் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்ளலாமா?"

"அம்மா! உங்களுக்குச் சந்தேகம் ஏற்படும்படி நான் என்ன சொன்னேன் என்று தெரிய வில்லை. ஆனாலும் கேளுங்கள். அதற்குப் பதில் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை!"

இப்படிச் சந்திரிகா சொன்னதும், சாவித்திரி அம்மாள் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தாள். தான் கேட்க நினைத்த கேள்வியை எப்படிக் கேட்பது என்று மனத்துக்குள்ளே பல முறை ஒத்திகை பார்த்துக் கொண்டாள். பிறகு கேட்டாள்:

"ரவீந்திரன் ரொம்ப நல்ல மனிதர் என்று தம்பி அடிக்கடி சொல்லுவான். நீயும் ரொம்ப நல்ல மாதிரி என்பான். என்னுடைய அபிப்பிராயமும் அதுதான். ஆனால் அதே சமயம் கல்யாணியும் நல்லவள்தான். அப்படி யிருக்கும் போது காரணம் இல்லாமல் ஏன் இத்தனை குழப்பங்கள் ஏற்பட்டன?"

வார்த்தைகளைத் தன்னுடைய வழக்கத்துக்கு மாறாக மிகவும் நிதானத்தோடு ஒவ்வொன்றாகச் சேர்த்து மெதுவாகக் கேட்டாள் சாவித்திரி அம்மாள். ஆனால் சந்திரிகா பளிச்சென்று பதில் சொன்னாள்.

"ஏன் இத்தனை தூரம் நீட்டி வளைக்கிறீர்கள்? அவருக்கும் எனக்கும் உள்ள தொடர்பு என்ன என்று நேராகவே கேட்கலாமே! ஏன் தயங்குகிறீர்கள், உங்கள் வழக்கத்துக்கு மாறாக!"

இப்படிச் சொல்லி விட்டுச் சந்திரிகா ஊக்கத்தோடு பேச ஆரம்பித்தாள்.

"அம்மா! நீங்கள் என்னைவிட வயதானவர். அநுபவசாலி. எதையும் கிரகிக்கும் தன்மை உங்களுக்கு உண்டு. அதனால் நான் சொல்வதை அநுதாபத்தோடு புரிந்து கொள்வீர்கள் என்று நினைக்கிறேன். நான் சொல்லப் போவது அப்பட்டமாக இருக்க

லாம். நீங்கள் மன்னித்து விடவேண்டும். எனக்கு அதிகப் படிப்பு இல்லை. என்னுடைய படிப்பு எல்லாம் ஆட்டமும் பாட்டும்தான்!''

"நன்றாயிருக்கிறது நீ சொல்வது! சங்கீதத்தை விட மேலான படிப்பு வேறு என்ன இருக்கிறது உலகத்தில். ஒன்று சொல்கிறேன் கேள். எங்களவர் அடிக்கடி சொல்லுவார். எந்த சங்கீத வித்வானாவது உண்மையிலேயே சங்கீத அநுபவம் உள்ளவனா என்று பார்க்க வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டுமாம் தெரியுமோ? அந்த வித்வானோடு நாலு வார்த்தை பேசிப் பார்க்க வேண்டுமாம். அந்த நாலு வார்த்தையில் பண்பாடு இருந்தது என்றால், அவன் உண்மையிலேயே பெரிய வித்வான்தானாம். அந்த நாலு வார்த்தையும் கேவலமாக இருந்ததோ, அநுபவ சங்கீதமோ சங்கீத அநுபவமோ அவனிடம் கிடையாது. அவனுடைய வாய்ப்பாட்டெல்லாம் வாய்ப்பாட்டு இல்லை, வெறும் வாய்பாடு அரிச்சுவடிதானாம்! ஏதோ படித்ததை ஒப்பிக்கிற காரியந்தானாம். சங்கீதம் அவனுடைய இதயத்துக்குள்ளே போய் வேலை செய்ய வில்லை என்று அர்த்தம்! அதுதான் சொன்னேனே வாய்ப்பாட்டு வாய்பாடாகிறது! நடுவிலே அந்த "ப்" இல்லை!''

"அப்படியென்றால்?'' என்று திகைப்போடு கேட்டாள் சந்திரிகா.

"பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் சொல்லுகிற அரிச்சுவடிக் கணக்கு இருக்கிறதல்லவா, அதை வாய்பாடு என்றுதான் சொல்ல வேண்டும் என்று ஒரு தமிழாசிரியர் அந்தக்காலத்தில் சொல்லுவார். இந்தக் காலத்தில் யார் இலக்கணம் படிக்கிறார்கள். ஆசிரியர்களே படிப்பதில்லை! எல்லாரும் வாய்ப்பாடு என்று ஒரு "ப்'' போட்டுப் பேசுகிறார்கள்! அது தவறு. பார்த்தாயா, என்னுடைய வழக்கப்படி எங்கேயோ ஆரம்பித்த பேச்சை எங்கெங்கோ கொண்டு போய் விட்டேன். நான் என்ன கேட்டேன்? ஓ! ஆமாம். ஞாபகம் வந்து விட்டது. சங்கீதத்தை விடப் பெரிய படிப்பு என்ன இருக்கிறது. படிப்பில் எல்லாம் பண்பட்ட படிப்பு சங்கீதந்தான். அந்தப் படிப்பு உன் உள்ளத்திலும், உடம்பு முழுவதிலும், உன்னுடைய அங்கத்தின் ஒவ்வொரு அசைவிலும் நடனம் ஆடிப் பொங்கிக் கொண்டிருக்கிறது. உனக்கு இருக்கிற பண்பு வேறு யாருக்கு உண்டு. ஆகையினால் தைரியமாகச் சொல்லம்மா—''

"இல்லை. உண்மையில் எனக்கு இருக்கிற படிப்பைக் கொண்டு அந்த விஷயத்தைச் சொல்லத் தெரியவில்லை. வார்த்தைகளிலே அதை வர்ணிக்க வரவில்லை. என்ன செய்வேன். எங்கள் இருவருக்குள்ளும் உள்ள தொடர்பு அப்படிப்பட்டது. ஏதோ நாங்கள் இருவருமே ஒரு சமயம் எல்லையைக் கடந்து விடுவோமோ என்று அஞ்சியதுண்டு. எங்களுக்குள் அப்படி எல்லையைக் கடந்து சென்றது என்பது, கையைத் தொட்டு உதறியதோடு சரி. எங்கள் இருவருக்கும் மனசாட்சி ஒன்று இருக்கிறது அம்மா. அது எங்களைக் காப்பாற்றிற்று. கல்யாணி அம்மாளின் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள சந்தேகம் தவறு என்றாலும், அந்தச் சந்தேகத்துக்கும் ஒரு அர்த்தம், ஒரு நியாயம் இருக்கிறது அம்மா! உண்மையில் என் இதயத்துக்குள்ளுமே அப்படி ஒரு சந்தேகம் உண்டு, விபரீதம் இதுவரை நேராவிட்டாலும், என்றைக்காவது நேர்ந்து விடுமோ என்று! ஆனால் ஒன்று சொல்கிறேன் கேளுங்கள். அவர் என்னை எடுத்து வளர்த்த தகப்பன். எனக்குக் கலை புகட்டிய குருநாதன். என்னைப் பேணிப் பாதுகாக்கும் தலைவன். சரீர இச்சை என்று ஒன்று இல்லாத நிலையிலே காதல் என்று ஒன்று இருக்குமானால், அவரை என் உள்ளத்திலே என்றும் நிரந்தரமாக நிற்கும் காதலன் என்று கூடச் சொல்லுவேன். ஆனால் நிச்சயம், நிச்சயம், நிச்சயம், அவர் என்னுடைய கணவன் இல்லை. இருக்கவும் முடியாது. அது தவறு. அவர், அவர், அவர், கல்யாணியின் கணவன். கல்யாணியின் நாயகன். கல்யாணியின் புருஷன். எனக்கோ? எனக்கு அவர் தகப்பன், குரு, தலைவன், காதலன், என்னுடைய தெய்வம்! என்னுடைய கடவுள். என்னுடைய வழிபாட்டு மூர்த்தி!''

இப்படிச் சொல்லி விட்டு இதுவரை ஊக்கத்தோடு அடக்கி வைத்திருந்த கண்ணீரை இனிமேல் அடக்க முடியாதவளாக, அணையை உடைத்துக் கொண்டு வரும் வெள்ளத்தைப் போல் அப்படியே கொட்டினாள் சந்திரிகா. சாவித்திரி அம்மாள் அவளுக்கு அருகிலே நகர்ந்து உட்கார்ந்து கொண்டு ஒரு தாயின் அன்போடு, அவளுடைய கண்ணீரைத் துடைத்தாள்.

நீண்ட நேரம் மௌனம் நிலவியது. மாலைப் பொழுது கழிந்து இரவின் அரவணைப்பிலே பூங்காவின் மின்சாரக் குமிழ்கள் எல்லாம் பளிச்சிட்டன. மனிதர்கள் பிறரைக் கவனிக்காத முறையில் தங்கள் தங்கள் காரியத்திலே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள், அந்தப் பூங்காவிலே. வானத்தில் சந்திரன் எழுந்து வந்து கொண்டிருந்தான்.

"சந்திரிகா, உன்னுடைய மேனி பரிசுத்தமான மேனி, உன்னுடைய உள்ளம் பத்தரை மாற்றுத் தங்கம். அதில் சந்தேகமே இல்லை!'' என்றாள் சாவித்திரி.

"தயவு செய்து எனக்குச் சொல்லாதீர்கள் அந்தப் பெருமையை. அவருக்குச் சேர வேண்டிய பெருமை அது. என்னை வளர்த்த தகப்பன் என்றேனே, அந்தத் தகப்பனுக்குச் சேரவேண்டியது.''

இப்படிச் சொல்லி விட்டுச் சந்திரிகா கேட்டாள்: "ஏனம்மா, நீங்கள் நாலும் தெரிந்த அநுபவசாலி, எத்தனையோ பெண்

களைக் கை தூக்கி விட்ட புண்ணியவதி. உங்கள் சேவா சங்கத்திலும் எத்தனையோ பெண்களுடன் நிதமும் பழகிய அநுபவசாலி நீங்கள். உண்மையிலேயே சொல்லுங்கள், எனக்கும் அவருக்கும் உள்ள பாசத்தை எந்த வார்த்தையிலே சொல்வது? அது வெறும் அன்பா? இல்லை! தகப்பனுக்கும் மகளுக்கும் உள்ள பாசமா? இல்லை! குரு—சிஷ்ய பக்தியா? அப்படியும் சொல்லி நிறுத்தத் தோன்றவில்லை. பின் என்னதான் அது?"

"சந்திரிகா, இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது எளிதில்லை. நீ சொன்ன இத்தனை அன்பு வகைகளிலும் எதிலும் சேராத ஓர் அன்பு என்றுதான் இதைச் சொல்ல வேண்டும். யோசித்துப் பார்த்தால் நீ சொன்ன இத்தனை அன்பு வகைகளில் ஒவ்வொன்றிலும் கொஞ்சம் எடுத்துக் கலந்து சேர்த்த ஒரு, அதை எப்படிச் சொல்ல, ஒரு பஞ்சாம்ருதம் போன்ற கலவை என்று வைத்துக் கொள்ளலாமா? ஆனாலும் ஒன்று கேட்கிறேன். மனசை விட்டுப் பதில் சொல்வாயா?"

"அம்மா, பொதுவாகவே ஒரு பெண் இன்னொரு பெண்மணியோடு பேசும் போது தாராளமாகப் பேசுகிறது வழக்கம். உங்கள் சம்பந்தப்பட்ட வரையோ, எனக்கு ஒரு அன்னியரிடம் பேசுவதாகவே தோன்றவில்லை. இத்தனை சொன்னேனே, கூச்சமே எனக்கு ஏற்படவில்லை. இனியும் என்ன கேட்டாலும் சொல்லுவேன். அப்படிச் சொன்னால்தான், பெருமூச்சு விட்டதும் மனத்திலே ஒரு நிம்மதி ஏற்படுகிறதே அப்படியிருக்கிறது எனக்கு!"

"வா! நேரமாகிறது. காரில் போய்க் கொண்டே பேசலாம்!" என்று சொல்லியவாறு அழைத்தாள் சாவித்திரி.

இருவரும் பூங்காவில் காரை நோக்கி நடந்தார்கள். நடக்கும் போதே, இருவரும் ஆழ்ந்த யோசனையில் இருந்தார்கள். சாவித்திரி யோசித்தாள், தான் கேட்க நினைக்கும் கேள்வியை எப்படிக் கேட்பது என்று! சந்திரிகா யோசித்தாள்: "இந்த அம்மாளை வெறும் படபடப்பு உள்ளவள் என்று மட்டும் நினைத்தேனே. எத்தனை நிதானம் மனசுக்குள்ளே இருக்கிறது. அப்படியென்றால் படபடப்பு என்பது ஒரு குணம் போலும்! அதைக் கொண்டு அறிவின் நிதானத்தைக் கணிக்கக் கூடாது போலும்! அவரும் படபடப்பு உள்ளவர் தான். அவருக்கு உள்ள அறிவு வேறு யாருக்கு உண்டு இந்த உலகில்!"

இருவரும் காரிலே ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். ஸ்டியரிங்கைப் பிடித்தவாறு யோசனையில் ஆழ்ந்தாள் சாவித்திரி.

"என்னம்மா! மறுபடியும் அடுத்த கேள்வியை யோசிக்கிறீர்களா? உங்களிடம் இத்தனை நிதானம் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை! தக்களி நூற்பது போல், நிதானமாக வட்டத்தைச் சுழல விட்டுக் கொண்டே பஞ்சிலிருந்து நூலை இழுத்து முறுக்குவார்களே, அப்படியல்லவா என்னிடம் கேள்வி போட்டு லாகவமாக இழுத்து முறுக்குகிறீர்கள்!"

"அப்படியில்லையம்மா. உன்னுடைய இதயம் பஞ்சு போன்று மென்மையானது. பஞ்சுபோல பரிசுத்தமானது. அதைப் புரிந்து கொண்டு விட்டேன். என்னால் உனக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமா என்ற யோசனையினால்தான் இத்தனையும் கேட்கிறேன். வித்தியாசமாக நினைத்துக் கொள்ளாதே. உண்மையில் நீ சொன்னதுபோல் நான் தக்களி நூற்கிறதாகவே வைத்துக் கொண்டாலும், மென்மையான பஞ்சை நூலாகத் திரித்து அதற்கு வலிமையும் உறுதியும் ஏற்றிவிட என்னால் முடிந்தால் அதுவே எனக்குத் திருப்தி!"

இப்படிச் சாவித்திரி அம்மாள் சொன்னது சந்திரிகாவின் இதயத்துக்கு மிகவும் உகப்பாக இருந்தது. சொன்னாள்:—

"தக்களி என்ன! ராட்டினத்திலே போட்டு வேண்டுமானாலும் சுற்றுங்கள்!" சாவித்திரி கேட்டாள்:

"சந்திரிகா, ஒன்று கேட்கிறேன். நிதானித்துப் பதில் சொல்லு. ரவீந்திரனோடு இத்தனை ஆண்டுகள் இவ்வளவு பாசத்துடன் நெருங்கிப் பழகி விட்டாயே, இன்னமும் உன் உள்ளத்தில்கண்ணுக்குத்தெரியாத இனந்தெரியாத ஏதோ ஒரு பொருளை நாடுகிற ஒரு நாட்டம், ஓர் ஏக்கம் இருக்கிறதா? உன்னுடைய இதய மாளிகையில் ஏதோ ஓர் அறை வெறிச்சென்று, காலியாக இருக்கிறதா? மூன்று சக்கர சைகிள் வண்டியில் பின் இரண்டு சக்கரங்களைத் தவிர முன்னால் ஒரு சக்கரம் இருக்குமே, அந்த முன்—சக்கரம் இல்லையென்றால் அந்த சைகிள் எப்படி இருக்கும்? அப்படியிருக்கிறதா உன்னுடைய மனம்?"

"அம்மா, நீங்கள் மறுபடியும் சுற்றி வளைக்கிறீர்களே!"

"சந்திரிகா! நன்றாக ஆராய்ந்து பார்த்துச் சொல். வாழ்க்கையில் இதுவரை நீ வாழ்ந்து வந்துள்ள விதமே உனக்குப் பூரண திருப்தி தருகிறதா? ரவீந்திரனிடம் நீ கொண்டுள்ள பாசத்தினாலேயே உன் இதயம் பூரணம் அடைந்து விட்டதா? அல்லது உன்னை அன்போடு அரவணைக்க, உன் கரு நீலக் கேசத்தை வருட, உன் கன்னத்தைக் கிள்ளிவிட, உன் கூந்தலைப் பிடித்து இழுக்க, ஒரு கையை நாடுகிறதா உன் மனம்? உன்னோடு கொஞ்சும் மொழிகள் பேசுவதற்கும், உன்னைக் 'கண்ணே' என்று அழைத்து நேசம் புரிவதற்கும் ஓர் இன்பக் குரலுக்காக உன் செவி என்றுமே ஏங்கியதில்லையா? மனத்தை மறைக்காமல் என்னிடம் சொல்லம்மா!" என்று கேட்டாள் சாவித்திரி. (தொடரும்)

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor: Mi. Pa. Somasundaram.


"இந்த அழகு தரும் சோப் தனிவிதமானது"
புதியது!
நறுமணமுள்ளது!
ப்ரீஸ்
BREEZE
TOILET SOAP
"ஆக்டமர் கலந்துள்ளது"
* உடலிலுண்டாகும் துர்கந்தத்தை நீக்குகிறது
உங்களை புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது!
* சருமத்திலுள்ள கிருமிகளை கொல்லுகிறது
சருமத்தை ஆரோக்கியத்துடனிருக்க பாதுகாப்பளிக்கிறது!
ஆக்டமர் (பைதியோனல்) மான்ஸான்டோவின் புதுமையான பாக்டீரியோஸ்டாட். அது கிருமிகளை கொல்லக் கூடிய சிறந்த சக்தியை உடையதாயிருந்தாலும், சருமத்திற்கு மென்மையைத் தரக்கூடிய ரசாயனப் பொருள்.
விலை 8 அணாதான்
உள்ளூர் வரிகள் நீங்கலாக
ப்ரீஸ்-ஆக்டமர் கலந்த அழகு தரும் சோப்
BZ. 1-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



